# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-19 Issue-2 பிப்ரவரி-2026 ஷாபான்/ரமழான்-1447


• ரமழானை வரவேற்போம்.!



## வரலாற்றில் வைக்கம் & தாஃவா

## 2025 கிருஸ்துமஸ்!

பிரதமர் மோடியின் “மத நல்லிணக்கம்”

பாசிஸ்டுகளின் “இந்து ராஷ்டிரம்”



மால்கம்-X மாதம்

# வைகறை வெளிச்சம்

பிப்ரவரி-2026 | ஷாபான்/ரமழான்-1447

வரலாற்றுத் தடத்தில்
இஸ்லாமியப் பார்வையில்
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்
படியுங்கள் பரப்புங்கள்
பாதுகாத்து வையுங்கள்

- தனிஇதழ் - ரூ. 40
- ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
- வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps

மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!





46ஆம் ஆண்டில் தாஃவா - 4
ரமழானை வரவேற்போம்.! - 11
ஆதிதிராவிடர்களின் ஆதி மார்க்கம் இஸ்லாம் - 12
தாஃவா எப்படி? - 17
தமிழகமும் தாஃவாவும் - 18
மதமாற்றத் தடைச் சட்டம் - 21
பாசிசத்திற்கு எதிரான சட்ட ரீதியான போர் - 25
அன்பகம் - 27
வக்பை இல்லாமலாக்கும் வக்பு திருத்தச் சட்டம் - 29
தி.லஜபதிராய் - 44
பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 45
மச்சம் - 50
மருத்துவம் - 52
சிலுவைப் போர் 2.0 - 54
மதமாற்றம் அபாயம் அல்ல; மனிதகுல 'அபயம்'! - 56


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# 46 ஆம் ஆண்டில் தாஃவா



## அறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் நம்மிடம் ஒப்படைத்த இலட்சியம்

அன்பார்ந்த வாசகர்களே!,

46 ஆண்டுகளாக நாம் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பெரும் பணியை தொடர்ந்து வருகின்றோம். அத்தனை தடைகளையும் கடந்து, அல்லாஹ்வின் மாபெரும் கருணையினால் அதில் நாம் நிலைத்து நிற்கின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

நாள்கள் நகர, நகர தாஃவாவுக்கான களம் விரிவடைந்து வருகின்றது. இதனை சரியாகப் பயன்படுத்தி வருகின்றோம்.

அல்ஹம்துலில்லாஹ்.

பல புதிய உத்திகள், பல புதிய அணுகுமுறை இவற்றின் வழி இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதை விரிவுபடுத்தி உள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த பணிகளை பற்றிய ஒரு வருட பார்வை சுருக்கமாக இங்கே தந்துள்ளோம்.

இந்தப் பணிகளை சமுதாயத்தின் சார்பிலேயே நிறைவேற்றி வருகின்றோம். இதற்காக நிதியையும் சமுதாயத்திடமிருந்தே பெற்று வருகின்றோம். இந்த வகையில் உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**இந்தப் பணிகள் தொடரவும், இன்னும் பல புதியப் பணிகளை தொடங்கவும், உங்கள் நிதி உதவிகளை தாராளமாகத் தந்து உதவுங்கள். அல்லாஹ்விடம் அளவில்லா கூலியைப் பெறுங்கள்.**

செக், டி.டி.அனுப்புவோர் : **DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்**
52/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

Please Draw your Cheques / DD in Favour of **DARUL ISLAM FOUNDATION TRUST**
and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.

VAIGARAI VELICHAM
62889509

கனரா வங்கி கிளைகளில் எங்கிருந்து வேண்டுமானாலும் நமது டிரஸ்ட் அக்கவுண்டில் நேரடியாக தங்களது நிதி உதவிகளை செலுத்தலாம்.

G Pay 81481 29887

**CANARA BANK, ST.MARY'S ROAD BRANCH, CHENNAI**
**SB. A/C. 1287101017301 IFSC CODE : CNRB0001287**

**தொடர்புக்கு : 81908 10751, 74012 13394**

# வரலாற்றில் வைக்கம்



**வைக்கம் சென்றோம்
பின்வரும்
உண்மைகளைக் கண்டோம்.
அல்ஹம்துலில்லாஹ்.**

1 தந்தை பெரியாரின் பெயர் அங்கு வாழும் இன்றைய இளைய தலைமுறையினரிடம், பெரிதாகப் பரவி இருந்தது.

வைக்கம் போராட்ட வரலாற்றை நன்றா கவே தெரிந்து வைத்திருந்தனர், அவர்கள்.

2 வைக்கத்தில் பெரியார் வெற்றி விழா கொண்டாடிய இடத்தில் தான் பெரியதொரு காட்சியகம் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

3 52 பேர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதும் இதே இடத்தில் வைத்துத்தான். ஆனால் அது குறித்த எந்தக் குறிப்பும் அங்கில்லை. இந்தத் தகவல் இன இழிவு ஒழிய இஸ்லாம் ஒன்றே நன் மருந்து என்று 1947இல் திராவிடக் கழகம் வெளியிட்ட நூலில் இடம் பெற்றிருக்கின்றது.

4 தெருவில் நடக்கும் உரிமைக் கேட்டுப் போராட்டம் நடந்த தெருவின் முனை இன்னும் அரசால் கையகப்படுத்தப்படவில்லை. அதற்கான பூர்வாங்க வேலைகள் நடந்து வருகின்றன.

பெரியார் சிறை வைக்கப்பட்ட அருவிக் குத்தி இடமும் இன்னும் கையகப்படுத்தப்பட வில்லை. அதற்கான பூர்வாங்க நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அங்குள்ள பணியாளர்கள் வழி அறிந்தோம். திருவனந்த புரம் சிறையும் முக்கியம். அங்குதான் பெரியார் கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார். அங்கும் ஓர் வரலாற்றுத் தடம் அமைக்கப்பட வேண்டும்.

5 இப்போது அமைக்கப்பட்டுள்ள அருங் காட்சியகம் ஓர் அழகிய உருவாக்கம். வரலாற்றுத் தடம்.

6 மாலையில் காணொலி ஒன்று திரையிடப் படுகின்றது. அது வைக்கம் போராட்டம் குறித்த வரலாற்றை அப்படியே மக்கள் மனதில் பதிய வைக்கப்போதுமானதாகும். குழந்தைகள் பூங்கா, செய்தியை மழலைகள் மனதில் பதிய வைத்துவிடுகின்றது.

7 வெற்றி விழா அரங்குக்கு எதிரேதான் திருமதி ஜானகி எம்.ஜி.ஆர். வீடு இருக் கின்றது. எம்.ஜி.ஆர். ஜானகி சிலையும் அங்கே சிலையாக நிற்கின்றார்கள்.




8 வைக்கம் போராட்டத்தில் பெரியார் அவர்கள் கலந்துகொண்டதும், அதில் அவர் பெற்ற வெற்றியும், இன்றைய நாள்களில் பெரிய அளவில், விமர்சனங்களுக்கு உட்படுத் தப்பட்டு வருகின்றன.

9 இந்துத்துவாவிற்கு விலைபோனவர்களே இதைச் செய்கின்றார்கள். ஆனால் பெரியார் அதில் வெற்றி பெற்றார். தனக்கே உரிய பாணியில்.

10 இதில் மிக எளிதாக மறைக்கப்பட்டு வரும் உண்மை என்னவெனில், வைக்கம் போராட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் தலையீடும் தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பெரியாரின் தலையீடும்தான் வைக்கம் போராட்டத்தை கேரளத்து சமூக போராளிகள் தொடங்கினார்கள்.

11 போராட்டத்தில் முழுமையாக காங்கிரஸ் கட்சியின் கவனத்தை ஈர்க்க அரும்பாடு பட்டு தோற்றனர்.

12 காரணம் காந்திஜியும், இராஜாஜியும் தான். காந்திஜி போராட்டக்காரர்களை சமாதானப்படுத்தி நீத்துப்போகச் செய்ய முயற்சி செய்தார் காந்திஜி. கடைசிவரை வைக்கம் போராட்டத்திற்கு உடன்பாடான நிலையை எடுக்கவில்லை. இறுதியில் போராட்டம் பற்றி பொய்யையே பதிவு செய்தார்.

இராஜாஜியும் வைக்கம் போராட்ட கோரிக்கைகளை மறுத்து வந்தார். போராட்டத் திற்கு இராஜாஜியை அழைத்தவர்களை பைத்தியம் என்றழைத்தார்.

13 இந்நிலையில் காக்கிநாடா என்ற இடத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு சென்றிருந்த கேரளத்துக் காங்கிரசார், குறிப்பாக மாதவன் என்பவரும் சர்தார் கே.எம்.பணிக்கர் என்பவரும் “தீண்டத்தகாதவருக்காக, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிடம் “வைக்கம் பிரச்சனையில் தலையிடும்” வேண்டுகோள் என்றொரு ஆவணத்தை உருவாக்கி காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களுக்குக் கொடுத்தார்கள். அந்த ஆண்டு காங்கிரஸ் தலைவராக இருந்த மௌலானா முஹம்மத் அலீ (ஜவஹர்) அவர்களுக்கும் கொடுத்தார்கள். தனிப்பட்ட முறையில் அவரை சந்தித்து நிலவரத்தை விவரித்தார்கள்.

தீண்டத்தகாதவர்கள் விடுதலையில் முஸ்லிம்கள் முதல்நாள் தொட்டே அதிக அக்கறையுடையவர்களாக இருந்தார்கள். வரலாறு முழுவதும் இதைக் காணலாம்.

இதனால் தீண்டாமை ஒழிப்பு, வைக்கம் போராட்டம் இவற்றிற்கு ஆதரவாக காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம் எந்தச் சிரமுமின்றி நிறைவேற்றப்பட்டது.


இதன் வரலாறு இப்படிப் பதிவு செய்கின்றது.

“அத்துடன் (காங்கிரஸ்) தலைவருக்கு (மௌலானா முஹம்மத் அலீக்கு) அதில் (மனுவில்) அடங்கியுள்ள விவரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். தலைவர் மௌலானா முஹம்மத் அலீ, மாதவன் கூறியவற்றை எல்லாம் கருத்துடன் கேட்டுக் கொண்டிருந்ததனால், தீண்டாமை ஒழிப்பைப் பற்றி அவ்வாண்டில், தீர்மானத்தைக் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றுவது கடினமாக இல்லை.”

“இதையடுத்து 1924, பிப்ரவரி 16இல் கொல்லம் சாம்ராஜ்ய ஆசிரமத்தில் கூடிய கேரள காங்கிரசு தீண்டாமை ஒழிப்பு தீர்மானத்தை நிறைவேற்றி அறக்கிளர்ச்சிக்கு வழி வகுத்தது. வைக்கம் அதற்கான இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. 1924 மார்ச்சு 20இல் கிளர்ச்சித் தொடங்கிற்று.”


(ஆதாரம், வைக்கம் போராட்டம்,
கு.வெ.கி. ஆசான் பக்கம் 10.)


vaigarai velicham official



குலக் கல்வி முறையை ஒழித்து தமிழ்க் குலம் காத்த காவலர்கள் | പാരമ്പര്യ വിദ്യാഭ്യാസ രീതിയിൽ മാറ്റം വരുത്തിയ തന്തൈ പെരിയാറും, കാമരാജും | Thanthai Periyar and Kamarajar who abolished Hereditary Education Policy








தந்தை பெரியாருடன் பேரறிஞர் அண்ணாவும் ஆசிரியர் வீரமணியும் | മുത്തമിഴ് അറിഞ്ജർ കലൈഞ്ജർക്കൊപ്പം തന്തൈ പെരിയാർ | Thanthai Periyar with Arignar Anna and Asiriyar Veeramani




தந்தை பெரியாருடன் விடுதலை ஆசிரியர் வீரமணி | തന്തൈ പെരിയാർക്കൊപ്പം വിടുതലൈ പത്രാധിപർ വീരമണി | Thanthai Periyar with Viduthalai News Paper Editor Veeramani



சுதந்திரப் போர்த் தியாகி பெரியாருக்கு தாமிரப்பட்டயம். இதனை ஏந்தி வந்து | സ്വാതന്ത്ര്യ സമരപോരാളി എന്ന നിലയിൽ തന്തൈ പെരിയാർ | Thamira Pattayam awarded


தந்தை பெரியாருடன்
தமிழ்நாட்டின் முன்னாள்
முதலமைச்சர் எம்.ஜி.ஆர்
തന്തൈ പെരിയാർക്കൊപ്പം തമിഴ്നാട്
മുൻ മുഖ്യമന്ത്രി എം.ജി.രാമചന്ദ്രൻ
Thanthai Periyar with former
Chief Minister of Tamilnadu
M.G. Ramachandran


Thanthai Periyar with Dr. Kalaignar,
Makkal Thilagam M.G.R, N.V.Natarajan,
K.Rajaram and Asiriyar K.Veeramani
பிறந்த நாள் கேக் வெட்டும் பெருந்தகை
தந்தை பெரியார் - க.இராசாராம்
Birthday Celebration of
Thanthai Periyar with K. Rajaram
வைக்கம் வீரர்
தந்தை பெரியார்
Vaikom Veerar -
Thanthai Periyar
தந்தை பெரியார்
Thanthai Periyar
கொள்கை போருக்கு
அஞ்சாத வீரர்
Thanthai Periyar with the sword to
defeat Social Inequality
மாநாட்டு மேடையில் தந்தை பெரியார்





வைக்கம் கண்காட்சியில் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது, உடன் முஹம்மத் அலீ ஜின்னா

14 இந்நிலையில் வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட கேரளத்துக் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு விட்டார்கள். காந்தியார் உடன்பாடான நிலையை எடுக்காதது ஒரு முக்கியக் காரணம். இதனால் வைக்கம் போராட்டம் தோற்றுப்போகும் நிலையை எட்டியது.

15 அப்போது தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவராக இருந்தார்கள். அவர் திருச்சி, மதுரை பகுதிகளில் காங்கிரஸ் கட்சியை வளர்க்கும் ஆக்கப்பூர்வமான வேலைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வந்தார்கள்.

16 திருச்சி குளித்தலையில் காங்கிரஸ் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

17 இந்நிலையில் வைக்கம் போராட்டத்தில் கலந்துகொள்ள அழைத்து, பெரியாருக்கு கேரள மாநிலத்தைச் சார்ந்த வைக்கம் பேராட்ட வீரர்கள் அழைப்பு விடுத்தனர்.

18 அதே கடிதங்கள் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மௌலானா முஹம்மத் அலீ (ஜவஹர்) அவர்களுக்கும் சென்றன. அவர் தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர், தந்தை பெரியாரை வைக்கம் செல்ல உத்தரவிட்டார். பெரியார் அவர்கள் 13.04.1924இல் வைக்கம் சென்று சேர்ந்தார்கள்.

19 அதன்பின்னர்தான் வைக்கம் போராட்டம் சூடுபிடித்தது. உலகின் கவனத்தை ஈர்த்தது. வெற்றி என்ற பெயரில் முடிந்தது.

20 இதில் ஒரு கிருஸ்தவர் ஜார்ஜ் ஜோசப் என்பவர் அடிப்படையான பல முக்கிய அடிப்படை வேலைகளை செய்துள்ளார். அவருடைய அர்ப்பணிப்புகளை அவ்வளவு எளிதாக யாரும் மறைத்துவிட முடியவில்லை.

அதேபோல் காங்கிரஸ் கட்சியின் தலைவராக மௌலானா முஹம்மத் அலீ (ஜவஹர்) செய்த முக்கியத் திருப்பம் வரலாறு முழுவதும் மறைக்கப்பட்டே வருகின்றது ஓரிரு குறிப்புகளைத் தவிர.

21 அது காங்கிரஸ் கட்சியின் போக்கிலேயே முக்கியத் திருப்பமாக அமைந்தது.

அப்போது காங்கிரசில் பெரிய ஆதிக்கம் செலுத்திய காந்திஜியும், இராஜாஜியும் வைக்கம் போராட்டத்தை ஆதரிக்கவில்லை. உடன்படவில்லை என்பதும் வரலாற்றில் முழுமையாக பதிவாகி இருக்கின்றது.

காந்திஜி போராட்டத்தின் முக்கியக் கட்டத்தில், முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் கலந்துகொள்ளக் கூடாது என அறிவித்து வைக்கம் போராட்டத்திற்கு வகுப்புவாத சாயம் பூசினார்.

வைக்கம் போராட்டத்தைப் பற்றிய காந்திஜியின் கடைசிப் பொய். அது தெரு நுழைவுப் போராட்டம். ஆனால், காந்திஜி அது கோயில் நுழையும் போராட்டம் என்றார். போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், மன்னிப்புக் கேட்டதாக எழுதினார். அதில் ஜார்ஜ் ஜோசப்பும் கேட்டார் என பொய் சொன்னார். இதை அனைவரும் ஆணித்தரமாக எதிர்த்தார்கள். மறுத்தார்கள். ஜார்ஜ் ஜோசப் மறுத்ததோடு, காந்திஜியை கடுமையாக சாடினார்.




பரவி வருகின்றது. இந்தக் கொடுமைகளை சற்றும் இழைத்த மாதிரி இல்லை.

**24** இந்த நாள்களிலும், முன்னாள் ஜனாதிபதி கோயிலுக்குள் நுழைந்திட இயலவில்லை. தடுத்து நிறுத்தப்பட்டார், திருப்பி அனுப்பப்பட்டார். இது குன்றில் மேலிட்ட விளக்குபோல், தீண்டாமை எட்டி இருக்கும் சிகரத்தை நமக்குக் காட்டுகின்றது. அதுவும் இந்துத்துவ ஆட்சியில்.




வைக்கம் கண்காட்சியில் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது, உடன் அப்துல் பாசித், முஹம்மத் அலீ ஜின்னா

இது மௌலானா தலைவராக அகில இந்திய காங்கிரஸ்-இல் இல்லையெனில் வைக்கம் போராட்டம் நீத்துப்போயிருக்கும் என்ற உண்மையை பிரகடனப்படுத்தும்.

**22** தமிழகத்தில் கல்வியை பட்டித் தொட்டிகளுக்கெல்லாம் கொண்டு சென்ற காமராஜர் அவர்கள் ஒரு சமூகநீதிப் போராளி, அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது காமராஜர் அவர்கள் கால்நடையாகவே சென்று வைக்கம் போராட்டத்தில் கலந்துகொண்டார்கள் என்பதை அறிய முடிகின்றது. இந்தக் குறிப்பும், எங்கும் காணவில்லை. வைக்கத்திலிருக்கும் புகைப்படத்தைத் தவிர.

**23** வைக்கம் போராட்டம் 101 ஆண்டை தொடுகின்றது. பல சலுகைகளையும் உரிமைகளையும் தீண்டத்தகாத மக்கள் பெற்றிருக்கின்றார்கள். ஆனால் தீண்டாமைக் கொடுமைகள் எல்லா தளங்களிலும் வேரூன்றி

**25** வேங்கைவாசலில், தண்ணீர் தொட்டியில் மலங்கலந்த விவகாரம், இவையெல்லாம் தீண்டாமையின் பல்வேறு முகங்களையும் எடுத்துக் காட்டுகின்றன.

**26** ஆனால் இந்த இழிவுகளுக்கு ஒரே நிரந்தரத் தீர்வு இஸ்லாம்தான்.

ஆகவே, வைக்கம் போராட்டத்தை முன்னிறுத்தி 101ஆம் ஆண்டு நிகழ்வுகளைப் பார்த்தால், இன்றைக்கும் என்றைக்கும், இஸ்லாம் ஒன்றே இந்தியாவின் மிகப்பெரிய பிரச்சனையாகிய ஜாதி பிரச்சனையை அடியோடு அழிக்கும் என்பது தெளிவு.

இவையெல்லாம் நமது தாஃவா பணிகள் எவ்வளவு முக்கியமானது பளுவானது என்பனவற்றை எடுத்துச்சொல்லும்.

**- MGM**

வைக்கம் சென்ற குழு, அப்துல் பாசித்,
ஷமீம், முஹம்மத் அலீ ஜின்னா



vaigarai velicham official

# ரமழானை வரவேற்போம்.!



அல்லாஹு தன்னுடைய படைப்புகளில் ஒன்றுக்கு ஒன்றை மேன்மைப்படுத்தி வைத்துள்ளான். எண்ணிக்கை தெரியாத அளவிற்கு மலக்குமார்களை படைத்துள்ளான். அதில் ஒருசில மலக்குமார்களுக்கு பொறுப்புகளை கொடுத்து மேன்மைபடுத்தியுள்ளான். அர்ஷை சுமக்கின்ற மலக்குகள், ரூஹை எடுக்கின்ற மலக்குகள், மலக்குமார்களின் தலைவர் ஜிப்ரீல் (அலை) இப்படி எத்தனையோ மனிதர்களை படைத்த இறைவன் அதிலிருந்து ஒருசிலரை நபியாகவும், ஒரு சிலரை நபித் தோழர்களாகவும், ஒருசிலரை அறிஞர்களாகவும் மேன்மைப்படுத்தியுள்ளான். மக்கா, மதினா, ஜெருசலம், காஃபா, மஸ்ஜீதுன் நபவி, பைத்துல் முகத்திஸ் மற்ற எல்லா பள்ளி களிலும் தொழுவதைவிட இங்கு தொழுவது அதிக நன்மைகளைத் தரும். இன்னும் தஜ்ஜால் எல்லா இடங்களுக்கும் செல்வான். இந்த மூன்று இடங்களுக்குள் செல்ல முடியாது.

நாட்களில் ஏழு நாட்கள் இருந்தாலும், ஜூம்ஆவை சிறப்பித்துள்ளான். இந்த வரிசை யில் மாதங்களில் பன்னிரெண்டு மாதங்கள் இருந்தாலும் அல்லாஹ் ரமழான் மாதத்தை சிறப்பித்துள்ளான். எந்தளவிற்கு என்றால், மற்ற மாதங்களில் செய்கின்ற அமல்களுக்கு கிடைக் கின்ற நன்மைகளைவிட ரமழான் மாதத்தில் நாம் செய்கின்ற ஒவ்வொரு அமலுக்கும் அல்லாஹ் நன்மைகளை பலமடங்கு அதிகரித்து தருகின் றான். இந்த மாதத்தில் அல்லாஹ் ஓர் இரவை ஏற்படுத்தியுள்ளான் லைலத்துல் கத்ர். இந்த இரவை அடைந்தால் ஆயிரம் மாதங்கள் அமல்கள் செய்த நன்மையை அல்லாஹ் நமக்கு அளிக்கின்றான்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த மாதத்தில் வைக்கின்ற நோன்பிற்கு நானே கூலியாக இருக்கிறேன் என்று அல்லாஹ் கூறுகிறான். நோன்பாளிகளுக்காக அல்லாஹ் ரய்யான் என்ற சுவனத்தை ஏற்படுத்தியுள்ளான்.

அல்லாஹ் தன்னுடைய திருமறையாம் குர்ஆனில் இப்படி கூறுகிறான்:

“யாருடைய நன்மையின் எடைத்தட்டு கனமாக உள்ளதோ அவர் வெற்றி அடைந்து விடுவார். யாருடைய தீமையின் எடைத்தட்டு கனமாக உள்ளதோ அவர் நாசமடைவார்” என்கிறான்.

நாளை மறுமையில் மனிதர்கள் எல்லாரும் புலம்பக்கூடிய விஷயம் “நன்மையாகதான் இருக்கும் எனக்கு இவ்வளவு நன்மை இருந் திருந்தால் நரகத்திலிருந்து என்னை காப்பாற்றிக் கொள்வேன். எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால் உலகிற்கு சென்று என்னுடைய எல்லா சொத்துக் களையும் அல்லாஹ்வின் பாதையில் தர்மம் செய்வேன் என்று அழுது புலம்புவான்.

ஆனால் மறுமையில் நம்மால் எந்த நன்மை யையும் சம்பாதிக்க முடியாது. ஆகையால் அல்லாஹ் இந்த உலகில் நமக்கு அளித்த வாய்ப்பை நாம் வீணாக்கி விடக்கூடாது. அதிலும் நன்மைகளை அள்ளித் தருகின்ற மாதமான ரமழானை வீணடித்து விடக்கூடாது. ரமழானில் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் நாம் நன்மை களை சம்பாதிக்க இப்பொழுதே திட்டம் தீட்டிக் கொள்ள வேண்டும். இதனால்தான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நமக்கு இப்படி துஆவை கேட்க கற்றுத் தந்தார்கள். “யா அல்லாஹ் ரஜபிலும், ஷாபானிலும், பரக்கத் செய்வாயாக, ரமழானை முழுமையாக அடையக்கூடிய பாக்கியத்தை தந்தருள்வாயாக” என்றார்கள்.

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்:

“ஒருவன் இறை நம்பிக்கையுடனும் மறுமையில் நற்கூலியைப் பெறுகின்ற எண்ணத்துடனும் ரமழான் மாதத்தின் நோன்புகளை நோற்பாராயின் அவர் முன்னர் செய்த பாவங்களை அல்லாஹ் மன்னித்து விடுவான். ஒருவன் ரமழானின் இரவு களில் இறை நம்பிக்கையுடன் மறுமையின் நற்கூலியைப் பெற்றுக் கொள்ளும் எண்ணத் துடனும் தொழுவாராயின் அவர் முன்பு செய்த பாவங்களை அல்லாஹ் மன்னித்து விடுவான்”

(புகாரி)

நம்மை நரகத்திலிருந்து காப்பாற்ற நன்மை களை அதிகம் அதிகம் பெற்று சுவனத்தின் பக்கம் செல்ல இறைவனால் கண்ணியப்படுத்தப்பட்ட மாதம்தான் ரமழான். இந்த ரமழானை நல்ல முறையில் முழுமையாக பயன்படுத்தி வெற்றி அடையும் மக்களாக அல்லாஹ் நம்மை ஆக்கி அருள்புரிவானாக ஆமின். அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

# ஆதிதிராவிடர்களின் ஆதி மார்க்கம் இஸ்லாம்



ஆதம் (அலை) அவர்கள்தாம் முதல் மனிதர் முதல் நபி, அவர் பிறந்தது கடல் கோள்களுக்கு முன் லெமூரியா கண்டத்திலுள்ள இந்தியாவில்.

ஆதம் (அலை) அவர்களின் ஒரு மகன்தான் ஸீது (அலை). இதை வைத்தே சேது சமுத்திரம் என்ற பெயர் வந்தது.

ஆதி திராவிடர்களின் ஆதி மார்க்கம் இஸ்லாம்என பெரியாரும் உறுதி செய்துள்ளார். இதற்கு தந்தை பெரியார் பகுத்திறவுப் பூர்வமான காரணங்களைச்சொல்லி உள்ளார்கள்.

இன்னும் பல ஆய்வுகள் இதனைச் சுட்டிக் காட்டுகின்றன. சேது முதல் சிந்து வரை என்ற பயண ஆய்வுநூல் இதில் பல அடிப்படை தகவல்களை அள்ளித் தருகின்றது.

### பொன்னறிய ஆய்வு

பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாம் இந்தியாவிற்குள் வந்ததில், இஸ்லாத்தின் ஏகத்துவம் பல அழுத்தமான தாக்கங்களைத் தமிழ் இலக்கியத்திலும் ஏற்படுத்தியது. அவற்றுள் ஒன்றை, சென்னைப் பல்கலைக் கழகத்தின் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பெயரால் உள்ள ஆய்வு நாற்காலியில் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு ஆய்வுக் கட்டுரைகள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

அவற்றுள் ஒன்று, நீதி அரசர் காலம் சென்ற எஸ்.எம். இஸ்மாயீல் அவர்களால் படிக்கப் பட்டது. (அ) சமர்பிக்கப்பட்டது.

இன்னொன்று ஹாஜி எம்.எம்.சுலைமான் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் படிப்பினை தரும்பகுதிகள் பலப்பல. ஆய்வுக்குத் தேவையான அடிப்படைகளைத் தருகின்றது. அதில் அல்ஹாஜ் எஸ்.எம். சுலைமான் IAS அவர்கள் சமர்ப்பித்த ஆய்வு ஒன்றில் இறைவனுக்கு இணை வைத்தலை நீக்கி. ஏகத்துவத்தை நிலை நிறுத்தும் சிவவாக்கியார் பாடலொன்று இப்படிஇடம் பெறுகின்றது.

“நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியேசுற்றி வந்து மொணமொண என்று சொல்லு மந்திரம் ஏதடா? நட்ட கல்லும் பேசுமோ? நாதன் உள் இருக்கையில்சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?”

இதனை கலைஞர் அவர்களும் பராசக்தி படத்தில் குறிப்பிட்டிருப்பார். அஃது திராவிட அமைப்புக்குத் தலையாய் அமைந்த பாடல்.

### இஸ்லாமே தீர்வு! தமிழக தலைவர்கள்!

திராவிடம், தமிழகம் இஸ்லாம் எனப் பின்னிப் பிணைந்தவை.

திராவிடத் தலைவர்கள் அனைவரும் தீண்டாமைக்கெதிராகவும், ஜாதிய அடுக்கு முறைக்கெதிராகவும் போராடியவர்கள்தாம்.

தமிழகத்தில் விடுதலைப் போர் என்பது தீண்டாமைக்கெதிராகவும் ஜாதிய அடுக்கு முறைக்கெதிராக நடத்தப்பட்டு வரும் போர்தான்.

இந்த வகையில் திராவிடத் தலைவர்கள் அனைவரும், தீண்டாமைக்கு நிரந்தரத் தீர்வு, இஸ்லாம்தான் என்பதில் மிகவும் நேர்மையாக நடந்துகொண்டார்கள். அதையே பிரச்சாரமும் செய்தார்கள்.

திராவிட இயக்கத்தின் தளகர்த்தராகத் திகழ்ந்தவர் கூறியவை.

### இஸ்லாத்தை ஏற்பதால் என்ன பயன்? தந்தை பெரியார்-சீலையம்பட்டி

அவர் தன் வாழ்நாள் முழுவதும் இதையே செய்தார். சீலையம்பட்டியில் 69 பேர் இஸ்லாத்தில் இணைந்தபோது பெரியார்

பேசியது, விடுதலை 20.12.1970

சீலையம்பட்டியில் ஆதிதிராவிடர்கள் 69 பேர் முகமதியரான விஷயத்தைப் பற்றி எனது மகிழ்ச்சியைத் தெரிவிக்க சில வார்த்தைகள் பேசப்போகிறேன். இந்து மதம் என்பதிலிருந்து மதம் மாறினதாகச் சொல்லப்படும் 69 ஆதி திராவிடர்களும் பிறவியின் காரணமாக, அவர்களுக்குள்ள இழிவிலிருந்து விடுதலை அடைந்ததோடு, பாமரத் தன்மையும் காட்டு மிராண்டித்தனமுமான மிருகப் பிராயத் திலிருந்தும் அறியாமையிலிருந்தும் சிறிது விடுதலை அடைத்தவர்களாளார்கள் என்பதற் காகவே மகிழ்ச்சியடைகிறேன்.

மேற்கண்ட 69 பேர்களுக்கும் தீண்டாமை என்பது போய்விட்டது. இனி ஒருவன் அவர் களைப் பறையன், சக்கிலி, சண்டாளன் என்று இழிவாய் கூறமுடியாது அவர்களும் மற்றவர் களை 'சாமி சாமி, புத்தி' எனக்கூறிக் கொண்டு தூர எட்டி நிற்க வேண்டியதில்லை. ஊரை விட்டு வெளியில் குடியிருக்க வேண்டியதில்லை. குளிக்கத் தண்ணீரில்லாமல் திண்டாட வேண்டியதில்லை."



வண்ணான், நாவிதன் இல்லாமல் அழுக்குத் துணியுடனும், கரடி போல மயிர் வளர்த்துக் கொண்டும் பார்ப்பவர்களுக்கு அசிங்கமாகத் தோன்றும்படி வாழ வேண்டியதில்லை. இனி எந்தப் பொதுத் தெருவிலும் நடக்கலாம். எந்த வேலைக்கும் போகலாம்; யாருடனும் போட்டி போடலாம். அரசியலில் சமபங்கு பெறலாம். மதசம்பந்தமாகவும் இனி அவர்கள் தங்கள் கோவிலுக்குள் போக தாராள உரிமை உண்டு, வேதம் படிக்க உரிமை உண்டு. இவ்வளவையும் விட இனி அவர்கள் கல்லையும். செம்பையும், கூடையையும், விளக்குமாற்றையும் கடவுள் என்று வணங்க வேண்டியதில்லை.

> திராவிடத் தலைவர்கள் அத்தனை பேரும் இஸ்லாத்தை பரிந்துரைத்தனர். இஸ்லாத்தை ஏற்று விடுதலையடைந்தவர்களை பாராட்டினார்கள்.

மற்றும் இவர்கள் பொருளாதாரக் கஷ்டத் திலும், அறிவு வளர்ச்சித் தடையிலும், சமூக இழிவிலும், சுயமரியாதைக் குறையிலும் அரசியல் பங்கு குறைவிலுமிருந்தும் ஒருவாறு விடுதலை அடைந்துவிட்டார்கள் என்பது போன்றவைகளை நினைக்கும்போது மகிழ்ச்சி யடையாமல் இருக்க முடியவில்லை. ஏனெனில், தீண்டாமை, நெருங்காமை, பார்க்காமை, பேசாமை முதலிய மதத்தின் போரால்-வேத சாஸ்திரங்கனின் பேரால் உள்ளவை எல்லாம் அடியோடு நீங்கவேண்டும் என்கிற தீவிர ஆசையே என்னை இப்படி நினைக்கச் செய்கின்றது.

ஆகையால், முகமதிய மதத்தைத் தழுவுவ தனால்தான், தீண்டாதவர்களுக்கு இது சமயம், சீக்கிரத்தில் உடனேயே சமூக சமத்துவத்தை அளிக்க முடியும் என்று கருதுகிறேன்.

### மனிதனை மனிதாக மாற்றும் இஸ்லாம்

தமிழ்கூறும் நல்லுலகமெல்லாம் ஒரு சிந்தனை புரட்சியை ஏற்படுத்தியவர். அவர் இஸ்லாத்தின் இளமைப் பருவத்திலேயே கற்றவர்.

### 1957ஆம் ஆண்டில் அக்டோபர் 7ஆம் நாள் பேறறிஞர் அண்ணா அவர்கள் கடற்கரையில் ஆற்றிய உரையில் இப்படிக் கூறினார்

இஸ்லாம் என்பது ஒரு மதமல்ல... அது ஒரு சிறந்த மார்க்கம், இஸ்லாமிய மார்க்கத்தை உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் கொண்டாடு கிறார்கள். இஸ்லாத்தின் மார்க்கம்

சிறந்ததொரு மார்க்கமாக இருப்பதால், உலகில் உள்ள பெரும் குணவான்கள் இஸ்லாத்தை ஒரு மதமாகக் கொள்ளாமல்.



ஒரு மார்க்கமாகவே கருதுகின்றனர். இஸ்லாமிய மார்க்கம் என சிறந்ததெனப் போற்றப்படுகிற தென்றா மனிதனுக்கு என்ன என்ன ஐயப் பாடுகள் தோன்றுகின்றனவோ, இவற்றையெல்லாம் நீக்கக் கூடிய வகையில் அதில் நல்ல கொள்கைகள் அதில் இருக்கின்றன.

நபிகள்நாயகத்தின் போதனைகளில் ஒன்று... ஆண்டவனுக்கு இணை வைத்தல் ஆகாது என்பதாகும். இந்தப் போதனையை நான் சற்று கொஞ்சம் நெஞ்சுருக எண்ணி பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். ஏன் நான் இந்தப் போதனையைச் சிறப்பாகக் கூறுகிறேன் என்றால் மனிதனை சிந்திக்கத் தூண்டுகிறது. ஆண்டவனுக்கு இணை வைத்தல் ஆகாது". "ஏன் இணை வைத்தல் 'ஆகாது?" என்றெல்லாம் சிந்தனைக்கு வேலை கொடுத்து ஆண்டவன் இப்படியிருக்கக்கூடும் என்று சிந்தனை முடிவடைவதில்லை. எனவேதான், பழந்தமிழ் மக்கள் கண்டிலர் விண்டிலா விண்டவர் பார்த்தவர் சொன்னதில்லை சொன்னவர் பார்த்ததில்லை என்று கூறியிருக்கிறார்கள்,

கடவுள் தன்மையின் தத்துவமே இதுதான். ஆண்டவனுக்கு இணை வைத்தால்-ஆண்டவனுக்கு முன் ஒருவரை வேண்டும். அந்த ஒருவர் யாராக இருக்கவேண்டும்? யாருக்கு தெரியும்? அதனால்தான் ஆண்டவனுக்கு இணை வைத்தல் ஆகாது ஆகாது என்ற போதனையை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். மற்ற மார்க்கத்தில் இணை வைத்துக் கூறிய காரணத்தால்தான் எங்களைப் போன்றவர்களுக்கு ஏராளமான மாச்சரியங்கள் தோன்றின இஸ்லாத்தில் எனக்கு மற்றும் ஒன்று பிடித்திருக்கிறது.

இஸ்லாத்தைப் பற்றியும் அதன் இன்னிலக்கியமான இறை மறை திருக்குர்ஆனைப்பற்றியும் நான் அறித்து கொள்ளும் வாய்ப்பு என் இளமைக் காலத்திலேயே என் இதயத்தில் இடம் பிடித்துவிட்டது, திருக்குறளை நான் 'தெரிந்து

அது மனிதனை மனிதனாக ஆக்குவது மனிதனை முழு மனிதனாக ஆக்குகிறது. இஸ்லாத்தில் இன்னொரு சிறப்பு. இஸ்லாத்தில் யார் சேர்ந்தாலும். சாதியை மறைத்து விடுகிறது.

முதுகுளத்தூரில் ஒருவர் தலையை ஒருவர் சீவிக்கொள்ளும் தேவர் - தாழ்த்தப்பட்ட மக்களானாலும் சரி மற்றும் எவரானாலும் சரி, எவர் இஸ்லாத்தில் சேர்த்தாலும் சரி, சாதியை நீக்கி விடுகிறது - இஸ்லாத்தின் கொள்கை! இதனால், அது என்னை மிகவும் ஈர்க்கக்கூடிய கொள்கையாக இருக்கிறது. இதையெல்லாம் அறிந்துதான் எதையும் துருவித்துருவி ஆராயும் பண்பு படைத்த அறிஞர் பெர்னாட்ஷா அவர்கள் 'உலகில் கடைசிவரை நிலைத்திருக்கக்கூடிய மார்க்கம் இஸ்லாம் ஒன்றுதான்!' என்று எழுதியிருக்கிறார்.


கொண்ட காலத்திலேயே திருக்குர்ஆனையும் தெரிந்துகொள்ளும் வாய்ப்புப் பெற்றிருந்தேன் என்று நான் துணிந்து சொல்வதில் பெருமை கொள்கிறேன். மற்றெல்லா மதங்களிடையேயும் இஸ்லாத்திற்கும் இணையற்ற மதிப்பு, அதன் சட்டதிட்டங்கள். மனிதனின் நடைமுறை வாழ்க்கைக்கேற்ற நல் அமைப்பாகும்.

## ஆறுமுறை தமிழகத்தில் முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் இப்படிக் கூறினார்

மூட பழக்க வழக்கங்களை ஒழிப்பதற்காகவே இஸ்லாம் மார்க்கத்தைப் பயன்படுத்தினோம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இன்றல்ல என்னுடைய இளம் பிராயம் முதல், ஒரு நாற்பது ஆண்டு காலமாக பாராட்டுகின்ற பல்வேறு விழாக்களில் கலந்துகொள்ளுகின்ற வாய்ப்பைப் பெற்றவன் நான். தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், திராவிட இயக்கத்தினுடைய தலைவர்களும், இஸ்லாமியர் நடத்துகின்ற பல்வேறு நிகழ்ச்சி


vaigarai velicham official



களில் கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள். அந்த வாய்ப்பை விரும்பிப் பெற்றவர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மூடநம்பிக்கைகளை அகற்றிட, உறுதியை, துணிவை, சகோதரத்துவத்தை, சமத்துவத்தை சமதர்மத்தை நிலைநாட்டிட நபிகள் பெருமானுடைய வாழ்க்கையும் அவரது அறிவுரைகளும் எந்த அளவுக்குப் பயன்படும் என்பதைக் கண்டு அவைகளை பயன்படுத்தியவர்கள். எனவேதான் இந்த பெருவிழாவில், தான் கலந்து கொள்வதை எனக்குற்ற பெருமையாக, பெரும்பேறாக நான் கருதுகின்றேன்.


இந்தியாவை பொறுத்தவரையில் இஸ்லாமியர்கள், இந்தியாவிற்கு வந்ததைப் பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு... டிஸ்கவரி ஆப் இந்தியா... என்கின்ற புத்தகத்திலே குறிப்பிடும்போது சொல்லுகிறார் அரசியல் சக்தியாக பாரதத்திற்குள் நுழைவதற்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் ஒரு மார்க்கம் என்ற நிலையில் இந்திய நாட்டின் தென்பகுதியை அடைந்துவிட்டது என்று பண்டித நேரு குறிப்பிடுகின்றார். அரசியல் சத்தியாக இந்தியாவினுடைய வடபகுதியிலே இஸ்லாம் மார்க்கம் நுழைந்தது என்றாலும்கூட. அதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே அது ஒரு மார்க்கமாகவே தென்னகத்திலே நுழைந்துவிட்டது. தென்பகுதியை அடைந்துவிட்டது; இன்னொரு புத்தகம். இந்திய கலாச்சாரத்தில் இஸ்லாமியத் தாக்கம் என்கின்ற ஒரு நூல் தாராச்சந்த் அவர்கள் எழுதிய நூல்... அந்த நூலிலே மிக விரிவாகக் குறிப்பிடுகின்றார் அவர்!

உருவ வழிபாடுகள் இல்லை. இஸ்லாம் மார்க்கத்திற்கு வடிவங்களை அமைத்து சிலைகளை வடித்து அவைகளை தெய்வங்களாக வணங்குகின்ற பழக்கமில்லை, எங்களுடைய சித்தர்களிலே ஒருவரான சிவவாக்கியர் அதைத்தான் சொன்னார், நட்டகல்லை தெய்வமென்று நாலு புஷ்பம் சாத்தியே சுத்தியந்து மொணமொணன்று சொல்லும் மந்திரம் ஏனடா நட்ட கல்லும் பேசுமோ நாதன் உன் இருக்கையில் என்று எங்கள் சிவவாக்கியர் அன்றைக்கு சொன்னதைத்தான் இஸ்லாம் மார்க்கம் சொல்கின்றது என்ற காரணத்தால் நாங்கள் இஸ்லாம் மார்க்கத்தால் கவரப்படுகிறோம்.

### தலித் போராளி திருமாவளவன்



ஓர் ஆராய்ச்சியை நடத்தி இஸ்லாம் ஒன்றே தீண்டாமை வேரோடும், வேரடி மண்ணோடும் கெல்லி எறிந்தது இஸ்லாம்தான் எனப் பிரகடனப்படுத்தினார். டாக்டர், முனைவர் பட்டம் பெற்றார் திருமாவளவன்.






# மால்கம்-X

மால்கம்-X என்ற ஷஹீத் மாலிக் அல் ஷாபாஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்திற்குப் பின் நாம்தாம் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அறிமுகப்படுத்தினோம். அது பலரை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்தது.

இந்நிலை கண்ட இஸ்லாத்தின் எதிரிகள் இதனை எதிர் இலக்கியங்கள் வழி நீத்துப்போகச் செய்திட தங்களால் இயன்றதையெல்லாம் செய்தார்கள்.

பலர் மால்கம்-X இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதையும், சவூதி அரசின் விருந்தினராக ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றியதையும் அதன்பின் அவர் 16 ஆப்பிரிக்க நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தை அறிமுகம் செய்ததையும் மறைத்து விட்டு அவருடைய வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டார்கள். அவற்றையெல்லாம் விஞ்சி நமது வெளியீடு மக்களை சென்று அடைந்துகொண்டே இருக்கின்றது. பலர் இஸ்லாத்தை ஏற்றுள்ளார்கள்.

அல்ஹம்துலில்லாஹ்!

எனினும், இவர்களுக்குப் பதில் சொல்லும் விதத்தில் நாம் மால்கம்-X நூலில் பல ஆழமான பகுதிகளை இணைத்தோம். அதில் மால்கம்-X ஷஹீத்க்கு முன்னரே அமெரிக்காவின் ஒரு பெரும் இஸ்லாமியப் புரட்சியை, உண்மையைச் சொன்னால் எழுச்சியை - நோபுள் ட்ரூ அவர்கள் ஏற்பாடு செய்தார். அவர்கள் சூட்டிக்கொண்ட பெயரே ஷாபாஸ் என்பது. அதைத்தான் பின்னர் ஷாபாஸ் மாலிக் அல் ஷாபாஸ் எனக் கொண்டார். இந்த வரலாற்றையும் தந்தோம்.

வாயடைத்துப் போனார்கள் எதிராக இலக்கியம் படைத்தோர்.

இந்த எதிர் இலக்கியத்தைப் படைத்தவர்களிடம், ஏன் நீங்கள் மால்கம்-X. அதாவது ஷஹீத் மாலிக் அல் ஷாபாஸ் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை மறைக்கின்றீர்கள் எனக் கேட்டபோது, நாங்கள் மத நீக்கம் செய்து இலக்கியங்களை வெளியிடுகின்றோம் என்றார்கள்.

இவர்களின் எழுத்துக்கள், எது தேவையா அதைவிட்டு விடுகின்றன. மாறாக, ஒரு போராளி என்ற அடிப்படையிலேயே அந்த வரலாற்றைச் சமர்பிக்கின்றோம்.

அமெரிக்காவை ஆட்டிப் படைக்கும் நிறவெறி மதத்தை மையமாகக் கொண்டது. அங்கே அநியாயங்களைக் கட்டவிழ்த்து விடுவது White Christian World Supermacy வெள்ளை கிறிஸ்தவ ஆதிக்கம். இங்கே – இந்தியாவில் எப்படி ஜாதி ஆதிக்கம் மதத்தையும், கடவுளையும் கொண்டு சாற்றப்படுகின்றதோ, அதேபோல்தான் இதனை நாம் தெளிவுபடுத்திய பின்னர், வாசகர்கள் நமது நூலின் பக்கம் திரும்பினார்கள், இஸ்லாத்தை ஏற்றார்கள்.

மேலும் விபரங்களுக்குப் படியுங்கள் மால்கம்-X என்ற வேர்கள் பதிப்பகத்தின் வெளியீடு. ■


vaigarai velicham official

### தாஃவா எப்படி?

# விரிவடையும் தாஃவா வாய்ப்புகள்...

இப்போது இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருக்கும் இந்துத்துவ தீவிரவாதிகள் இனி இந்தியாவில் சனாதனமே நிலைக்கும் என்பதாகவே பிரகடனப்படுத்தினார்கள்.

சனாதனம்: சாதியை அடக்குமுறைகளையும் அடுக்கு முறைகளையும் கொண்டுவரும் அந்த மக்கள் மீண்டும் அடிமையாவார்கள் அதிலிருந்து விடுபட மக்கள் இஸ்லாத்தை நோக்கி ஒடி வருவார்கள்.

இதனால் தாஃவாவின் வாய்ப்புகள் விரிவடையும். இஸ்லாத்தில் மக்கள் அணி அணியாக நுழைவார்கள். இன்ஷாஅல்லாஹ்.

### இஸ்லாமியப் பிரச்சாரம் எப்படி?
### பாரசீக பேரரசின் தளபதி ருஸ்தும்

முஸ்லிம்களோடு போர் செய்து வெற்றி பெற்றிட இயலவில்லை. ஆகவே பேசி, பகையைத் தீர்த்திட முஸ்லிம்களை அழைத்தான் பாரசீக தளபதி ருஸ்தும்.

முஸ்லிம்கள் சார்பில் பேசிட சென்ற தளபதிகள், ரபாய் பின் அம்ர், ஹுஸைபா பின் முஷ்ஷின், முகர்பின் சுஹைப் ஆகியோர் பாரசீக மன்னனிடம் பேசிடத் தலைப்பட்டனர்.

ஆடம்பரமும், அணிமணிகளும், அலங்கரித்த அந்த முகாமுக்குள் நுழைந்த தளபதிகள் மிகவும் எளிய தோற்றத்துடன் காணப்பட்டார்கள்.

அவர்கள் அவனுடைய பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பொதிந்து நின்ற தூண்களில் தங்கள் குதிரைகளைக் கட்டினார்கள். இதில் ருஸ்தும் ஆத்திரமடைந்தான். ஆனால் தன்னால் போரிட்டு வெல்ல முடியாது என்பதை அறிந்து அமைதி காத்தான். அவன் அவர்களிடம் நீங்கள் ஏன் போருக்கு வந்தீர்கள் எனக் கேட்டான்.

அவனை ஏற இறங்கப்பார்த்த முஸ்லிம் தளபதிகள் அவனிடம் இப்படி பதில் சொன்னார்கள்.

நாங்களும் உன்னைப்போல் ஒரு காலத்தில் இப்படித்தான், ஆடம்பரத்தில் திழைத்து, ஆணவத்தின் உச்சியிலே நின்றோம். சுருக்கமாகச் சொன்னால், நரகத்தின் விளிம்பிலே நின்றோம். அப்போது நம்மை படைத்த அல்லாஹ் அவனுடைய பெருங்கருணையினால் ஒரு தூதரை அனுப்பி எங்களை மீட்டான். சொர்க்கத்திற்கு வழிகாட்டினான்.

அந்த இறைவனிடம் உன்னை அழைக்கவே வந்தோம். நீ நரகத்திலிருந்து விடுபட்டிட வேண்டும். உண்மையான இறைவனை வணங்கிடலாம்.

இதை நீ செய்தால், (அதாவது நீ இஸ்லாத்தை ஏற்றால்) நீயே ஆட்சியாளனாக இரு. உன்னுடைய நிலத்தை நீயே ஆட்சி செய். அனைத்தையும் படைத்த அல்லாஹ் வழியில்”

“இதைத் தவிர எங்களுக்கு இன்னொரு நோக்கம் இல்லை”

“இந்த பொன்னும், மணியும் படோடபமும் எங்களுக்குத் தேவையில்லை. நாங்கள் அதை நாடி வரவில்லை.

இதுவே இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதன் அடிப்படை நோக்கம்.

இந்த அக்கறையை நாம் யாரிடம் தாஃவா செய்கின்றோமா அவர்களின் இதயத்தில் பதிந்திட வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

> **(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக! மெய்யாக உம் இறைவன், அவன் வழியைவிட்டுத் தவறியவர்களையும் (அவன் வழியைச் சார்ந்து) நேர்வழி பெற்றவர்களையும் நன்கு அறிவான்.**
>
> **அல்குர்ஆன் 16:125**

- சொல்வதை நேரடியாக தெளிவாகச் சொல்லிட வேண்டும்.
- பரிமாறப்படும் சொற்களில் இங்கிதம் மிகைத்து நின்றிட வேண்டும்.
- வாதப் பிரதிவாதங்களில் எந்தக் கட்டத்திலும் நிதான நிலையை இழந்திடக் கூடாது.

> **பழக்க வழக்கங்களில் கண்ணிய மில்லாத ஒருவன் எல்லாவிதமான நன்மையும் இழந்தவன். புகாரி 6270**



# தமிழகமும் தாஃவாவும்

தமிழகத்தில் இப்போது தலைதூக்கி நிற்கும் கொள்கை திராவிடம்! தலைவர் பெரியார்!!

பெரியாரைச் சுற்றியே தமிழகத்தில் அரசியல் மட்டுமல்ல, சமுதாய மாற்றங்களும், விடுதலை போரும் தலைதூக்கி நின்றன.

ஆளும் தமிழக அரசு, தனது கட்சியை திராவிட மாடல் அரசு என்கின்றது.

இதன்பொருள் : அனைத்து அரசு திட்டங்களுக்கும் பூர்வகுடிகளுக்குத்தான் ஆண்டாண்டு காலமாக அனைத்துத் துறைகளிலும் தாழ்த்தப்பட்டு, அமுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு சிலபல நேரங்களில் அழிக்கவும் பட்ட சமுதாயத்தை எல்லாத்துறைகளிலும் உயர்த்துவது.

இங்கே இந்த தமிழ்நாட்டில், இந்த சமுதாய எழுச்சி 100 முதல் 150 ஆண்டுகால ஆயுளைக் கொண்டது. ஆனாலும், சமூக நீதி, சம அந்தஸ்து என்பது எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றன.

அதேநேரத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் அத்தனை உரிமைகளையும் கண்ணியத்தையும் ஒன்றாக பெற்றுவிடுகின்றார்கள். மற்றவர்கள் தலைமுறை, தலைமுறையாக போராடிக் கொண்டிருக்கிற வேண்டியதில்லை.

இன்றைய அரசியலில், தமிழகத்தில் மட்டுமல்ல, அகில இந்திய அளவிலும் கோலோச்சி வருபவர் பெரியார்.

தந்தை பெரியார் அவர்கள், இஸ்லாம் மட்டுமே, பூரண விடுதலையைப் பெற்றுத்தரும் என்று தொடர்ந்து பிரச்சாரம் செய்தார்கள்.

தன் வாழ்நாளில் 300 முறை இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என தீண்டத்தகாத மக்களுக்கு வழிகாட்டியவர் பெரியார்.

தேனி அருகில், சீலையம்பட்டியில் 69 பேர் இஸ்லாத்தை ஏற்றபோது, பெரியார் தன் சொந்த செலவில் சென்று பாராட்டினார்.

வைக்கம் போராட்டம் கோவில் இருக்கும் தெருவில் நுழையும் போராட்டம். இன்று 100 ஆண்டு நிறைவு பெறுகின்றது.

வெற்றி விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஆனால், அந்த வைக்கம் போராட்டம் சில சலுகைகளைப் பெற்றுத் தந்திருக்கலாம். ஆனால் மனிதர்களாக மதிக்கப்படும் உரிமையைப் பெற்றுத் தந்திடவில்லை.

ஆனால், அதே வெற்றி விழா மேடையில் பெரியாரின் பரிந்துரையின்கீழ் 52 பேர் இஸ்லாத்தை ஏற்றார்கள் என்பது வரலாறு.

பெரியார் தொடர்ந்து நடத்திய மாநாடுகளில் 3000 பேரை இஸ்லாத்தில் இணைத்தார்.

பகுத்தறிவு தந்தை இறுதியாக இனஇழிவை ஒழிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம் என்பதை செயலில் காட்டினார். இத்தோடு நில்லாமல்

## மீலாது விழாக்களில் பெரியார்

பெரியார் மீலாது விழாக்களில் கலந்து கொண்டு உரையாற்றினார். ஒரு கட்டத்தில் தலைமை ஏற்றார்கள்.

மீலாது விழாக்களை ஏற்பாடு செய்தார்கள்.



vaigarai velicham official

பெரியாரை வானளாவ உயர்த்திக் கொண்டாடும் இந்த நாள்களில், இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்து, அதிகளவிலான மக்களை இன இழிவிலிருந்தும், சாதிய அடக்கு முறையிலு மிருந்தும் நிரந்தரமாக விடுதலை செய்திடச் செய்வதே இப்போதைய டிரண்டாக அமைய வேண்டும். நாம் இதில் நிறைய உழைக்க வேண்டும்.

கொட்டும் உழைப்பு நல்ல பல நன்மைகளைப் பெற்றுத்தரும்.

இங்கே புழக்கத்திலிருக்கும் தமிழ் இலக்கி யத்தில் சமத்துவம் பேசும் இலக்கியங்கள், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றே பேசுகின்றன.

இந்தத் தத்துவத்தை ஒப்பற்ற முறையில் பிரகடனப்படுத்தியது இஸ்லாம் இப்படி

**“மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவி லிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப் படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்துகொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக் கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக்கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப் பவனாகவே இருக் கின்றான்.” (அல்குர்ஆன் 4:1)**

இந்த ஒரு வசனமே தமிழகத்தில் மட்டுமல்ல உலகின் பல்வேறு பகுதி களில் ஆயிரக்கணக்கான மக்களை இஸ்லாத்தில் இணைத்துள்ளது. அடிமை த்தளைகளிலிருந்து விடுவித்துள்ளது.

ஆக இஸ்லாத்தின் மூலம் இந்தியா வின் பூர்வீக குடிமக்களை விடுதலை செய்திட இதுவே உரிய தருணம். இதற்காக நீண்ட காலமாக உழைத்து வரும் இயக்கமே தாருல் இஸ்லாம்.

**- MGM**

## கள ஆய்வு...

26.9.2025 அன்று திருவாரூர் மாவட்டம் பூந்தோட்டம் அருகில் இஞ்சிக்குடி என்ற கிராமத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட குடும்பங்களை நேரில் சந்தித்து கள ஆய்வு...








# 08.02.2026 அன்று மேட்டுப்பாளையத்தில் ரமலானை வரவேற்போம் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி....!









08.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிமுதல் மேட்டுப்பாளையம் அன்பகம் இஸ்லாமிய கல்விக்கூடத்தில் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வை சகோதரர் சிராஜ்தீன் அவர்கள் இறைவசனம் வாசித்து நிகழ்வை துவக்கி வைத்தார். நிகழ்வின் முன்னுரையாக சகோதரர் திருப்பூர் காதர் முஹைதீன் அவர்கள் ரமலான் ஏன் எதற்காக கடைமையாக்கப்பட்டது அதனுடையை இலக்கு என்ன என்று உரையாற்றினார்கள்.

அடுத்ததாக ரமலானை வரவேற்று பாடலை சிறுவன் நசீர் பாடினார், நமது கல்விக்கூடத்தில் படித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.


சிறப்புரையாக மதுரையை சார்ந்த முஹம்மத் ரஃபீன் அவர்கள் ரமலான் மாதத்தை பயனுள்ளதாக எப்படி ஆக்க வேண்டும், எந்த செயல்கள் ரமலானை வீணாக்கும் என்று விரிவாக உரையாற்றினார்கள்.

இறுதியாக ரமலானின் அமல்களின் முன்னேற்பாடுகளை பற்றி திருப்பூர் சிராஜ்தீன் அவர்கள் உரையாற்றினார்கள்.

# மதமாற்றத் தடைச் சட்டம்

# நாடார் சமூகத்தின் விழிப்புணர்வு

1998 முதல் 2004 வரை பாசிசம் இந்தியாவில் முதல்முறையாக மத்தியில் ஆட்சி செய்தது. அப்போது தேசிய அளவில் மதமாற்றத் தடைச் சட்டம் ஒன்றைக் கொண்டு வர முயற்சி செய்தது. ஆனால், மத சுதந்திரம் சம்மந்தமான சட்டங்களை இயற்றுவது மாநிலங்களின் உரிமை. இதுமாநில பட்டியல் (StateList-இல்)



நாடார்கள் மீதான தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. அவர்களது வீடுகள் அழிக்கப்பட்டன. ஏராளமான நாடார்கள் இஸ்லாமியரின் பாதுகாப்பில் உயிர் பிழைத்தனர். இந்து மத உயர் வகுப்பினரோ இந்து மத அமைப்புகளோ, சங்கராச்சாரியர்களோ நாடார்களின் கோயில் நுழைவுக்கு ஆதரவாக இல்லை. இதனால் வெறுப்படைந்த பெரும்பாலான சிவகாசி நாடார் சமூகத்தினர் இந்து மத ஒடுக்குமுறையிலிருந்து தப்பிக்க இஸ்லாத்தைத் தழுவினர்.







இருந்தது. அதனால் மத்தியில் ஆட்சியில் இருந்துகொண்டு ஒரு மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து விட இயலவில்லை. ஆனாலும், பாசிச ஆட்சியின் தலைவர் வாஜ்பேயிக்கு ஓர் அரிச்சல் - தன் அரிப்பைப் போக்கிக்கொள்ள ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அந்த அறிவிப்பில், நாம் மத மாற்றம் பற்றி நாடு தழுவிய விவாதத்தை மேற்கொள்ளலாம் என்றார்.

அப்போது நாம் நிறுவி நடத்திக்கொண்டிருந்த "விடியல் வெள்ளி" என்ற பத்திரிகையின் சார்பில் ஒரு விவாதத்தைத் தொடங்கினோம்

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களை அந்த விவாதத்தில் தமிழக மெங்கும் பங்குபெறச் செய்தோம்.

அதில் ஒரு பகுதிதான் நாடார் வரலாறு என்று லஜபதிராய் எழுதிய கட்டுரை. பின்னர் அதுவொரு நூலாக மாறியது.

## நாடார் வரலாறு கறுப்பா..? காவியா..?

**- தி.லஜபதிராய்**

இந்த நூலின் நோக்கம் வரலாற்றை மீள் பதிவு செய்வது மட்டுமே மாறாக, குலத்தாழ்ச்சி, உலர்ச்சி சொல்வதன்று. சமீப காலமாக முகநூலிலும் பிற சமூக ஊடகங்களிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும், இஸ்லாமிய கிருஸ்தவ சமூகத்தினருடனும், பிற பட்டியலின விளிம்பு நிலை மக்களுடனும், நிற்க வேண்டிய நாடார்களின் மனவோட்டத்தில் இந்து வலது சாரி சிந்தனை மிகுதியாக இருப்பதைக் காண முடிகிறது. இந்நிலையில் கடந்த காலத்தை திருப்பிப் பார்ப்பது மிகவும் அவசியமாகிறது. (நூலில் நூலாசிரியர் **T.N.லஜபதிராய்**)

# 49வது சென்னை புத்தகக் காட்சியில் வேர்கள் பதிப்பகத்தின் வெளியீடுகள்

**Seermai**
2d ·

2026 சென்னை புத்தக காட்சி
சீர்மை அரங்கில்..

எழுத்தாளர், சிந்தனையாளர்
வைகறை வெளிச்சம் மாத இதழ் ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது அவர்கள்...


அரங்கு எண் : 406



















vaigarai velicham official


BAPASI
598
நிமிர் பதிப்பகம்
BAPASI


407
திசை புத்தக நிலையம்
English
BAPASI
தமிழ்
THISAI BOOK STORE
திசை
புத்தக நிலையம்


174
கீழைக்காற்று வெளியீட்டகம்


639
இலக்கியச்சோலை
BAPASI


299
சிந்தன் புக்ஸ்
BAPASI
298


25
தமிழ்த்தேசம் புத்தக அங்காடி


Taking Tamil to the World

# மூன்றாவது சர்வதேச புத்தகக் கண்காட்சி

சென்னைப் புத்தகக் கண்காட்சியைத் தொடர்ந்து இப்போது சர்வதேச புத்தகக் கண்காட்சி ஒன்று 2026 ஜனவரி 16, 17, 18 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்றது.

இந்த வருடம் மூன்றாவது புத்தகக் கண்காட்சி சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. அதில் வேர்கள் பதிப்பத்தின் சார்பில், அதன் காப்பாளர் மு.குலாம் முஹம்மத் அவர்களும், முஹம்மத் தாஜ்ரியாஸ் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

கண்காட்சியில் 250 பக்கங்கள் கொண்ட தமிழ் நூல்கள், உலகின் இதர மொழிகளில் மொழி பெயர்க்கவும் ஏற்பாடுகள் நடந்தன. இதில் வேர்கள் பதிப்பகத்தின் சில நூல்களும் பிற மொழிகளில் மொழிபெயர்ப்பது பற்றிய கலந்துரையாடலும் நடைபெற்றது. பல Library Agents நமது நூல்களில் ஆர்வம் காட்டினார்கள்.







திருவனந்தபுரம் சட்டசபையில் நடந்த புத்தகக் கண்காட்சியில் வேர்கள் பதிப்பகத்தின் புத்தகங்கள்.



vaigarai velicham official




# பாசிசத்திற்கு எதிரான சட்ட ரீதியான போர்

■ கணேசன் என்ற மருத்துவர் வாட்ஸாப் தளத்தில் முஸ்லிம்கள் குறித்து அவதூறு பரப்பி வந்தார் அவர் மீது புகார் அளித்தோம். இனிமேல் இப்படி செய்ய மாட்டேன் என்று மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்தார். கடிதம் இணைக்கப்பட்டுள்ளது,

மனுதாரர் திரு.காதர் மொய்தின் கொடுத்த புகார் மனுமீது நடவடிக்கை மேற்கொள்வது சம்மந்தமாக எதிர்மனுதாரர் திரு.கணேசன் என்பவரை நேரில் அழைத்து விசாரணை செய்ததில் மனுதாரர் தான் புகாரில் தெரிவித்துள்ள கருத்துகளை எதிர்மனுதாரர் தனக்கு வந்த வாட்ஸ் ஆப்பில் குருப்பில் வந்த Message தான் forward செய்ததாகவும் எந்த ஒரு தனிபட்ட மனிதரையோ அல்லது மதத்தை குறிப்பட்டு அனுப்படவில்லை மேலும் மத ரீதியாக யாரையும் புண்படுத்தும் விதமாக வாட்ஸ் ஆப்பில் Message அனுப்பவில்லை என்றும். இனி வருங்காலங்களில் மத சம்பந்தமான நிகழ்வுகளை அனுப்பமாட்டேன் என்று கேட்டு கைப்பட எழுதிக்கொடுத்துள்ளதால் மேற்படி எதிர்மனுதாரரை எச்சரிக்கை செய்யப்பட்டது, மனுமீதான விசாரணை முடிக்கப்பட்டது என்பதை தாங்கள் மேலான பார்வைக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.


Insufficient Contact Details/No Specific Request


அனுப்புனர்.
Dr. M. Ganesh. 53/M. Ph: 9600232224.
S/o. Mr. R.M. Muniappan.
84 Gastro Care. Coimbatore 44.

பெறுநர்,
Inspector of Police. (காவல் ஆய்வாளர்)
C2 Race Course Police Station
Coimbatore City.

ஐயா, / Sir,
I hv forwarded awarness, medical messages & informations which I have recieved through whats up groups. I hv no intention to hurt the feelings of any individual person (or) religion. Hereafter if there is any religious content recieved in my what's up group I will not forward to others.

Dr. M. Ganesh.


சமர்பிக்கப்படுகிறது

C2 பந்தயசாலை ச-ஒ.கா.நி.
கோவை மாநகர்

பார்வை: C.No.11780788/CM CELL/2025
C.No.227/DCP-N/CM CELL/ACP KR/2025
************************

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரர் பெயர் முகவரி | : | திரு.காதர் மொய்தின் த.பெ.சர்புதின் திருப்பூர் |
| 2. | எதிர்மனுதாரர் பெயர் முகவரி | : | கணேசன் |
| 3. | விசாரணை அதிகாரி | : | காவல் ஆய்வாளர். C.2 பந்தயசாலை ச-ஒ காவல் நிலையம். கோவை மாநகர் |

4. கோரிக்கை விவரம்::
மனுதாரர் திருப்பூரில் வசித்து வருவதாகவும் கோவையில் வசித்து வரும் எதிர் மனுதாரர் அவரது வாட்ஸ் ஆப்பில் Message – ல்


1)பெங்களூருவில் உப்புக்கு பதிலாக மூத்திரத்தை கலந்து பாப்கான் தயாரித்த துலுக்கன் கைது.
இதுவரை பாப்கான் சாப்பிடட்டவன் நிலை...!!!
2)தினமும் துலுக்கன் கடையில் விற்கும் பிரியாணியில் என்ன என்ன கலந்து கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை.


3)சுடு சொரணையற்ற இந்துக்களே இனியாவது முஸ்லிம் கடைகளில் சாப்... Read more.


4)மத மாற்றம் ஏமாற்றம் அரசு உதவி பெறும் பள்ளிகள் அனைத்துமே பெரும்பாலும் கிருஸ்தவ மூஸ்லீம் பள்ளிகளாவே உள்ளது. அதற்கும் அரசே உதவி செய்யும் இந்த பள்ளிகளில் மதம் மாற்றம் செய்ய தடை இல்லை. மதப்பிரச்சாரம் செய்யலாம் அதற்கும் அரசே உதவி செய்யும் இந்த பள்ளிகள் இயங்கும் இடங்களையும் அரசே தான் பிற மதத்தை சார்ந்வர்களுக்கு கொடுத்தது இன்றும் இது நடைமுறையில் உள்ளது. ஆனால் அரசு உதவி பெறாத பள்ளிகள் இந்து மத பள்ளிகளாகவே உள்ளது. மேலும் இந்த பள்ளிகளுக்கு மத பிரச்சாரம் செய்யவோ அல்லது தங்களது வழிபாடு பற்றிய பிரச்சாரம் செய்யவோ அனுமதி இல்லை.

5)காங்கிரஸ் கட்சியும் இந்து மதங்களை எதிர்கும் கட்சிகளும் எவ்வளவு அழகாக சட்டம் இயற்றி இந்துக்களை மதம் மாற்றம் செய்கிறது என்று பொது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

6)இன்னொன்று கவனிக்க வேண்டிய விஷயம் ஒரு கிருஸ்தவன் இன்னொரு மூஸலீமை போய் மாற்ற மாட்டான். இவர்கள் இருவரும் குறிவைத்துள்ளதே இந்து மத மக்களை கிருஷதுவர்கள் அதிகம் பெண்களை தான் மதம் மாற்றுகின்றனர். ஒரே ஒரு பெண்ணை கிருஸ்தவராக மாற்றி விட்டால் இந்து மதத்தில் ஒரு தலைமுறை குறைந்து விட்டது என்ற அர்த்தம்.





7)இந்துக்கள் ஒன்றுபட்டு நமது கலாசாரத்தையும் நமது தலைமுறையும் காப்பாற்ற ... நேரம் இது.

என்று மதத்தை புண்படுத்தும் விதமாக வாட்ஸ் ஆப்பில் Message Farwared செய்து அனுப்பியுள்ளதாகவும் எனவே எதிர்மனுதாரரை எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி மனுதாரர் கொடுத்துள்ள புகார் மனு.

5.மேற்கொண்ட நடவடிக்கை விவரம் மற்றும் விசாரணை முடிவு
மனுதாரர் திரு.காதர் மொய்தின் கொடுத்த புகார் மனுமீது நடவடிக்கை மேற்கொள்வது சம்மந்தமாக எதிர்மனுதாரர் திரு.கணேசன் என்பவரை நேரில் அழைத்து விசாரணை செய்ததில் மனுதாரர் தான் புகாரில் தெரிவித்துள்ள கருத்துகளை எதிர்மனுதாரர் தனக்கு வந்த வாட்ஸ் ஆப்பில் குருப்பில் வந்த Message தான் forward செய்ததாகவும் எந்த ஒரு தனிபட்ட மனிதரையோ அல்லது மதத்தை குறிப்பட்டு அனுப்பபடவில்லை மேலும் மத ரீதியாக யாரையும் புண்படுத்தும் விதமாக வாட்ஸ் ஆப்பில் Message சை அனுப்பவில்லை என்றும். இனி வருங்காலங்களில் மத சம்பந்தமான நிகழ்வுகளை அனுப்பமாட்டேன் என்று கேட்டு கைப்பட எழுதிக்கொடுத்துள்ளதால் மேற்படி எதிர்மனுதாரரை எச்சரிக்கை செய்யப்பட்டது,மனுமீதான விசாரணை முடிக்கப்பட்டது என்பதை தாங்கள் மேலான பார்வைக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

காவல் ஆய்வாளர்
சி-2 பந்தயசாலை ச-ஒ காவல் நிலையம்
கோவை மாநகரம்

FILED
AC KATTOOR RANGE
CBE CITY

■ கரூரில் விஜய் கலந்து கொண்ட கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 40கும் மேற்பட்டோர் இறந்தனர். இது குறித்தும் பொது கூட்டங்கள் நடத்தும் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் குறித்தும் மனு அளித்தோம். அதற்கு உரிய பதில் காவல்துறை தந்தது

| அனுப்புநர் : காவல் ஆய்வாளர் கரூர் நகர காவல் நிலையம் கரூர் மாவட்டம் | பெறுநர்: காதர் மொய்தீன் |
|---|---|

NRC: 860/SDOP/CMCELL/CAMP/KRR/2025

| | | |
|---|---|---|
| 01 | பெறப்பட்ட மனு எண் மற்றும் நாள்: | Portal-16078276 |
| 02 | மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி | காதர் மொய்தீன் |
| 03 | கோரிக்கை விபரம் | கடந்த 27/09/2025 அன்று கரூரில் நடிகர் விஜய் தன்னுடைய கட்சியான த. வெ. க. நடத்திய கூட்டத்திற்கு சுமார் ஏழு மணி நேரம் தாமதமாக வந்துள்ளார். நடிகர் என்ற அடிப்படையில் அவரை காண குழந்தைகள் மற்றும் ஓட்டு போடும் வயது இல்லாதவர்கள் உட்பட பல்லாயிரம் மக்கள் அறிவித்த 12 மணிக்கே வந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையில் காலையில் இருந்தே கூடி உள்ளனர் 7 மணி நேரம் தாமதமாக வந்ததால் தண்ணீர் உணவு இன்றி சோர்ந்து குழந்தைகளும் மக்களும் நெரிசலில் சிக்கி குழந்தைகள் பெண்கள் உட்பட 41 பேர் பரிதாபமாக உயிர் இழந்து உள்ளனர். இதற்கு தாமதமாக வந்த விஜய் தான் முழு காரணம் என்பதால் அவருக்கு பல உயிர்கள் பறி போனதற்கான செயற்கரிய செயலாக கருதி மரண தண்டனை விதிக்க வேண்டும். அப்போது தான் வருங்காலத்தில் அரசியல்வாதிகள் நடிகர்கள் மக்களை காக்க வைத்து அலைக்கழிக்கும் செயலை கை விடுவார்கள்.இந்த சம்பவத்தை படிப்பினையாக கொண்டு மக்கள் அதிகம் பயன்படுத்தும் இடங்களில் அரசியல் மற்றும் இன்னபிற கூட்டங்கள் நடத்த அனுமதிக்க கூடாது ஊருக்கு ஒதுக்குபுறமாக விசாலமான இடங்களில் மட்டும் அனுமதிக்க வேண்டும்.குறிப்பிட்ட நேரத்தில் நடத்தவில்லை என்றால் அந்த கூட்டத்திற்கு தடை விதிக்க வேண்டும்.உயிரிழப்பு பொருட்சேதம் வன்முறையால் ஏற்படும் இழப்புகளுக்கு அந்த கட்சி தலைமை தண்டிக்க பட வேண்டும். வருகை தரும் அனைவருக்கும் உணவு தண்ணீர் கழிப்பறை போன்றவை கட்டாயமாக அந்த கட்சியே தர வேண்டும் குழந்தைகள் உட்பட ஓட்டு போடும் வயது இல்லாதோர் யாரும் அனுமதிக்க பட கூடாது.மது போன்ற போதை பொருட்கள் பயன்படுத்துவோர் அனுமதிக்க பட கூடாது.இது போன்ற நடவடிக்ககள் வழியே உயிர் சேதம் தடுக்க கேட்டுக்கொள்கிறோம் |
| 04 | மனுதாரருக்கு கோரிக்கை மீது தெரிவிக்கும் விபரம் | மனுதாரரின் புகார் மனு சம்மந்தமாக விசாரணை மேற்கொண்டதில் மனுதாரர் தெரிவிக்கும் சங்கதிகள் தொடர்பாக கரூர் நகர காவல் நிலைய குற்ற எண்.855/25ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கானது மாண்பமை உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின் படி SIT-க்கு மாற்றப்பட்டது, பின்பு மாண்பமை உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படி தற்போது CBI-யிடம் விசாரணையில் இருந்து வருகிறது. என்பதை மனுதாரருக்கு தெரிவித்து மேற்படி புகார் மனுவானது முடிக்கப்படுகிறது. |
| | மனுதாரரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது எனில் அதற்கான காரணம் | மனு ஏற்றுகொள்ளப்பட்டது. |

காவல் ஆய்வாளர்
கரூர் நகர காவல் நிலையம்
கரூர் மாவட்டம்.

நகல்கள் :
01. மாவட்ட ஆட்சியர் அவர்கள் கரூர் மாவட்டம்

# ■ உங்கள் மீது வழக்கு உண்டா, உங்கள் தாய், தந்தை சிறையிலா? என்று மாணவர்களிடம் கேட்க சொன்ன தமிழக அரசாணை ரத்து

## - நீதிமன்றத்தில் போராடி வென்ற நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம்

மாணவர்களின் தனியுரிமையும், எதிர்காலத்தையும் காக்கும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தீர்ப்பாக, மதுரை கிளை சென்னை உயர்நீதிமன்றம், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களிடமிருந்து மிகவும் ரகசியமான மற்றும் வெளியில் பகிர முடியாத தகவல்களை சேகரிக்க உத்தரவிட்ட தமிழக அரசின் ஆணையை முழுமையாக ரத்து செய்துள்ளது.

இந்த வழக்கை மதுரையைச் சேர்ந்த நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் அமீர் ஆலம் பொதுநல வழக்காக (PIL) தாக்கல் செய்திருந்தார்.

**என்ன இந்த சர்ச்சைக்குரிய அரசு உத்தரவு?**

**04.09.2025** அன்று, தமிழக **"Model School"** துறை வெளியிட்ட அரசாணையின் மூலம், பள்ளி ஆசிரியர்கள் **EMIS** இணையதளத்தில் மாணவர்களை **25** வகையான பிரிவுகளில் வகைப்படுத்தி விவரங்களை பதிவேற்ற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. இந்த **04.09.2025** அன்று **Model School** துறையின் உறுப்பினர் செயலர் வெளியிட்ட **Na.Ka.No.960/L1/CG-64/MS/2025** என்ற அரசாணையின் கீழ்

தமிழகத்தில் உள்ள மேல்நிலை அரசு பள்ளிகள் முழுவதிலும், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் விவரங்களை, **"Higher Guidance Scheme"** என்ற திட்டத்தின் கீழ், **EMIS** இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டது. மாணவர்களை **25 வகை "Special Focus" பிரிவுகளாக** வகைப்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டது.

அதில் குறிப்பாக ஆபத்தான மூன்று பிரிவுகள்:

(3) அகதிகள் பின்னணியில் இருந்து வரும் மாணவர்கள்

(4) சட்டத்துடன் மோதலில் உள்ள மாணவர்கள்

(5) கைதிகளின் பிள்ளைகள்

… மாணவர்களின் எதிர்காலத்தையே பாதிக்கும் வகையிலான மிக …க்கமான தகவல்கள் எனவும் இதனை பள்ளிகளில் அனுமதிக்க கூடாது …ும் இதனை சட்ட போராட்டம் நடத்திட நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் …கத்தின் சார்பாக முடிவெடுக்கப்பட்டது. அதன் முறையாக வழக்கும் …ரப்பட்டது.

**உயர்நீதிமன்றத்தில் நமது நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் சார்பாக வழக்கறிஞர்கள் எடுத்து வைத்த வாதங்கள்**

- குற்ற பின்னணி கொண்ட மாணவர்களை மன ரீதியாக உடைக்கும் அதிகார துஷ்பிரயோகம் இது. இது குழந்தைகளின் மரியாதை மற்றும் எதிர்காலத்தை பாதிக்கும்
- இது Juvenile Justice Act சட்டத்திற்கு எதிரானது. **Juvenile Justice Act, 2015**-ன் படி, குழந்தைகள் தொடர்பான குற்றப் பதிவுகள் **அழிக்கப்பட வேண்டும்** என்று சட்டம் கூறும் போது, இப்படிப்பட்ட தரவு சேகரிப்பு **சட்ட விரோதம்** என்று வலியுறுத்தப்பட்டது.
- மேலும், சமீபத்திய உச்சநீதிமன்ற தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, **அரசு நிர்வாக உத்தரவுகள் சட்டத்தை மீற முடியாது** என்றும் வாதிடப்பட்டது.
- அரசு தரப்பில், "இந்த தரவு கல்வி உதவி, பயிற்சி, உதவித்தொகைக்கு பயன்படும்" என்று கூறப்பட்டாலும், **இந்த மூன்று மிக முக்கியமான பிரிவுகளுக்கு (3,4,5) எந்தச் சிறப்பு திட்டமும் தற்போது இல்லை** என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டப்பட்டது. "முதலில் தரவு சேகரித்து, பிறகு நலத்திட்டம்" என்ற அரசின் அணுகுமுறை **தவறான பாதை** என்று கடுமையாக விமர்சிக்கப்பட்டது.
- **தவறான சேகரிப்பு முறை;** ஆசிரியர்கள் **சட்ட அல்லது உளவியல் பயிற்சி இல்லாதவர்கள்,** வகுப்பறையில் வெளிப்படையாக கேட்பது, கேலி, பாகுபாடு, ஆசிரியர்-மாணவர் உறவு சிதைவு ஆகியவற்றிற்கு வழி வகுக்க கூடும்.
- EMIS அமைப்பில் மூன்றாம் தரப்பு நிறுவனங்கள் ஈடுபடுவதால், தகவல் கசிவு அபாயம் உள்ளது. இந்த அனைத்து வாதங்களையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

**நீதிமன்றத்தின் உத்தரவு**

மூன்று மாத கால சட்ட போராட்டத்திற்கு பிறகு இறுதியாக கடந்த 05.01.2026 அன்று இரு நீதிபதிகள் முன்னிலையில் பல வாய்தாகளுக்கு பிறகு நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்தது

- "இது மாணவர்களின் தனியுரிமையில் நேரடி தலையீடு" என்று கூறி இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜி. ஜெயச்சந்திரன் மற்றும் கே.கே. ராமகிருஷ்ணன் ஆகியோர், இந்த தகவல் சேகரிப்பு: "**மாணவர்களின் அடிப்படை உரிமையான தனியுரிமையை முழுமையாக மீறும் செயல்**" என்று கடுமையாக கண்டனம் தெரிவித்தனர்.
- மேலும், அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்களிடம் இது போலான ஒரு கேள்வியை **ஸ்ரீ வித்யாலயா போன்ற தனியார் பள்ளிகளிடம் கேட்டு வாங்கிட முடியுமா?** என்ற கேள்வியை முன்வைத்தனர்.
- மேலும், புட்டாசாமி வழக்கில் **(K.S.Puttaswamy (Retd.) and another vs. Union of India and others)** உச்சநீதிமன்றம் கூறியபடி, தனியுரிமை என்பது அரசியலமைப்புச் சட்டம் 21-ன் கீழ் பாதுகாக்கப்படும் அடிப்படை உரிமை என்பதையும் நீதிமன்றம் மேற்குறிப்பிட்டு தமிழக அரசின் ஆணையை முழுமையாக ரத்து செய்துள்ளது.

மேலும், நீதிமன்றம் அரசு தரப்பாக வாதாடிய வழக்கறிஞர்களிடம், "இந்த தகவல்களை எதற்காக சேகரிக்கிறார்கள்?" என்று அரசு விளக்கவில்லை "எந்த சிறப்பு உதவி வழங்கப்படும்?" என்பதும் தெளிவில்லை "இந்த தகவல்கள் எப்படி பாதுகாக்கப்படும்?" என்பதும் உறுதி செய்யப்படவில்லை என்றும் நீதிபதிகள் கடுமையாக கருத்துகளை கூறியும் இந்த தமிழக அரசாணை ரத்து செய்யப்பட்டது.

**சட்ட நிபுணர்கள் கூறுவதாவது:**

"பள்ளிகள் கண்காணிப்பு மையங்களாக மாற்றப்படக் கூடாது. குழந்தைகள் வகைப்படுத்தப்பட்டு களங்கப்படுத்தப்படக் கூடாது."

இந்த தீர்ப்பு:

- மாணவர்களின் மரியாதையை மீண்டும் நிலைநாட்டுகிறது
- பள்ளிகள் கல்வி அளிக்கும் இடமாகவே இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்கிறது
- அரசு "நலன்" என்ற பெயரில் சமூக சூழலை கெடுக்கும் வகையில் செயல்பட முடியாது என்பதற்கு வலுவான முன்னுதாரணம்.
- இந்த தீர்ப்பு, **இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 21 கீழ் பாதுகாக்கப்படும் தனியுரிமை உரிமைக்கு நேரடியான மீறல்** என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இந்த தீர்ப்பு, குறிப்பாக சமூக ரீதியாக பாதிக்கப்படக்கூடிய மாணவர்களை **அவமானம், பாகுபாடு, மன அழுத்தம்** ஆகியவற்றிலிருந்து காக்கும் முக்கியமான பாதுகாப்பாகப் பார்க்கப்படுகிறது.

"ஒரு குழந்தை, தன் பெற்றோர் சிறையில் இருப்பதாகவோ, தான் அகதி பின்னணியில் இருப்பதாகவோ பள்ளியில் சொல்ல வற்புறுத்தப்படுவது, அவனை அவமானத்துக்கும் தள்ளும் செயல். பள்ளி இவற்றில் இருந்து எல்லாம் இருந்து மாறுபட்ட பாதுகாப்பான இடமாக மட்டுமே மாணவர்களுக்கு இருக்க வேண்டும்." என்று வலியுறுத்தினார்.



vaigarai velicham official




# அன்பகம்

## இஸ்லாமியக் கல்விக்கூடம்

**இப்போது ஆண்களுக்கும் பெண்களுக்கும் மேட்டுப்பாளையத்தில் நடைபெறுகிறது.**

இந்த "அன்பகங்கள்" - இஸ்லாமியக் கல்விக் கூடங்கள். எங்கள் 45 ஆண்டுகால அனுபவத்தின் அடிப்படையில் முகிழ்ந்தவை.

2007ஆம் ஆண்டு முதலே இயங்கி வருகின்றன.

இன்றளவும் 2267 மாணவர்கள் பயின்று சென்றிருக்கின்றார்கள். இவர்கள் 740 குடும்பங்களைச் சார்ந்தவர்கள்.

■ கல்விக் காலம் மூன்று மாதங்கள். சில மாணவர்கள் தேர்ச்சி பெறும்வரை தங்க வைக்கப் படுகின்றார்கள்.

■ உணவு, உடை, உறையுள், மருத்துவச் செலவுகள், போக்குவரத்துச் செலவுகள், கத்னா செலவுகள், பாட நூல்கள் அனைத்தும் இலவசம்.

■ கர்ப்பிணி பெண்கள் இஸ்லாத்தை ஏற்றால் அவர்களுடைய பிரசவ செலவுகள் வரை அனைத்து உதவிகளும் இலவசம்.

■ இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர்கள் வழக்கு களைச் சந்தித்தால், முறையான சட்ட உதவிகள், அதில் எதிர்ப்படும் செலவினங்கள், இவற்றையும் சந்திக்கின்றோம்.

■ இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பலருடைய முந்தைய வழக்குகளில், சட்ட உதவிகள் வழி வென்றிருக்கின்றோம்.

■ சில பெண்கள் / ஆண்கள் - இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதையே வழக்காக மாற்றி இருக்கின் றார்கள். இஸ்லாத்தின் எதிரிகள். அவற்றில் பல சிறிய வழக்குகளிலும், பல பெரிய வழக்குகளிலும் வெற்றி பெற்றிருக்கின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

51/13-A1, மதீனா நகர்,
சிறுமுகை ரோடு,
மேட்டுப்பாளையம்-641 301
பேசி-82206 77704

இவற்றோடு தாஃவா களத்தில் எதிர்படும், பிரச்சனைகளுக்கு அனைவரும் அணுகும் மையமாகவும் செயல்படுகின்றது அன்பகம்.

அஃதோர் கல்விக் கூடமாகவும் தாஃவா களத்தில் வரும் பிரச்சனைகளிலும் தீர்வு மையமாகவும் செயல்படுகின்றது.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் உறுதிப் பிரமானம் அரசு கெஜட்டுகளில் பெயர் மாற்றம் ஆகியவற்றையும் செய்து தருகின்றோம், செலவுகளையும் ஏற்றுக்கொள்கின்றோம்.

### நோன்பு காலங்களில்

நோன்பு காலங்களில் தாங்கள் வசியுமிடங்களில் நோன்பு நோற்கும் வசதிகள் இல்லாதவர்கள், அன்பகத்தில் வந்து தங்கி தங்கள் மார்க்கக் கடமையை இனிதே முடித்துச் செல்கின்றார்கள். பெருநாள் புத்தாடைகள் பெறுகின்றார்கள். இப்படிப் பொங்கிப் பெருகும் பெருநாள் மகிழ்ச்சியில் மூழ்க வைக்கின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

## திருமணங்கள்

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்கு திருமண உதவிகள் தேவைப்பட்டால் செய்து தருகின்றோம். பல நிக்காஹ்களை அன்பகத்திலேயே ஏற்பாடு செய்துள்ளோம். 2022 பிப்ரவரி முதல் 2025 டிசம்பர் வரை 82 திருமணங்களை செய்து வைத்திருக் கின்றோம்.

வாழ்க்கையை உடனேயே தொடங்கிட ரூபாய் 20,000 அளவுக்கு வீட்டு சாமான்களுக்கு உதவி செய்கின்றோம்.

இப்போது இஸ்லாமியக் கல்வியை ONLINE-இலும் தருகின்றோம். தொடர்புக்கு - 8870960662 (பார்க்க பாக்ஸ் செய்தி)

## ஜனாஸா உதவிகள்
## 18 வருடங்களாக தொடரும் சேவை

வருடந்தோறும் பல கிராமங்களில் நமது அழைப்பு (இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் அழைப்பு) சென்று சேருகின்றது.

சில கிராமங்களில் மக்கள் குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்றார்கள். சிலபல நேரங்களில் ஒருவர் தழுவுகின்றார். அல்லது ஒருவர் மட்டும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்றார்.

இந்நிலையில் அந்த ஒருவர் மரணித்துவிட்டால், அந்த ஜனாஸாவுக்கு ஆற்ற வேண்டிய அடிப்படை கடமைகளுக்கும் என்ன செய்வது? சுத்தம் செய்வது போன்றவற்றிற்கு என்ற தயக்கம் அந்தக் குடும்பத்திற்கில்லை. உடனேயே அன்பகத்தை தொடர்புகொண்டால், விரைந்து சென்று எல்லா அடிப்படை பணிகளையும் நிறைவேற்றி விடுவார்கள்.

அத்தோடு பக்கத்து முஹல்லாக்களிடம் பேசி அடக்கம் செய்யும் இடத்தையும் பெற்று விடுவார்கள்.

எங்கள் அழைப்பின் தொடக்கக் காலங்களில், முஹல்லாக்கள் சில தயக்கங்கள் இருக்கவே செய்தன. நமது தொடர் அறிவுரைகள், தூண்டுதல் களால் முஹல்லாக்களில் மாற்றங்கள் பல.

இப்போதெல்லாம் முஹல்லாக்களிடமே தகவல் சொன்னால் போதும், அவர்களே ஜனாஸாக்களை சுத்தம் செய்வதிலிருந்து அடக்கம் செய்வதுவரை அனைத்தையும் முடித்துவிடுகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

சில முஹல்லாக்களில் நமது கல்வி நிறுவனம் வரும் வரைக்கும் ஏற்படும் செலவுகளை அவர்களே




ஏற்றுக்கொள்கின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

இதனால் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர்களை முஹல்லாக்களோடு சேர்த்திடுவது மிகவும் முக்கியம். இதனை இப்போது முழு வீச்சில் செய்து கொண்டிருக்கின்றோம். அல்லாஹ்வின் கருணை இப்போது முஹல்லாக்கள் இந்த பணியில் ஆர்வம் தெரிவிக்கின்றனர்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பலர் பல முஹல்லாக்களின் நிறுவாகத்திலும் இடம் பெறுகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

**46 ஆண்டுகளாக களத்தில் நிற்கும் எங்களைப் பொறுத்தவரை இஃதோர் முக்கிய மனநிறைவு. காரணம் தொடக்கக் காலத்தில் பல எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியதிருந்தது.** ■

## ஆன்லைன் வகுப்பு
### கும்பகோணம்-மேட்டுப்பாளையம்




இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற சகோதரிகளுக்கு ஆன்லைன் வகுப்புகள் நடைபெற்று வருகின்றது. இதில் இஸ்லாத்தை ஏற்ற 5 சகோதரிகளுக்கு அல்குர்ஆன் அரபி மொழியில் அடிப்படைசட்டங்களைபின்பற்றிஅல்குர்ஆனை கற்று கொள்கின்றார்கள். இஸ்லாமிய அடிப்படை கல்வியை 6 சகோதரிகளுக்கு பயிற்சிகள் அளிக் கப்பட்டு வருகின்றது. ஒருசில சகோதரிகளுக்கு அவர்களுக்கு தேவையான சந்தேகங்கள், சட்ட உதவிகள், குடும்பம் சார்ந்த பிரச்சனைகளை எப்படி அணுகுவது, அதை எப்படி எதிர் கொள்வது என்பதற்கான ஆலோனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கி வருகின்றோம்.

அல்ஹம்துலில்லாஹ்

vaigarai velicham official

# வக்பை இல்லாமலாக்கும் வக்பு திருத்தச் சட்டம் (UMEED)





**காயல் மகபூப்,**

மாநில செயலாளர், மஹல்லா ஜமாஅத் ஒருங்கிணைப்பு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்


**நம்பிக்கை** என்று பொருள் படும் UMEED என்ற வார்த்தையின் விரிவாக்கமாக "ஒருங்கிணைந்த வக்பு மேலாண்மை, அதிகாரம் அளித்தல், திறன் மற்றும் மேம்பாடு சட்டம்" என்ற பெயரில் வக்பு திருத்த சட்டம் இந்திய நாடாளுமன்ற மக்களவையில், ஆதரவு 288, எதிர்ப்பு 232 என்ற நிலையில் ஏப்ரல் 2, 2025 அன்றும், மாநிலங்களவையில் ஆதரவு 128, எதிர்ப்பு 95 என்ற நிலையில் ஏப்ரல் 3, 2025 அன்றும் நிறைவேற்றப்பட்டு இந்திய முஸ்லிம்கள், மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளின் நம்பிக்கை மற்றுமின்றி இந்திய அரசமைப்புச் சட்டமும் தகர்க்கப்பட்டுள்ளது.

வக்பு திருத்த மசோதா ஆகஸ்ட் 8, 2024 அன்று நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட போது பெரும் எதிர்ப்பால் கூட்டு நாடாளுமன்ற குழுவிற்கு அனுப்பப்பட்டது. ஆனால் இக்குழு பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக் கூட்டணி எம்பிக்கள் பெரும்பான்மையாகவும், எதிர்க்கட்சி எம்பிக்கள் சிறுபான்மையாகவும் இடம்பெறும் வகையில் 31 பேருடன் அமைக்கப்பட்டதால் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்கள், பரிந்துரைகள், திருத்தங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு பாஜகவின் ஒருதலை பட்சசட்டமாகவே இது கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் 200 நாள் செயல்பாடுகள், மக்களின் ஒரு கோடி கருத்துக்கள், மக்களவை, மாநிலங்களவையின் 30 நேர விவாதங்கள் அனைத்துமே வீணாகி விட்டன.

இச்சட்டத்தின் மூலம் நாட்டை ஆளும் பாஜக அரசு இந்திய முஸ்லிம்கள் மீது துல்லிய தாக்குதலை நடத்தியுள்ளது.

இது தொடர்பான வாத பிரதிவாதங்கள் எங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் பலரும் பல விதமான கருத்துக்கள் கூறுகின்றனர். எனவே உண்மைகளை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக இதனை பதிவிடுகிறேன்.

**''வக்பு'' என்றால்? எப்போது? எப்படி?**

இறுதி இறை தூதர் நபிகள் நாயகம் (ஸல்) கிபி 571 இல் பிறந்து 40 வது வயதில் நபித்துவம் அளிக்கப்பட்டு,அவர்கள்மூலம் மனிதகுலத்திற்கு திருக்குர்ஆன் அருளப்பட்டு கிபி 632ல் மரணம் அடைந்தார்கள். அவர்களின் வாக்கும் வழிமுறையும் ஹதீது என்பதாகும்.

திருக்குர்ஆன் ஹதீது அடிப்படையிலானது ஷரியத் சட்டம். ஆங்கிலேய ஆட்சியில் இதனை 'முஹம்மடன் லா' என்றனர். இன்று 'முஸ்லிம் தனியார் சட்டம்' என்கின்றனர்.

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்; அவனது தூதர் முஹம்மது நபி (ஸல்) என்பதை ஏற்றுக் கொண்டவர்கள் முஸ்லிம்கள். இவர்கள்

பின்பற்றும் மதம் இஸ்லாம்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் உமர் (ரழி) அவர்கள் தமது நிலத்தை தர்மம் செய்ய விரும்புகிறேன் என்றார்கள்.

“உமரே உமது சொத்தை தர்மம் செய்யுங்கள்; அதனால் அதனை விற்கவோ, பின்னர் உரிமை கோரவோ முடியாது. அந்த சொத்தை அல்லாஹ் வுக்கு அர்ப்பணம் செய்துவிட்டால் சொத்துரிமை அல்லாஹ்வுக்கும், அதன் பயன் மக்களுக்கும் என்றாகிவிடும்“ என்றார்கள் நபிகளார்.

ஆக தர்ம நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படுவது வக்பு. வக்பு என்ற அரபிச் சொல்லின் பொருள்படி இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சொத்து உரிமையும் பாத்யதையும் தடுத்து நிறுத்தப்பட்டு நிரந்தரமாக இறைவனுக்கு உரியதாகிவிடும். அதனால்தான் ஒருமுறை வக்பு செய்யப்பட்டவை என்றென்றும் வக்பு. அது மாற்றத்தக்கதல்ல என வரையறுக்கப்பட்டுள்ளது.

வக்பு செய்பவர் “வாகிப்” என்று அழைக்கப் படுவார். வக்பு நோக்கத்தை குறிப்பது “வக்பு நாமா” ஆகும். வக்பை நிர்வகிப்பவர் “முத்த வல்லி” என்று அழைக்கப்படுவார்.

எல்லா வக்புகளையும் மேலாண்மை செய்வது “மாநில வக்பு வாரியம்“. மாநில வக்பு வாரியங்களுக்கு தலைமையாக செயல் படுவது “சென்ட்ரல் வக்பு கவுன்சில்” இவைகள் வக்பு சட்டத்தின்படி செயல்படக்கூடிய சார்பு அரசு அமைப்புகள் ஆகும். ஆனால் எந்த ஒரு வக்பு சொத்தும் வக்பு வாரியத்திற்கு சொந்த மானது அல்ல. அவை அந்தந்த வக்புகளுக்கு உரியவை. வக்பு போர்டு சொத்து என்றெல் லாம் ஒன்று இல்லவே இல்லை.

**இந்தியாவில் முஸ்லிம்கள் ஆட்சி:**

நபிகள் நாயகம்(ஸல்) பிறப்புக்கு முன்பே அரபிகள் இந்தியர்களுடன் வர்த்தக உறவுகளை ஏற்படுத்தி இருந்தார்கள். நபிகளாரின் மறைவுக்கு பின் இரண்டாம் கலீபா உமர் (ரழி) ஆட்சிக் காலத்திலேயே ஹகம் பின் ஆஸ் என்பவர் குஜராத்தில் கால் பதித்தார்.

உமையாக்களின் கிலாபா ஆட்சியின் போது கிபி 711 இல் ஸ்பெயின் வெற்றி கொள்ளப்பட்டது. கி.பி. 712ல் சிந்துவை முஹம்மது பின் காசிம் ஆட்கொண்டார். இந்தியாவில் முஸ்லிம் சாம்ராஜ்யத்திற்கு அடித்தளம் அமைத்த குத்புதீன் ஐபக், முஹம்மது கஜினி, பிரிதிவிராஜ் சௌகானை தோற்கடித்து ஆட்சி அமைத்த முகம்மது கோரி என தொடங்கி கிபி 1857ல் முதல் சுதந்திரப் போரை தலைமையேற்று நடத்திய முகலாய சக்கரவர்த்தி பகதூர்ஷா ஜாபர் கைது செய்யப்பட்டு அவரது ஆட்சி



முடிவுக்கு கொண்டு வரப்படும் வரை இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சியே நடைபெற்றது.

ஆக சுமார் எட்டு நூற்றாண்டுகளில் இஸ்லாம் மதத்திற்காக ஆட்சி நடைபெற்றிருந்தால் இந்தியாவில் இஸ்லாத்தை தவிர வேறு மதம் இருந்திருக்காது. முஸ்லிம்களுக்காக ஆட்சி நடைபெற்றிருந்தால் முஸ்லிம்களில் இன்று ஒருவர்கூட ஏழையாக இருந்திருக்க மாட்டார்கள்.

முகலாயப் பேரரசர் அக்பரை போன்று அவரது கொள்ளுப் பேரர் ஔரங்கசீபும் 50 ஆண்டுகாலம் ஆட்சி செய்தவர். அக்பரின் மனைவிகள் அனைவரும் ரஜபுத்திரர்கள். ஆக ஔரங்கசீபும் ரஜபுத்திர வம்சாவளி. மௌரிய சாம்ராஜ்யத்திற்கு பின் மிகப்பரந்து விரிந்த நிலப்பரப்பை ஒரேகுடையின்கீழ்,போக்குவரத்து தொலை தொடர்பு வசதிகள் அற்ற அந்தக் காலத்தில் 50 ஆண்டுகள் ஆட்சி செய்வது என்பது கொடுங்கோல் ஆட்சியாக இருந்தால் சாத்தியமா என்பதை நடுநிலையாளர்கள் சிந்திக்க வேண்டும். முகலாய அரசர்களை விமர்சிக்க் கூடியவர்கள் அசோகரின் கலிங்கப் போரை மறந்து விடுகின்றனர்.

அக்பரின் ஆட்சி காலத்தில் தான் கி.பி. 1600 டிசம்பர் 31 அன்று ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் நுழைந்தது.

வர்த்தகத்திற்காக வந்தவர்கள் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர். நன்றாக காலூன்றிய பின் தங்கள் சட்டங்களை இந்தியர்கள் மீது திணித்து சட்டத்தின் ஆட்சி என்றனர்.

## வக்பு சொத்துக்களை காப்பாற்ற முஸ்லிம் லீக் சட்ட நடவடிக்கை:

1850ல் வக்பு நிலங்களை அரசே கையகப் படுத்திக் கொள்ள வேண்டும் என தொடரப்பட்ட வழக்கில், "ஆங்கிலேய சட்ட அடிப்படையில் உள்ள தர்ம காரியங்களே சரியானது; எனவே வகப் செல்லுபடி ஆகாது "என்று தீர்ப்பளித்த 'லண்டன் பிரிவியூ கவுன்சில்', 'தர்மம் வீட்டி லிருந்தே தொடங்குகிறது; நெருங்கிய உறவு களுக்கு தர்மம் அளிப்பது சிறந்தது' என நபிகள் நாயகம்(ஸல்) கூற்றுப்படி வக்பு ஷரியத் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற முஸ்லிம் தரப்பு வாதத்தை ஏற்க மறுத்தது. இதற்கு முஸ்லிம்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

1857ல் முதல் சுதந்திரப் போர் நடைபெற்று அது அடக்கப்பட்ட பின் இந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணியின் வசம் வந்தது.

1858 நவம்பர் 1 அன்று அலகாபாத்தில் வெளியிடப்பட்ட மகாராணியின் பிரகடனத்தில் இந்திய மக்களுக்கு பல வாக்குறுதிகளை அறிவித்திருந்தார்.

இந்நிலையில்தான் சர்.சையத் அஹ்மத் கான் 1859 இல் முஸ்லிம்களிடையே கல்வி, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த தொடங்கினார்.

கிபி 1860 முதல் 1880 வரை இனாம் என்ற நன்கொடை சொத்துக்கள் இனாம் கமிஷனர்கள் மூலம் கண்டறியப்பட்டு அவைகளுக்கு 'இனாம் ஃபேர் ரெகார்ட் 'என்ற சான்றிதழ் வழங்கப் பட்டது. அதுதான் இன்று ஐ.எஃப்.ஆர் என்று அழைக்கப்படும் முக்கிய ஆவணமாகும். ஆங்கிலேய ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட இவை ஆவண காப்பகத்தில் இன்றும் பத்திரப்படுத்தப்பட்டுள்ளது.

1885 டிசம்பர் 28இல் இந்திய தேசிய காங்கிரஸும்,

1906 டிசம்பர் 31இல் அகில இந்திய முஸ்லிம் லீகும் தொடங்கப்பட்டன.

வக்பு பிரச்சனையில் இஸ்லாமிய ஷரியத்துக்கு விரோதமாக லண்டன் பிரிவியூ கவுன்சில் அளித்த தீர்ப்பை மாற்ற பிரிட்டிஷ் அரசிடம் வேண்டிய போது, 'தாங்களாக எதுவும் செய்ய இயலாது; முஸ்லிம் லீக் அதற்கான சட்ட முயற்சி எடுக்கட்டும்' என்றனர். அதற்கான முயற்சி மேற்கொள்ள விடுக்கப்பட்ட வேண்டுகோளை தொடர்ந்து சட்ட மேதை முஹம்மது அலி ஜின்னா தயாரித்த 'வக்பு பாதுகாப்பு சட்ட மசோதாவை' 1910 டிசம்பர் 28இல் நாக்பூரில் பாரிஸ்டர் நபியுல்லாஹ் தலைமையில் நடந்த முஸ்லிம் லீக் மாநாடு ஒருமனதாக அங்கீகரித்தது.

முஸ்லிம் லீக் மேற்கொண்ட முயற்சியின்

பலனாக 1909 இந்திய கவுன்சில் சட்டம் கொண்டுவரப்பட்டது. சமூக நீதிக்கு வித்திட்ட முதல் சட்டம் இதுதான்.

வக்பு சொத்தை காப்பாற்றும் முஸ்லிம் லீக்கின் தொடர் முயற்சிகளால் ‘1913ல் முஸல்மான் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம்‘ கொண்டுவரப்பட்டது.

இறையச்சம், தர்மம் ஆகிய காரியங்களுக்காக ஒரு முஸ்லிம் அவரது எந்த சொத்தையும் நிலையான அர்ப்பணம் செய்வதே வக்பு என இச்சட்டம் இலக்கணம் வகுத்தது. காலப் போக்கில் இச்சட்டத்தில் மேலும் பல திருத்தங்கள் தேவைப்பட்டன.

இதனால் “முஸல்மான் வக்பு சட்டம் 1923” கொண்டுவரப்பட்டது. வக்புபை நிர்வகிப்போர் பலர் தவறாக பயன்படுத்துகின்றனர் என்ற உணர்வு மேலோங்கி வருகிறது, சில முத்த வல்லிகள் வக்பை நிர்வகிக்க முற்றிலும் தகுதி யற்றவர்களாக உள்ளனர் ;எனவே வக்பு சொத்துக்களை சிறப்பாக நிர்வகிப்பதையும், அத்தகைய சொத்துக்கள் தொடர்பான முறையான கணக்குகளை வெளிப்படைத்தன்மையோடு வைத்திருப்பதையும், வெளியிடுவதையும் உறுதி செய்ய இச்சட்டம் வழிவகை செய்கிறது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனிடையே, ‘முஸல்மான் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம் 1913’, அதற்குப் பிந்தைய வக்புகளை மட்டுமே செல்லுடைமை யாக்குமே தவிர அதற்கு முந்தைய வக்புகளை செல்லுடைமையாக்காது என பல நீதிமன்றங்கள் தீர்ப்பளித்து வந்தன.

எனவே இதற்கு மாற்று தீர்வு காண கோரிக்கை எழுந்தது. இதனால் “முஸல்மான் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம் 1930” கொண்டுவரப்பட்டு இக்குறை நிவர்த்தி செய்யப்பட்டது .

## 1954, 1995, 2013 வக்பு சட்டங்கள்

இந்திய திருநாடு விடுதலை அடைந்து அரசியலமைப்புச் சட்டம் ஏற்கப்பட்டு ஜனவரி 26, 1950ல் நடைமுறைக்கு வந்த பின் நான்கு ஆண்டுகளில்,அதாவது மே 21, 1954 அன்று ‘தி கெஸட் ஆஃப் இந்தியா’வில் வெளியிடப்பட்ட ‘தி முஸ்லிம் வக்ப்ஸ் ஆக்ட் 1954’ சட்டம் பல பரிணாமங்களை உள்ளடக்கியதாக கொண்டு வரப்பட்டது.

சிறப்பான நிர்வாகம், தீவிரமான கண்காணிப்பு என்பதை அடிப்படையாகக் கொண்ட இச்சட்டம், முத்தவல்லியாக இருப் பதினாலேயே ஒரு வக்பின் முழு பலனையும் முத்தவல்லி பெற முடியாது என கூறியது.

வாய்மொழி வசியத் மூலமாக அர்ப்பணிக்கப்பட்ட வக்பு, அனுபவ உரிமை மூலமாக கிடைக்கப்பெற்ற வக்பு, மஸ்ரத்துல் கித்மத் என்ற பணிவிடையின் மூலம் பெறப்பட்ட வக்பு, வக்பு அலல் அவுலாத் என்ற குடும்ப வாரிசுகள் அனுபவிக்கும் வக்பு என வக்பு இச்சட்டத்தில் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

சன்னி மற்றும் ஷியா வக்புகள் தனித் தனியாக பதிவு செய்யப்பட வேண்டும், ஒவ்வொரு வக்பும் சர்வே ஆணையர்களைக் கொண்டு அளந்து சர்வே செய்யப்பட வேண்டும் என வரையறை செய்திருந்தது இச்சட்டம்.

இதன் அடிப்படையில் தான் புர்ஃபார்மா ரிப்போர்ட் என்ற மூல அறிக்கை தயார் செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. இந்த மூல அறிக்கையின் அடிப்படையில் தான் வக்பு வாரியங்கள் ஒவ்வொரு வக்பிலும் முடிவுகளை எடுக்கின்றன.

1954ஆம் ஆண்டு வக்பு சட்டத்தின் இன்னொரு முக்கிய அம்சம், மாநில வக்பு வாரியங்கள் 11 பேருக்கு மிகாமலும், சென்ட்ரல் வக்பு கவுன்சில் 22 பேருக்கு மிகாமலும் அமைக்கப்பட்டு வக்பு நிர்வாகங்களை மேலாய்வு செய்ய வேண்டும் என்பதாகும்.

இதில் குறிப்பிட்டு காட்ட வேண்டிய ஒரு விடயம், இந்த உறுப்பினர்கள் முஸ்லிம்களாகவும், 21 வயதுக்கு மேற்பட்டவராகவும், நல்ல மனநிலை உள்ளவராகவும், திவால் இல்லாதவராகவும், தண்டனை பெறாதவராகவும் இருக்க வேண்டும் என்பதாகும்.

1954 வக்பு சட்டம் 1959, 1964, 1969 மற்றும் 1984ஆம் ஆண்டுகளில் சில சில திருத்தங்கள் செய்யப்பட்டு மேலும் செம்மைப்படுத்தப் பட்டது.




1995ஆம் ஆண்டு வக்பு சட்டம் 43/1995 கொண்டு வரப்பட்டு நாளது தேதி வரை அச்சட்டமே நடைமுறையில் இருந்து வந்தது.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீங்களாக இந்தியா முழுமைக்கும் இச்சட்டமே உரியதாகும் என குறிப்பிடப்பட்ட தோடு, துர்கா, அஜ்மீர் தர்கா ஷெரீப்களுக்கு இச்சட்டம் பொருந்தாது எனவும் அறிவிக்கப்பட்டது.

வக்புகளை கண்டறிதல், அதன் பட்டியல் வெளியிடுதல்,வக்புதீர்ப்பாயம்,அதன்அதிகாரம், மத்திய வக்பு குழு, மாநில வக்பு வாரியம், அவைகளின் உறுப்பினர்கள், கூட்டங்கள், குழுக்கள், தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர்களின் அதிகாரங்கள், மற்றும் வாரியத்தின் அதிகாரங்கள், செயல்பாடுகள், வக்புகளை பதிவு செய்தல், கணக்குகளை தணிக்கை செய்தல், நேரடி நிர்வாகம், முத்த வல்லி கடமைகள், முஸ்லிம் அல்லாதவர்கள் கொடையாக அளித்த சொத்துக்களை வக்பு சொத்தாக ஏற்று பராமரித்தல் என எல்லா அம்சங்களும் பொருந்தியதாக இச்சட்டம் அமைந்திருந்தது.

இச்சட்டப்படியே வக்பு வாரியங்கள்,வக்பு தீர்ப்பாயங்கள் மட்டுமின்றி, உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களும் வகப் விவகாரங்களை செயல்படுத்தின.

இச்சட்டத்தில் 2013ஆம் ஆண்டு செய்யப் பட்ட திருத்தத்தின்படி வாரியங்களில் இரண்டு பெண் உறுப்பினர்கள் இடம் பெற வேண்டும் என்பதோடு தீர்ப்பாயம் பற்றியும் தெளிவு படுத்தப்பட்டது.

மிக முக்கியமாக சொத்து ஒன்று வக்பு சொத்தா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் வக்பு வாரியங்களுக்கு வழங்கப்பட்ட பிரிவு 40 இதில் இணைக்கப்பட்டது.

வக்பு சொத்துக்களை விற்கவோ, மாற்றவோ, இன்னொரு வக்புக்கு அன்பளிப்பு செய்யவோ முடியாது என்கின்ற முக்கியமான சரத்தும் இச்சட்டத்தில் கொண்டுவரப்பட்டது.

இச்சட்டத்தால் வக்பு சொத்துக்கள் விற்பனை அல்லது பரிமாற்றம் செய்யப்பட்டு வந்தது முற்றிலுமாக தடை செய்யப்பட்டது.

இந்த சட்டங்கள்தான் இப்போது நீர்த்துப் போக செய்யப்பட்டு நம்பிக்கை என்ற பொருள்படும் UMEED சட்டம் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மிகவும் அவசர அவசரமாக குடியரசு தலைவர் ஒப்பதலும் பெறப்பட்டு ‘தி கெஸ்ட் ஆஃப் இந்தியா’ ஏப்ரல் 5, 2025 அரசிதழிலும் வெளியிடப்பட்டு விட்டது.

### இந்த புதிய சட்டம் சொல்வது என்ன? இதனால் என்ன பாதிப்பு?

நரேந்திர மோடி அவர்கள் தலைமையில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சி முதல் முறையாக அமைந்தபோது முஸ்லிம்களின் தனித்த

அடையாளங்கள் குறிவைக்கப்பட்டன.

இரண்டாவது ஆட்சியில் பல செயல்படுத்தப் பட்டன. மிச்சம் மீதி இருப்பவை இந்த மூன்றாவது ஆட்சியில் கவனிக்கப்படுகின்றன.

டிசம்பர் 8,2023 அன்று நாடாளுமன்றத்தில் பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர் ஹரிநாத் சிங், ‘வக்பு வாரியம் தேவை இல்லை; வக்பு சொத்துக்களை பொது சொத்து ஆக்க வேண்டும்‘ என்ற தனிநபர் மசோதாவை தாக்கல் செய்தார்.

173 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி இதே கோரிக்கையை முன்வைத்து ‘லண்டன் பிரிவியூ கவுன்சிலில்’ எந்த தீர்ப்பை பெற்றிருந்ததோ அதுவே இந்த தனி நபர் மசோதாவின் கோரிக்கையாக இருந்தது.

இந்திய முஸ்லிம் சமூகம் அதை எதிர்த்து மேற்கொண்ட முயற்சியின் பலனாகத்தான் 1913இல் ‘முஸல்மான் வக்பு செல்லுடைமை யாக்கும் சட்டம்‘ கொண்டுவரப்பட்டது.

அன்று தொடங்கி 2013ஆம் ஆண்டு வக்பு சட்டங்கள் வரை 10 முறை திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு வக்பு மிகச் சிறப்பாக நடைபெற வழிவகை செய்யப்பட்டது.

ஆனால் 2013க்கு பின் 12 ஆண்டுகள் கழித்து, 173 ஆண்டுக்கு முந்தைய லண்டன் பிரிவியூ கவுன்சில் நிலைப்பாடு இன்று சட்ட மாக்கப்பட்டு இருப்பது என்பது, ‘அன்று வெள்ளையை ஏகாதிபத்திய வெளிப்பாடு; இன்று இந்துத்துவ ஆதிக்க நிலைப்பாடு என்றால் அது மிகையல்ல.

மோடி ஆட்சியின் இரண்டாவது காலகட்டத்தில் நாடாளுமன்ற மக்களவை காலம் முடிந்து, மூன்றாவது காலகட்டத்தில் அந்த தனிநபர் மசோதாவிற்கு பதில் அரசின் சார்பிலேயே மசோதா கொண்டு வரப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட மசோதாவை முன்மொழிந்தவர் திரு. கிரண் ரிஜிஜூ. பௌத்த மதத்தைச் சார்ந்தவர், அருணாசலப் பிரதேசத்தவர். இந்திய பௌத்தர்கள் இந்துக்களாக கபளீகரம் செய்யப்பட்டது போல், இந்திய அருணாச்சல பிரதேசத்தை சீனா கபளீகரம் செய்து வருகிறது.

முஸ்லிம்களின் வக்பு நிலங்களைப் பற்றி கவலைப்படுவதாக கூறும் இவர், சொந்த மாநிலத்தில் சீனா ஆக்கிரமித்து வைத்துள்ள நிலங்களைப் பற்றி என்றாவது கவலைப்பட்ட துண்டா?

மோடி ஆட்சியில் இதற்கு முன் இருந்த சிறுபான்மை நலத்துறை அமைச்சர்கள் முக்தார் அப்பாஸ் நக்வி 1954 வக்பு சட்டம் போன்றும், அவருக்கு பின்வந்த ஸமிதி இராணி 1995 வக்பு சட்டம் போன்றும் ஆக்கப்பட்டு விட்டனர்.

கிரண் ரிஜிஜூ கதையும் அப்படித்தான் ஆகும்.

‘வக்பு சட்டத் திருத்த மசோதா 2024’ அந்த ஆண்டு ஆகஸ்ட் 8 அன்று நாடாளுமன்றத்தில் இவரால் முன்மொழியப்பட்டபோது கடும் எதிர்ப்பு ஏற்பட்டது.

1995 வக்பு சட்டம் திருத்தப்படுவதாகவும் 44 திருத்தங்கள் செய்திருப்பதாகவும் கூறினார். ஆனால் 45 திருத்தங்கள், 33 புதிய உள்ளீடுகள், 37 நீக்கப்பட்ட விதிகள் என 115 திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

இதனால் எழுந்த எதிர்ப்பால்தான் ஜே. பி.சி. என்ற கூட்டு நாடாளுமன்ற குழுவிற்கு இச்சட்டம் அனுப்பப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. ஆனால் அது வெறும் கண்துடைப்பு நாடகம் என்பது கண்கூடாக தெரிந்துவிட்டது.

இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆண்ட 1913, 1923, 1930 காலகட்டங்களில் “முஸல்மான் வக்பு செல்லுடைமையாக்கும் சட்டம் ‘என்றே கொண்டுவரப்பட்டது.

இந்திய விடுதலையை தொடர்ந்து இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் 1954, 1995, 2013 காலகட்டங்களில் “வக்பு சட்டம் “என்றே குறிப்பிடப்பட்டு வந்தது.

ஆனால் 2025ல் பாஜக அரசு கொண்டு வந்த இந்த சட்டம் “வக்பு” என்ற வார்த்தை இல்லாமல் இந்தியில் நம்பிக்கை என பொருள்படும் “UMEED” என்ற பெயரால் கொண்டுவரப்பட்டுள்ளது.


vaigarai velicham official

## இந்து கோயில், தேவஸ்தானத்திற்கு தர்மகர்த்தா, அறங்காவலராக முஸ்லிம் வர முடியுமா?

பன்முகத்தன்மை கொண்ட இந்த தேசத்தில் பல்வேறு மதத்தவர், இனத்தவர், மொழி பேசுவோர் வாழ்கின்றனர். அவரவர் சார்ந்த மத நிறுவனங்களை, அவரவரின் சமுதாய சொத்துக்களை அவரவரே நிர்வகிக்கின்றனர்.

இந்து தேவஸ்தானம் அல்லது கோயிலுக்கு அறங்காவலர் அல்லது தர்மகர்த்தாவாக ஒரு முஸ்லிம் நியமிக்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத வாதம்.

அதேபோன்றே வக்பு சொத்துக்களை ஆளுமை செலுத்தும் வக்பு வாரியங்களுக்கு முஸ்லிம் அல்லாத உறுப்பினர் இருவர் நியமிக்கப்படுவர், இதில் இடம்பெற வேண்டிய நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் முஸ்லிமாக இருக்க வேண்டும் என அவசியம் இல்லை எனக் குறிப்பிடுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத வாதம் தானே!

சென்ட்ரல் வக்பு கவுன்சிலில் இடம் பெறும் 22 பேரில் 12 பேரும், மாநில வக்பு வாரியங்களில் இடம் பெறப்போகும் 11 பேரில் 7 பேரும் முஸ்லிம் அல்லாதவர்கள் வருவதற்கு இந்த புதிய சட்டம் வழிவகை செய்துள்ளது.

இந்த புதிய சட்டம், “சொத்து ஒன்று வக்பு சொத்தா என்று வக்புவாரியம் முடிவு செய்யும்” என அதிகாரம் வழங்கும் பிரிவு 40ஐ நீக்கி உள்ளது.

இஸ்லாத்தைப் பின்பற்றாத பிற மதத்தவர் கொடையாக அளிக்கும் சொத்துக்களும் வக்பு சொத்துக்களே, மஸ்ஜித், ஈத்கா, இமாம் பரா, தர்கா,மக்பரா கபரஸ்தான், சத்திரம் போன்றவைகளுக்கு உதவும் நோக்கில், அசையும் அல்லது அசையா சொத்து பிற மதத்தவர்களால் அளிக்கப்பட்டிருந்தால் அதை பராமரித்து பாதுகாக்க வேண்டும் என்ற 1995 வக்பு சட்ட 104 வது பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

ஒருவர் வக்பு செய்ய விரும்பினால் அவர் ஐந்து ஆண்டு காலம் இஸ்லாத்தில் இருந்தார் என நிரூபிக்க வேண்டும் என புதிய சட்டம் சொல்கிறது. இது தனிமனித சுதந்திரத்தை பறிக்கும் ஆபத்தான சரத்து இல்லையா?

முஸ்லிம்களைப் பொறுத்தவரை “எண்ணங்களின் அடிப்படையிலேயே செயல்கள்” என்ற நம்பிக்கை கொண்டவர்கள். ஐந்து கடமைகளை நிறைவேற்றும்போது கூட மனதளவில் அதனை செய்கிறோம் என நினைவுகூர்ந்தால் தான் அந்தக் கடமை நிறைவேறும்.

‘நான் இந்த சொத்தை இந்த காரியத்திற்காக அல்லாஹ்வுக்கு அர்ப்பணிக்கிறேன், என மனதளவில் சொன்னாலே அது வக்பு ஆகிவிடும். ஆனால் இனி எழுத்து மூலம் பதிவு செய்தால் மட்டுமே வக்பு செய்ய முடியும்.

சொத்தின் உரிமை குறித்து தாவா எழுந்தால் வக்பு வாரியம் அதை விசாரித்து முடிவு செய்து வந்தது. அந்த உரிமை புதிய சட்டப்படி அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேல் முறையீடும் செய்ய முடியாது.

ஒரு சொத்து வக்பா என்பதும், வக்பு பதிவு செய்வதும் மாவட்ட ஆட்சியர் அல்லது அவருக்கு மேலான சார்பு செயலாளர் அந்தஸ்து உள்ள அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய வக்பு சொத்துக்களின் மாவட்ட ஆட்சியரின் முடிவே இறுதியானது. அரசு வசமுள்ள சொத்துக்கள் வக்பு சொத்து என அடையாளம் காணப்பட்டால் அது வக்பாக கருத முடியாது என புதிய சட்டம் சொல்கிறது.

தாவாக்களை விரைந்து முடிக்க வக்பு தீர்ப்பாயங்களை அதிகரிக்க வேண்டும் என்று கோரப்படும் நிலையில், வக்பு தீர்ப்பாயங்களின் அதிகாரமே கேள்விக்குறியாக்கப்பட்டு விட்டது.

சுருக்கமாக சொல்ல வேண்டுமேயானால் வக்பு சொத்துக்களை அரசோ, அதிகாரம் படைத்தவர்களோ என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

இருக்கின்ற பள்ளிவாசல், தர்கா போன்ற வழிபாட்டுத் தலங்கள் அப்படியே இருக்கலாம். அவைகளும் ஆவணங்கள் இல்லாமல் வசியத் என்ற வாய்மொழி அடிப்படையில் வந்திருந்தால் கேள்விக்குறியே.

வக்பு “பை யூசர்” என்ற பயன்பாட்டின் அடிப்படையில் உள்ள வக்புகள் வக்பு என்ற

தகுதியை இழந்து விடும்.

முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் பள்ளி வாசல்கள், அடக்கம் செய்யப்படும் கபரஸ் தானங்கள் வக்புபாக கருதப்பட மாட்டாது. ஆவணங்கள் இல்லாமல் ஆண்டாண்டு காலமாக பயன்பாட்டில் உள்ள அவைகளின் எதிர்காலம் என்னவாகும் என தெரியாது.

வக்பு சொத்துக்களை பாதுகாப்பதற்கு உட்படுத்தப்படக்கூடாது. பத்திரப்பதிவுக்கு என்பதற்காகத்தான் பூஜ்ஜிய மதிப்பு ஆக்கப்பட்டு இருந்தது. இந்த புதிய சட்டம் வக்பையே பூஜ்யமாக்கி விட்டது.

## திருச்செந்துறை விவகாரம்தான் புதிய வக்பு சட்டம் வர காரணமா?

வக்பு திருத்தச் சட்டம் கொண்டுவர திருச்செந்துறை விவகாரம் தான் காரணமாக இருந்தது என்ற திட்டமிட்ட பரப்புரை சிலரால் செய்யப்பட்டு வருகிறது.

அடிப்படையில் சில விடயங்களை அனைவரும் அறிய வேண்டியது அவசியம்.

இந்தியாவுக்கென அரசியலமைப்பு சட்டத்தை அரசியல் நிர்ணய சபை உருவாக்கிய போது 22 குழுக்கள் அமைக்கப்பட்டன. அடிப்படை உரிமைகள் மற்றும் சிறுபான்மை யினர் குழுவுக்கு சர்தார் வல்லபாய் பட்டேல் தலைவர். முஸ்லிம்களின் இட ஒதுக்கீடு, தனித் தொகுதி உரிமைகளை பறிக்கச் செய்த இவர்தான் வக்பு சொத்துக்கள், மத வழிபாடு, வாழ்வுரிமை உள்ளிட்ட விவகாரங்களில் வாக்குறுதியும் வழங்கியவர்.

ஜனவரி 26, 1950 அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின் அதன் அடிப்படையில் அரசு நிர்வாகத்துறைகள் சீரமைக்கப்பட்டன.

சாரு சந்திர பிஸ்வாஸ் மத்திய சட்டம் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராக இருந்த போது வக்பு சட்டம் 29/1954, மே 24, 1954 இல் கொண்டுவரப்பட்டது. அப்போது இந்த துறையின் செயலாளர் கே .ஒய். பந்தர்கர்.

இந்த சட்டத்தின் பிரிவு 2 பகுதி 4ல் சர்வே கமிஷனர்களை நியமித்து வக்புகளை சர்வே செய்து பதிவு செய்ய குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்படி வக்பு சொத்துக்கள் அரசு நியமித்த சர்வே கமிஷனர் தலைமையில் நில அளவை செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மூல அறிக்கை என்ற புரஃபார்மா ரிப்போர்ட்தான் ஒவ்வொரு வக்பின் முக்கிய ஆவணமாக வக்பு வாரியங்களில் பாதுகாக்கப்படுகிறது.

வக்பின் பெயர், அதன் தன்மை,நிர்வாக முறை, பயனாளிகள், முத்தவல்லி மட்டுமின்றி அதன் சொத்துக்களும் இதில் குறிப்பிடப் பட்டிருக்கும்.

இந்த மூல அறிக்கை இப்போது உருவாக் கப்பட்டதல்ல. 1954 1958 காலகட்டங்களில் அரசின் நில அளவீட்டு குழுவினரால் அளவை செய்யப்பட்டு சர்வே கமிஷனர்களால் பதிவும் செய்யப்பட்டது.

தமிழ்நாடு வக்பு வாரியம் அமைக்கப்பட்டது பிப்ரவரி 18, 1958இல் தான். அப்போது திமுக ஆட்சியும் இல்லை; எம். அப்துல் ரஹ்மான் முன்னாள் எம்.பி, கே.நவாஸ் கனி எம்பி அப்போது பிறக்கவும் இல்லை.

அப்படியானால் திருச்செந்தூர் விவகாரம் ஏன் எழுந்தது என கேட்கிறீர்களா?

1995 வக்பு சட்டத்தில் வக்பு சொத்துக்களை விற்கவோ பரிமாற்றம் செய்யவோ, இன்னொரு வக்புக்கு அன்பளிப்பு செய்யவோ முடியாது என 2013ஆம் ஆண்டு முக்கிய திருத்தம் செய்யப்பட்டது.

இதனால் ஒரு சொத்து வக்பு சொத்தா என்ற பிரச்சனையில் வக்பு வாரியத்தில் தடையில்லா சான்று பெற்று சார்பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்தால்தான் பத்திரப்பதிவு செய்ய முடியும்.

இப்படி தடையில்லா சான்று கேட்டு விண்ணப்பித்ததில் 2013 முதல் 2020 வரை யிலான காலகட்டங்களில் பல முறைகேடுகள் நடைபெற்றன. இதனால் வக்பு சொத்துக்களை காப்பாற்றும் நோக்கில் அன்றைய தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட மற்றும் சிறுபான்மை நலத்துறை முதன்மை செயலாளர்


vaigarai velicham official

திரு கார்த்திக் ஐஏஎஸ் அவர்கள், 2020 பிப்ரவரியில் வக்பு சொத்துக்கள் "பூஜ்ஜிய மதிப்பு ;அதனை பத்திரப்பதிவுக்கு உட்படுத்த கூடாது" என அறிவித்தார்.

இந்த அறிவிப்புக்கு பின்னர் வக்பு அதிகாரி களிடம் தடையில்லா சான்று பெற்று பத்திரப் பதிவுகள்நடைபெற்றன.இந்த முறைகேடுகளை அறிந்த அரசு முதன்மை செயலாளர் திரு. கார்த்திக் ஐஏஎஸ் அவர்கள், தமிழ்நாடு பத்திர பதிவுத்துறை தலைவர் திரு. சிவனருள் ஐஏஎஸ் அவர்களுக்கு DO Letter No 1497686/tn/2021 நாள் 22.09.2021 கடிதம் எழுதி வக்பு வாரிய அதிகாரிகளின் தடையில்லா சான்றின் படியும் பத்திர பதிவு செய்ய வேண்டாம் என குறிப்பிட்டு, வக்பு அதிகாரிகள் தடையில்லா சான்று வழங்கவும் தடை விதித்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு வக்பு வாரியத்தின் அன்றைய முதன்மை செயல் அலுவலர் டாக்டர் டி.பரிதாபானு அவர்கள், தமிழ்நாட்டின் 11 வக்பு மண்டலங்களுக்கு உட்பட்ட 38 வருவாய் மாவட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் 03.01.2022, 01.02.2022 ஆகிய தேதிகளில் தடையானை கடிதங்கள் அனுப்பினார்.

1954-58 காலகட்டங்களில் வக்பு சொத்துக்கள் நில அளவை செய்யப்பட்டபோது இருந்த புல எண்கள் வக்பு மூல ஆவணங்களில் குறிப்பிட்டு இருந்ததை தான் அன்றைய முதன்மை செயல் அலுவலர் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு அனுப்பிய தடையானை கடிதங்களில் குறிப்பிட்டு இருந்தார்.


இந்த 70 ஆண்டுகளில் பலமுறை நிலங்கள் மறு அளவை செய்யப்பட்டு, சப் டிவிஷன்கள் பிரிக்கப்பட்டு புல எண்களும் உட்பிரிவு அளிக்கப்பட்டு மாற்றப்பட்டு உள்ளன.

இதன்படி பல ஏக்கர் நிலங்கள் இருக்கும் ஒரு சர்வே எண்ணில் ஒரு குறிப்பிட்ட பகுதி வக்பு நிலங்களாகவும் மற்றவை தனியார் நிலங்களாகவும் இருக்கும்.

ஒரே சர்வே எண்ணால் இந்த சிக்கல். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் இந்த நிலை ஏற்பட்டது. திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் தாலுகா விலும் இந்த நிலை ஏற்பட்டது. அந்த கிராமங்களில் ஒன்றுதான் திருச்செந்துறை.

ஆவணங்களின்படி இந்த கிராமத்தின் பெயர் இனாம் திருச்செந்துறை. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நவாப் அன்வர் தீன் கான் என்பவர் கைரலி வக்புக்காக கரி முகைதீன் கான் என்பவருக்கு ஒரு கிராமத்தை வக்புபாக அளித்தார். அது கரிமுகைதீன் கான் வக்பு ஆகியது. அதன் அளவு 389.3 ஏக்கர். இன்று அந்த கிராமம் விரிவடைந்துவிட்டது. அதில் 1500 ஆண்டுகள் பழமையான ஸ்ரீ சுந்தரேஸ்வரர் திருக்கோவிலும் உள்ளது.

- அடுத்த இதழில்..




01-02-2026 அன்று தீண்டாமை ஒடுக்குமுறைக்கு பெயர் பெற்ற உத்தபுரம் சென்று அங்கு ஜாதிய அடக்குமுறைக்கு எதிராக சுமார் 30 ஆண்டுகள் மேலாக பல்வேறு கட்சிகள் அமைப்புகள் வழியாக போராடி வரும் சகோதரர் செல்வராஜ் என்பவரை சந்தித்து உரையாடி வந்தோம்




# 2025 கிருஸ்துமஸ்!

## பிரதமர் மோடியின் “மத நல்லிணக்கம்” பாசிஸ்டுகளின் “இந்து ராஷ்டிரம்”

2025 கிருஸ்துமஸை எதிர்நோக்கி ஆவலோடு காத்திருந்த கிருஸ்தவ சமூகம், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பாசிஸ்டுகளால் தாக்கப்படும் வீடியோக்களும், படங்களும் உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

ஒருபக்கம், ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் கிளை அமைப்புகள் தேவாலயங்கள், கிருஸ்துமஸ் கொண்டாட்டங்கள் நடக்கும் வீடுகள், மால்கள், ஓட்டல்கள் என அனைத்தையும் தாக்கி கொண்டிருக்கும் வேளையில், மறுபக்கம், அதே சங்கபரிவார அமைப்புகளின் முன்னோடியான, நமது பிரதமர் மோடி அவர்கள், டெல்லியில், ஒரு தேவாலயத்தில் பிரார்த்தனை செய்து “மத நல்லிணகத்தை” பற்றி உரையாற்றி கொண்டிருந்தார்.



இவற்றைப் பார்த்த பாமர மக்களின் மனசாட்சியை பிரதிபலிக்கும் விதமாக, FRONTLINE இதழின், அரசியல் செய்தி பிரிவு ஆசிரியரான ஆனந்த் மிஸ்ரா தனது வாசகர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதை அப்படியே இங்கே தருகின்றோம்.!

அன்பார்ந்த வாசகர்களே..!

இந்த கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது, மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஒரு சிறிய நகரத்தில் உள்ள உறவினர்களைப் பார்க்கச் சென்றபோது, அடுத்தடுத்து வந்த இரண்டு தலைப்புச் செய்திகளால் நான் வியப் படைந்தேன்.

ஒன்றில் பிரதமர் நரேந்திர மோடி டெல்லியில் உள்ள Cathedral Church of the Redemption-ல் கிறிஸ்துமஸின் காலை ஆராதனையில் கலந்துகொண்டு, “கிறிஸ்துமஸின் உணர்வு நமது சமூகத்தில் நல்லெண்ணத்தையும் நல்லிணக் கத்தையும் ஊக்குவிக்கிறது” என்று வாழ்த்துக் களைத் தெரிவித்தது.



vaigarai velicham official



மற்றொன்று, வாரம் முழுவதும் பாஜக ஆளும் மாநிலங்களில், கிறிஸ்தவ கொண்டாட்டங்களுக்கு எதிரான இடையூறுகள், மிரட்டல்கள் மற்றும் விரோதப் போக்கு பற்றிய செய்திகளின் வித்தியாசமான கதையைச் சொன்னது.

United Christian Forum-ன் (UCF) கூற்றுப்படி, 2024ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் 834 பதிவாகியுள்ளன, இது 2014இல் 139 ஆக இருந்தது. நவம்பர் 2025 நிலவரப்படி, இந்த மன்றம் 706 சம்பவங்களை ஆவணப்படுத்தியுள்ளது.

உத்தரபிரதேசம் (184) மற்றும் சத்தீஸ்கர் (157) முன்னணியில் உள்ளன. ஜனவரி மற்றும் செப்டம்பர் 2025க்கு இடையில் பதிவான 579 சம்பவங்களில், 39 சம்பவங்கள் மட்டுமே காவல்துறையில் வழக்குத் தொடரப்பட்டன - இந்தப் புகார்களின் ஆவணப்படுத்தலில் இருந்து, இது 93 சதவீத இடைவெளியை குறிக்கிறது..

## உத்திரபிரதேசம்

உத்தரபிரதேசத்தின் பரேலியில், பஜ்ரங் தளம் மற்றும் விஸ்வ இந்து பரிஷத் (VHP) உறுப்பினர்கள் “பிஷப் கான்ராட்” பள்ளியில் உள்ள தேவாலயத்திற்கு வெளியே அமர்ந்து, காவல்துறையினரின் மேற்பார்வையில்



ஹனுமான் சாலிசாவை ஓதி, "ஜெய் ஸ்ரீ ராம்" என்று கூச்சலிட்டனர்.

## அசாம்



அசாமின் நல்பாரியில், விஸ்வ இந்து பரிஷத் (VHP) மற்றும் பஜ்ரங்தள ஆர்வலர்கள், பனிகானில் உள்ள செயிண்ட் மேரி பள்ளிக்குள் நுழைந்து, கிறிஸ்துமஸ் அலங்காரங்களுக்கு தீ வைப்பதற்கு முன்பு "ஜெய் ஸ்ரீ ராம்" மற்றும் "ஜெய் இந்து ராஷ்டிரா" என்று கோஷமிட்டனர். விஸ்வ இந்து பரிஷத் மாவட்ட செயலாளர் பாஸ்கர் தேகா கூறும்போது: “இங்கு கிறிஸ்தவ பண்டிகைகள் எங்களுக்கு வேண்டாம்.” என்று கூறினார்.

## சத்தீஸ்கர்



சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில், சர்வ இந்து சமாஜ் என்ற இந்துத்துவ அமைப்பு, அழைப்பு விடுத்த மாநிலம் தழுவிய பந்தின்போது, கிறிஸ்துமஸ் தினத்தன்று மேக்னெட்டோ மாலில் உருட்டு கட்டைகளுடன் ஆயுதம் ஏந்திய ஒரு கும்பல் கிறிஸ்துமஸ் அலங்காரங்களை சேதப்படுத்தியது. மற்றும் சாண்டா கிளாஸ் உருவத்தை உடைத்தது.

கான்கர் மாவட்டத்தின் படே தியோடா கிராமத்தில் ஒரு கிறிஸ்தவரின் வீடு எரிக்கப் பட்டு தேவாலயங்கள் சேதப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பந்தும் நடைபெற்றது. அடையாளம் தெரியாத 30க்கும் மேற்பட்ட நபர்கள் மீது போலீசார் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்தனர்.

### ஒடிசா



ஒடிசாவில், சாண்டா கிளாஸ் தொப்பிகளை விற்கும் தெரு வியாபாரிகளை சில ஆண்கள் துன்புறுத்துவதையும், “இது இந்து ராஷ்ட்ரம். நீங்கள் இங்கே கிறிஸ்தவ பொருட்களை விற்க முடியாது. ஜெகந்நாதரின் பொருட்களை விற்கவும்” என்று அறிவிப்பதையும் வைரலான வீடியோக்கள் காட்டுகின்றன.

### மத்தியப் பிரதேசம்

மத்தியப் பிரதேசத்தின் ஜபல்பூரில், பாஜக நகர துணைத் தலைவர் அஞ்சு பார்கவா, மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான கிறிஸ்துமஸ் கூட்டத்தில் ஒரு பார்வையற்ற பெண்ணை எதிர்கொண்டு, அவள் முகத்தைப் பிடித்து, கையை முறுக்கி, “அடுத்த பிறவியிலும் அவள் பார்வையற்றவளாகவே இருப்பாள்” என்று கூறுவது படமாக்கப்பட்டது. இந்த சம்பவம் டிசம்பர் 20 அன்று ஹவாபாக்



மகளிர் கல்லூரிக்குப் பின்னால் உள்ள ஒரு தேவாலயத்தில் நடந்தது.

மத்தியப் பிரதேசத்தின் ஜாபுவாவில், நிகழ்ச்சி விண்ணப்பங்களை காவல்துறையினர் ஏற்க மறுத்ததால், நான்கு கத்தோலிக்க திருச் சபைகளுக்கு கிறிஸ்துமஸ் கரோல் பாடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் அந்த சபை மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் இந்தூர் பெஞ்சை அணுகியது, “கத்தோலிக்க வீடுகளுக்குள் கரோல் பாடுவது ஒரு தனியார் மத நடைமுறை என்றும் அதற்கு அதிகாரப் பூர்வ அனுமதி தேவையில்லை என்றும் தெளிவுபடுத்தியது. பொது இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே காவல்துறையின் ஒப்புதல் தேவை” என்று நீதிபதி ஜெய் குமார் பிள்ளை குறிப்பிட்டார்.

### உத்தரகாண்ட்

உத்தரகாண்ட் மாநிலம் ஹரித்வாரில், கங்கை நதிக்கரையில் உத்தரபிரதேச சுற்றுலாத் துறையால் நடத்தப்படும் ஹோட்டல் பாகீரதியில் திட்டமிடப்பட்டிருந்த கிறிஸ்துமஸ் நிகழ்வு, இந்து குழுக்களின் ஆட்சேபனைகளைத் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டது. கங்கா




சேவக் தளத்தைச் சேர்ந்த உஜ்வால் பண்டிட், ஆற்றங்கரைகளில் கிறிஸ்துமஸ் கொண்டாட் டங்கள் "பொறுக்கப்படாது" என்று எச்சரித்தார். “இது ஹரித்வாரின் புனிதத்தை அவமதிப்ப தாகும்” என்று கூறினார். ஆர்எஸ்எஸ் இந்த உணர்வை எதிரொலித்தது, மாநில அதிகாரி பதம்ஜி கங்கை நதிக்கரையில் “வெளிநாட்டு கலாச்சாரத்துடன் தொடர்புடைய நிகழ்வுகளை” எதிர்ப்பதாக தெரிவித்தார்.

### தலைநகர் டெல்லி

டிசம்பர் 22 அன்று டெல்லியின் லஜ்பத் நகரில், பஜ்ரங்தள உறுப்பினர்கள் கிறிஸ்தவ பெண்கள் மற்றும் குழந்தைகளை சாண்டா கிளாஸ் தொப்பிகளை அணிந்தவர்களாக



எதிர்கொண்டு, அவர்களை "மதமாற்றம்" என்று குற்றம் சாட்டி, அவர்களை வெளியேற உத்தரவிட்டனர். அந்த இந்துத்துவ குண்டர்கள் "வீட்டிற்குச் செல்லுங்கள்" என்றும் "உங்கள் சொந்த வீடுகளில் கொண்டாடுங்கள்" என்றும் கூச்சலிடுவதை வீடியோக்கள் காட்டுகின்றன. பின்னர் டெல்லி காவல்துறை இந்த சம்பவத்தை "சிறிய மற்றும் தற்காலிக வாய்மொழி கருத்து வேறுபாடு" என்று விவரித்தது.

### கேரளா



கேரளாவின் பாலக்காட்டில், வீடு வீடாகச் சென்று கரோலிங் செய்து கொண்டிருந்த 10–15 வயதுடைய குழந்தைகளைத் தாக்கியதற்காக ஆர்.எஸ்.எஸ்–ஐ சேர்ந்த அஷ்வின் ராஜ் கைது செய்யப்பட்டார். புகாரின்படி, உள்ளூர் கட்சி அலுவலகத்திலிருந்து குழந்தைகள் கடன் வாங்கிய டிரம்மில் எழுதப்பட்ட "சிபிஐ(எம்)" என்ற வார்த்தையே இந்த ஆத்திரமூட்டலுக்குக் காரணம் என்று கூறப்பட்டது. பாஜக தலைவர் சி. கிருஷ்ணகுமார் பின்னர் "குழந்தைகள் மது அருந்தியதாகக்" கூறினார் – இந்தக் கூற்றை அவர்களது குடும்பத்தினர் நிராகரித்தனர்.

### ராஜஸ்தான்

ராஜஸ்தானின் துங்கர்பூர் மாவட்டத்தில், டிசம்பர் 14 அன்று பிச்சிவாரா கிராமத்தில் உள்ள செயிண்ட் ஜோசப் கத்தோலிக்க தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனையில் ஆர்.எஸ்.எஸ் மற்றும் பஜ்ரங்தள உறுப்பினர்கள் இடையூறு விளைவித்தனர். இடைவேளையில் நுழைந்து திருச்சபையை "கட்டாய மதமாற்றம்" செய்ததாக குற்றம் சாட்டினர்.



திருச்சபை பாதிரியார் ஃபாதர் ராஜேஷ் சரேல் கூறுகையில், "அவரது மறையுரையின் போது சுமார் 50 பேர் உள்ளே நுழைந்தனர். போலீசார் அங்கு இருந்தனர், ஆனால் அவர்கள் வெறும் பார்வையாளர்கள் மட்டுமே".

கிறிஸ்துமஸ் தினத்தன்று, ராஜஸ்தானின் நாகூர் மாவட்டத்தில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் பஜ்ரங்தள உறுப்பினர்கள் குழப்பத்தை ஏற்படுத்தினர், குழந்தைகளை அச்சுறுத்தியதாகவும், பள்ளியின் முதல்வர் ஷைதன்ராம் சங்கலைத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. கிட்டத்தட்ட 40 மாணவர்கள் அங்கு இருந்தனர். போலீசார் மூன்று பேரை கைது செய்தனர்.

### ஹரியானா

ஹரியானாவின் ஃபதேஹாபாத் மாவட்டத்தில், சிமன் லால் என்ற ஆசிரியரின் வீட்டில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை போலீசார் கலைத்தனர். அதற்கு மதமாற்ற நடவடிக்கைகள் குறித்து வெளியாட்கள் எதிர்ப்பு தெரிவித்ததாக காரணம் கூறினர். ஆனால், "டிசம்பர் 25ஆம் தேதி தனது பிறந்தநாளும் கூட என்றும், அந்தக் கூட்டம் யாருக்கும் அச்சுறுத்தலாக இல்லை"

என்றும் லால் பின்னர் தெளிவுபடுத்தினார்.

இந்தியக் கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு (Catholic Bishops' Conference of India), தாக்குதல்கள் "அச்சுறுத்தும் அளவுக்கு" அதிகரித்துள்ளதாகக் கூறி, அவற்றை "மிகக் கொடூரமானதும் மனிதநேயமற்றதும்" எனக் கண்டித்தது. மேலும், பாஜகவைச் சேர்ந்த அஞ்சு பார்காவாவை உடனடியாக கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது. அதோடு, டிசம்பர் 24-ஆம் தேதி கிறிஸ்தவர்களுக்கு எதிராக பந்த் நடத்த அழைக்கும், வெறுப்பைத் தூண்டும் டிஜிட்டல் போஸ்டர்கள் சத்தீஸ்கரில் பரவியுள்ளன என்பதையும் அது சுட்டிக் காட்டியது.

மனித உரிமைகள் சட்ட அமைப்பை (Human Rights Law Network)ச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர் காலின் கோன்சால்வ்ஸ், "மதமாற்ற எதிர்ப்பு சட்டங்கள் காவல்துறைக்கும் வலதுசாரி குழுக்களுக்கும் "மறைமுகப் பாதுகாப்பு" (cover) அளிக்கின்றன என்று குறிப்பிட்டார்.

மேலும், "2020 ஜனவரி முதல் 2025 ஜூலை வரை மத்தியப் பிரதேசத்தின் அந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 283 வழக்குகளில், சுமார் 70 சதவீதம் இன்னும் நிலுவையில் உள்ளன. முடிவுக்கு வந்த 86 வழக்குகளில், 50 வழக்குகள் விடுதலையுடன் (acquittal) முடிவடைந்துள்ளன; வெறும் எட்டு வழக்குகளில்தான் தண்டனை (conviction) வழங்கப்பட்டுள்ளது" என்கிறார்.

### எல்லாமும் மோசமாக இல்லை!

பாகிஸ்தான்-அமெரிக்கக் கலைஞர் ஹமாமா துல் புஷ்ரா வரைந்த, மரியாளையும் கிறிஸ்துவையும் சித்தரிக்கும் ஓவியம் சமூக ஊடகங்களில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

மும்பையின் 300 ஆண்டுகள் பழமையான செயின்ட் தாமஸ் பேராலயம் தனது கிறிஸ்துமஸ் கோரல் நிகழ்வை தேசிய கீதத்துடன் தொடங்கிய வீடியோவும் வைரலானது. 'வைல்ட் வாய்சஸ்' குரல் குழு 'ஜன கண மன' பாடலிலிருந்து கிறிஸ்துமஸ் கரோல் பாடல்களுக்கு மென்மையாக மாறியது.

பிருந்தாவனத்தைச் சேர்ந்த துறவி பிரேமானந்த் கோவிந்த் சரண், இயேசுவை ஒரு சிறந்த ஆன்மாவாகவும், சக்திவாய்ந்த ஆன்மீக இருப்பாகவும் பேசியுள்ளார், அதே நேரத்தில் மத ரீதியாக இழிவுபடுத்தப்படுவதற்கு எதிராக எச்சரித்துள்ளார்.



இந்தியாவெங்கும் உள்ள ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷன் மையங்கள், சர்வ தர்ம சமபாவ என்ற ஆவியுடன் கிறிஸ்துமஸை கொண்டாடும் தங்கள் நீண்டகால மரபை தொடர்ந்து கடைப்பிடித்தன.

ராமகிருஷ்ண பரமஹம்சர், இயேசுவை தெய்வ அவதாரமாகக் கண்டார்; அந்தக் கண்ணோட்டத்தை ஸ்வாமி விவேகானந்தர் மேலும் முன்னெடுத்தார். கிறிஸ்தவத்தை ஆழ்ந்த மரியாதையுடன் அணுகிய விவேகானந்தர், இந்தியா முழுவதும் பயணம் செய்த போது தம்முடன் பகவத்கீதை மற்றும் தி இமிடேஷன் ஆஃப் கிறிஸ்ட் என்ற இரண்டு நூல்களையே எடுத்துச் சென்றார். 1889ஆம் ஆண்டில், அந்த தி இமிடேஷன் ஆஃப் கிறிஸ்ட் நூலின் சில பகுதிகளை அவர் பெங்காலியில் மொழிபெயர்த்தார்.

கிறிஸ்தவ சின்னங்களைத் தாக்குபவர்கள், விவேகானந்தரை விட இந்து மதத்தை நன்றாகவே அறிந்தவர்கள் என்று தாங்கள்


vaigarai velicham official

கூறிக் கொள்கிறார்களா? அவர் கட்டாய மதமாற்றத்திற்கு எதிராக இருந்தார்; அதே நேரத்தில், குற்றத்தை வெளியில் தேடுவதற்குப் பதிலாக, இந்து சமூகம் தன்னைத்தானே ஆய்வு செய்து சிந்திக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.




கிறிஸ்தவ அமைப்புகள், “மத சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்புகளை நடைமுறையில் காக்கும் நடவடிக்கைகளும் வேண்டும்” என்று வலியுறுத்துகின்றன. இதற்கிடையில், காவல் துறை பல நேரங்களில் இந்துத்துவ அமைப்புகளுடன் சேர்ந்து செயல்படுகிறது அல்லது நடந்துகொண்டிருப்பதைப் பார்க்காமலேயே விலகி நிற்கிறது எனக் குற்றம்சாட்டி, ஐக்கிய கிறிஸ்தவ மேடை (UCF) மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு கடிதம் எழுதியுள்ளது.

பிரதமரின் பேராலயப் பயணத்துக்கும் சங்க பரிவாரத்தினரின் நடத்தைக்கும் இடையிலான முரண்பாடு, ஆளும் தரப்பின் முன் ஒரு கேள்வியை எழுப்புகிறது


எந்த மத மரபில் இப்படியான பகைமையும் விரோதமும் அனுமதிக்கப்படுகிறது? இந்தக் கிறிஸ்துமஸில்-ஷாப்பிங் மால்கள் முதல் பள்ளிகள் வரை, தனியார் வீடுகள் வரை-காணப்பட்ட போக்கு, தனித்தனி அத்து மீறல்கள் மட்டுமல்ல என்பதைக் காட்டுகிறது. “இந்து ராஷ்ட்ரா” என்ற அறிவிப்புகள் திறந்த வெளியில், மீண்டும் மீண்டும், மிகக் குறைந்த அல்லது எவ்விதப் விளைவுமின்றி முன் வைக்கப்படும் ஒரு சூழலை அது சுட்டிக் காட்டுகிறது.

இந்த கிறிஸ்துமஸ் பருவத்தில் சம்பவங்களின் தன்மை குறித்த உங்கள் கருத்துக்களைக் கேட்க விரும்புகிறோம்.

அடுத்த செய்திமடல் வரை,

ஆனந்த் மிஸ்ரா | அரசியல் செய்தி பிரிவு ஆசிரியர், FRONTLINE - DEC - 26 - 2025

தமிழில் –
Advocate
**JASMINE FATHIMA** B.Sc, B.Ed, M.L.,


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

“ஹஜ்“ பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

*16* ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி *21-1965* இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887



# இடிப்பதற்காக உச்ச நீதிமன்ற உத்தரவை மீறிய உத்தரபிரதேச முதல்வர் கல்யாண்சிங்கும் இடிக்காமலிருப்பதற்காக உத்தரவை மீறிய தமிழ்நாடு அரசும்.!

கடந்த *07.10.1991* அன்று அன்றைய கல்யாண்சிங் அரசு அயோத்யாவின் *2.77* ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியது. நில கையகப்படுத்தலை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

*13.11.1991* அன்று தேசிய ஒருமைப்பாட்டு குழுவில் பாபர் மசூதி நிலம் தொடர்பாக சுமுகமான முடிவு எடுக்கப்படுமெனவும், அதுவரையில் உத்தரபிரதேச அரசு பாபர் மசூதி கட்டுமானங்களுக்கு பொறுப்பேற்கும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

*15.11.1991* அன்று உச்ச நீதிமன்றமும் கட்டுமானங்கள் குறித்த தடை உத்தரவை வழங்கியது.

*15.07.1992* நாளன்று சர்ச்சைக்குரிய இடத்தில் அலகபாத் நீதிமன்ற அனுமதியின்றி எவ்வித கட்டுமானங்களும் மேற்கொள்ளக் கூடாது என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

மேற்சொன்ன இரு நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி பாபர் மசூதியை சுற்றியுள்ள சில பகுதிகள் இடிக்கப்பட்டன.

உத்தரபிரதேச முதல்வர் கல்யாண்சிங்கால் அக்கட்டுமானங்கள் 'சர்வதேவ் அனுஸ்தான்' என்றழைப்படும் சாமியார்களின் கொண்டாட்டங்களுக்காக இடிக்கப்பட்டதாக உச்சநீதிமன்றத்தில் உத்தரபிதேச அரசின் வழக்கறிஞர் கே கே வேணுகோபால் கூறினார்.

*17.07.1992* அன்று நிர்வாண சாமியார்களின் திகம்பர அகடாவைச் சேர்ந்த ஐம்பது பேர்கள் நீதிமன்ற உத்தரவை மீறி பாபர் மசூதியைச்சுற்றி கட்டுமானங்களில் ஈடுபட்டனர்.

உச்சநீதிமன்ற ஆணையாளர்கள் உச்சநீதிமன்ற பதிவாளர் எஸ் ராய், ஐஐடி பேராசிரியர் கேகே நாயர், கட்டிடக்கலை கல்லூரி பேராசிரியர் அரவிந்த் கிருஷ்ணன் ஆகியோர் *15000* சதுர அடிகளுக்கு மேல் சட்ட விரோத கட்டுமானங்களைக் கண்டு உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

கட்டுமானங்களை கட்டத் தேவையான சிமென்ட், கம்பிகள், மணல், தண்ணீர், இயந்திரங்கள் அனைத்தும் உத்தரபிரதேச அரசின் அனுமதியின்றி அங்கு சென்றிருக்க முடியாது என உச்சநீதிமன்றம் கண்டது.

*06.12.1992* அன்று உச்ச நீதிமன்ற தடை உத்தரவை மீறி உத்தரபிரதேச கல்யாண் சிங் அரசின் ஒத்துழைப்புடன் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. தொடர்ந்த கலவரங்களில் 2000 பேர்கள் உயிரிழந்தனர் அதில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள்.

*24.10.1994* அன்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜி.என்ரே.யும், வெங்கடாச்சலையாவும் உச்சநீதிமன்ற அவமதிப்பு வழக்கில் மிகக் கடுமையான தண்டனையாக ஒருநாள் சிறைத் தண்டனையும் *2000* ரூபாய் அபராதமும் கல்யாண்சிங்கிற்கு வழங்கினர் அதே தண்டனை எழுத்தாளர் அருந்ததிராய்க்கும் வழங்கப்பட்டது ஒப்பு நோக்கத்தக்கது.

தமிழ்நாடு சென்னை மாகாணமாக இருந்த போது *1947* ஆம் ஆண்டு தொடங்கி திருவாளர்கள் ராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராஜா, ராஜகோபாலாச்சாரி, காமராஜ், பக்தவத்சலம், அண்ணாத்துரை, நெடுஞ்செழியன் கருணாநிதி, எம்ஜிஆர், ஜானகி, ஜெயலலிதா, *2021* ஆம் ஆண்டு எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி முடிய எல்லோருடைய ஆட்சி காலத்திலும் திருப்பரங்குன்ற தீபம் உச்சிப்பிள்ளையார் கோவிலில் அனுமன் சிற்பம் உள்ள பகுதியிலேயே ஏற்றப்பட்டுள்ளது இப்போது ஏன் அந்த நடைமுறையை கலவரம் செய்தாவது மாற்ற முயல்கின்றார்கள் என்பது பாஜக வின் தேர்தல் அரசியல் என்பது பால்குடி மறக்காத குழந்தைகளுக்கு கூட தெரியும்

ஆனால் உள்ளூர் அணிலுக்கும் ஆமைக்கும் தெரியாதது ஆச்சரியம்தான் ! இந்த அரசியலில் தாங்கள் எந்தப் பக்கம் இருக்கிறோம் எனக் கூறாமல் தங்கள் கூட்டிலிருந்தும் ஓட்டிலிருந்தும் எப்போது வெளி வருவார்கள் எனத் தெரியவில்லை.

திருப்பரங்குன்ற தீப அரசியலில் முதல் சுற்றில் அரசியலமைப்பு சட்டம் வெற்றி பெற்றுள்ளது.

அப்பெருமை மு.க.ஸ்டாலினுக்கும் அவரது கூட்டணி கட்சியினருக்கும் மட்டுமல்ல மதுரை மக்களுக்கும்தான்.!

**- தி.லஜபதி ராய்.**

*05.12.2025* மதுரை-*107*



vaigarai velicham official



# உச்ச நீதிமன்றமும் குண்டு வெடிப்புகளும்

**பிராமிணிஸ்ட்டுகள் இந்தியா முழுவதும் குண்டுவெடிப்புகளை நடத்தினார்கள். பின்னர் முஸ்லிம்கள் தாம் அந்தக் குண்டுகளை வைத்தார்கள் என இடைவிடாமல் பிரச்சாரம் செய்தார்கள். ஏன் முஸ்லிம்கள் குண்டு வைக்கின்றார்கள் எனக் கேட்டால், பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதற்கு பழி தீர்க்கின்றார்கள் என்று முதலிலும், பின்னர் குஜராத் இனப்படுகொலைக்குப் பழி வாங்குகின்றார்கள் என்றும் கூறினார்கள்**

**ஜனவரி மாத தொடர்ச்சி...**

நவம்பர்–9, 2008 ஆம் ஆண்டு பெங்களூர் தடயவியல் சோதனைக் கூடத்தில் வைத்து நடந்த விசாரணையின்போது, அவர் தளபதி புரோகித் சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டுவெடிப்பிற்கு, தானே ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருட்களைக் கொடுத்தேன் என ஒத்துக் கொண்டார்.

கலோனல் (எ) இராணுவ தளபதி பிரசாத் புரோகித், நமது இராணுவத்தின் ஆர்.டி.எக்ஸ் கிடங்கிலிருந்துதான் எடுத்து சங்கப் பரிவாரங் களுக்குக் கொடுத்தார். வெடிக்கச் செய்தார். அப்பாவி மக்களைப் பிணமாக்கினார். அப்போது "அவர் அரசின் அதிகாரியாக சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்."

இராணுவத் தளபதி, பிரசாத் புரோகித் மாலேகான் குண்டு வெடிப்பு 2008இல் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை காவல்துறை யினரின் கட்டுப்பாட்டின்கீழ் வைத்து விசாரிக்க வேண்டும், எனக் கோரிடும் மனுவை அரசு வழக்கறிஞர் அஜய்மிசர் நாசிக் நீதி மன்ற த்தில் நவம்பர்–15, 2008–ல் தாக்கல் செய்தார். அப்போது இந்த உண்மையை நாசிக் நீதி மன்ற த்தில் சமர்ப்பித்தார்.

இப்படி சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பை நடத்திய உண்மையான குற்ற வாளிகள் தண்டிக்கப்படவிருந்த நிலை வந்தது. எல்லோரும் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டி ருந்தார்கள்.

இப்போது IB : Intelligence Bureau என்ற மத்திய உளவுத்துறை வேகமாக விசாரணையில் குதித்தது. உண்மையை உலகுக்குச் சொன்னால் மத்திய அரசின் நம்பகத்தன்மை உலக அளவில் கெட்டுப்போகும். அதனால் உண்மையைக் கண்டறிவதை உடனேயே நிறுத்த வேண்டும் என கூறி, ஹரியானா காவல்துறையையும் மராட்டிய மாநிலத்தின் தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கை

தடுப்புக் காவல் துறையையும் இரும்புக்கரம் கொண்டு தடுத்தது.

தாங்கள் ஏற்கெனவே பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. (ISI) என்ற அமைப்பைக் குறை கூறிவிட்டோம். அது அப்படியே இருக்கட்டும் எனக் கூறிவிட்டார்கள்.

உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப் படாமல் தப்பிவிட்டார்கள். (Times of India - Pune 18th November - 2008)

சம்சவ்தா விரைவு ரெயில் வண்டி குண்டு வெடிப்பு விசாரணையை இரண்டுமுறை வழி மறித்தது மத்திய உளவுத்துறை. ஆனாலும் உண்மைகளை அதிக நாட்கள் மறைத்து வைத்திட இயலவில்லை.

மாலேகான் குண்டுவெடிப்புகள் 2008–ஐ தொடர்ந்து அபிநவ் பாரத் என்ற அமைப்பின் சதிகள் நாடெங்கும் விவாதமானது. முஸ்லிம்கள் அப்பாவிகள், வீண் பழியைச் சுமப்பவர்கள் என்ற உண்மை மக்களுக்கு வந்து சேர்ந்தது. இதனால் இதற்கு முன்னால் நடந்த குண்டு வெடிப்புகளையும் ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும் என்ற எண்ணங்கள் எழுந்தன.

இந்த வகையில் சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டுவெடிப்பையும் மறு ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும் என பலரும் கோரலாயினர். இதனால் அரசு சம்சவ்தா எக்ஸ்பிரஸ் வழக்கை தேசிய புலனாய்வு முகமையிடம் 2010ஆம் ஆண்டு ஒப்படைத்திட வேண்டிய நிலைக்கு ஆளாகியது.

ஹரியானா காவல்துறை குண்டுவெடிப்பு நடந்த ஒரு மாதத்திற்குள் (2007) உண்மையான குற்றவாளிகளின் பக்கம் நெருங்கி இருந்தது. ஆனால் மத்திய உளவுத்துறையின் தலையீட்டால் அது உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்திடவில்லை. அதனால் NIA புலன் விசாரணை அந்த நிலையிலேயே கைவிடப் பட்டது. 2010–இல் தேசிய புலனாய்வு முகமை ஹரியானா காவல்துறை விட்டதிலிருந்து அப்படியே தொடர்ந்தது.

'NIA' என்ற தேசிய புலனாய்வு முகமை தனது புலன் விசாரணையை நடத்திக் கொண்டிருந்தபோது, அதற்கு ஓர் அதிசய அத்தாட்சி கிடைத்தது. அதுதான் ஆர்.எஸ்.எஸ்.–இன் தலைவராகிய சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம். அதில்அவர்நீதிபதியின் முன் மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு, அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பு ஆகியவையும்–(2007), மாலேகான் குண்டு வெடிப்பு (2008) ஆகியவை அனைத்தும் ஒரே தீவிரவாத குழுவின் கைவரிசை தான் என்றும், அவை அனைத்தையும் தான்தான் ஏற்பாடு செய்ததாகவும் குறிப்பிட்டார்.



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல்,
மகாராஷ்டிரா காவல்துறை

ஹரியானா காவல்துறை விட்டதிலிருந்து தொடர்ந்த தேசிய புலனாய்வு முகமை, தனது புலனாய்வில் கிடைத்த ஆதாரங்கள், அசீமானந் தாவின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கிடைத்த புது தகவல்கள், ஆதாரங்கள் இவற்றைக் கொண்டு தனது புலனாய்வை முடித்தது. அத்தோடு இந்தக் குண்டுவெடிப்புகளை நிகழ்த்திய உண்மையான குற்றவாளிகள் மீது குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது.

இந்தக் குண்டுவெடிப்புகளை, அதாவது மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு (2007), அஜ்மீர் தர்கா குண்டுவெடிப்பு 2007, சம்சவ்தா விரைவு வண்டி குண்டுவெடிப்பு (2007), மாலேகான் குண்டுவெடிப்பு (2007) ஆகியவற்றை நடத்தியது ஆர்.எஸ்.எஸ். அபிநவ் பாரத், ஜெய் வந்தே மாதரம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்தவர்கள்.

இவர்கள் மீதான குற்றப்பத்திரிகை ஜூன் 2011 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டது.

அந்தக் குற்றவாளிகள்,

1) சுனில் ஜோஷி, 2) சுவாமி அசீமானந்தா,
3) சந்தீப் டான்கி 4) ராம்ஜி கல்சங்கரா,
5) லோகேஷ் ஷர்மா 6) தேவேந்திரகுப்தா
7) அமித் சவ்ஹான் 8) பாரத் பாய்

குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டனர். காரணம் குற்றம் சுமத்திட வேண்டிய அரசு வழக்கறிஞர், குற்றவாளிகளுக்கு சாதகமாகவும் –


vaigarai velicham official

அரசே தொடுத்த வழக்குக்கு எதிராகவும் திரும்பிவிட்டார்.

இந்த சம்சவ்தா ரெயில் குண்டுவெடிப்பு விசாரணை சுமார் (8) எட்டு ஆண்டுகள் நடந்தது. இதில் 224 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டன. குற்றவாளிகளை முழுமையாக விடுதலை செய்யும் பாங்கிலேயே வழக்கை அரசு நடத்தியது IB என்ற மத்திய உளவுத்துறையின் கிடுக்கிப்பிடியின் கீழ் நீதிமன்றம், விசாரணை நீதிமன்றம், மார்ச்சு 20, 2019இல் தனது தீர்ப்பை வழங்கியது. அதில் நான்கு குற்றவாளிகளை விடுதலை செய்தது.

அப்படி விடுதலை செய்யப்பட்டவர்கள், சுவாமி அசீமானந்தா, லோகேஷ் ஷர்மா, தேவேந்திர குப்தா, பாரத் பாய். – இவர்களைத் தண்டிக்கும் அளவில் உள்ள சாட்சியங்கள் இல்லை என்ற அடிப்படையில் விடுதலை செய்தது.

மீதமுள்ள நான்கு குற்றவாளிகளுள் சுனில் ஜோஷி என்பவரை 2007 டிசம்பர் மாதம் கொலை செய்து விட்டார்கள். (இவரை மாலேகான் குண்டுவெடிப்பு முக்கிய குற்றவாளியாகிய பிரக்யா சிங் தாக்கூர் என்ற பெண் சந்நியாசிதான் கொலை செய்தார். இதற்காக பிரக்யா சிங் தாக்கூர் மீது வழக்குத் தொடரப்பட்டு வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது.)

மீதமுள்ள மூன்று பேரையும் (NIA) தேசிய புலனாய்வு முகமை கைது செய்யவில்லை. அதனால் அவர்கள் தேடப்படும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டார்கள். அவர்கள் அமித் சவ்கான், இராமச்சந்திரா கல்சங்கரா, சந்தீப் டாங்கே.

இந்தத் தீர்ப்பு மார்ச்சு–20, 2019இல் வெளிவந்தது என்றாலும், இந்த 160 பக்க தீர்ப்பை, நீதிமன்றம் பொதுமக்களின் பார்வைக்கு 29, மார்ச்சு 2019இல் வைத்தது. அந்தத் தீர்ப்பில் நீதிபதி அவர்கள் குற்றவாளிகளை விடுதலை செய்ததைக் குறித்து இப்படிக் குறிப்பிட்டார்.

“நான் இப்படி குற்றவாளிகளை மிகுந்த மன வருத்தத்துடனும், ஆதங்கத்துடனுமே விடுதலை செய்கின்றேன்.”

இன்னும் அவர் குறிப்பிட்டார்,

குற்றவாளிகளுக்குத் தண்டனையைப்பெற்றுத் தரும், சிறந்த அத்தாட்சிகளையெல்லாம் அரசு வழக்கறிஞர் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்காமல் தனது கைகளிலேயே வைத்துக் கொண்டார். அரசு தரப்பு வழக்கறிஞர் சமர்ப்பித்த அத்தாட்சிகளில் நிறைய இடைவெளிகள் இருந்தன. அரசு தரப்பு வாதத்தில் இடம் பெற்றவையும், அரசின் தரப்பில் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்கள் அனைத்தும், சட்டத்தின் முன் செல்லாதவை. சட்டத்தின் முன் செல்லாதவற்றை மட்டுமே சாட்சியமாகச் சமர்ப்பித்தார்கள். அவை குற்றவாளிகள் கொடுத்த வாக்கு மூலங்களாகவும், எந்த உண்மையையும் வெளிப்படுத்தாமலும் இருந்தன.


“குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றிய எந்த பொருளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. வாய்மொழிகள் மட்டுமல்ல விஞ்ஞான ரீதியான அறிவியல் பூர்வமான எந்த உண்மை சாட்சியங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. இதனால் குற்றவாளிகளை குற்றத்தோடு சம்மந்தப்படுத்திட வழி இல்லாமல் செய்து விட்டார்கள்.

தனித்துவமான சாட்சியங்கள் எனச் சொல்லப்பட்டவர்களை நீதிமன்றத்திற்கே வர வைக்கவில்லை. சாட்சியங்கள் குற்றவாளிகளுக்கு உதவி செய்வார்கள் என்ற நிலையில் அவர்களை எதிராகப் போய்விட்ட சாட்சியங்கள் என அறிவிக்கவில்லை.

நீதிமன்றம் சொன்ன இந்த வார்த்தைகளுக்கு, அதிக விளக்கம் தேவை இல்லை. மஹ்மூதிய மஸ்ஜித் குண்டுவெடிப்பு வழக்கில் அரசும், அரசு தரப்பு வழக்கறிஞரும் என்ன செய்தார்களோ அதைத்தான் இந்த சம்சவ்தா குண்டுவெடிப்பு வழக்கிலும் செய்தார்கள். அது, குற்றவாளிகள் மீது குற்றத்தை நிரூபித்திட வேண்டிய அரசு வழக்கறிஞர், குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்காக அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்பதாக வாதாடினார்கள். பார்பானி மஸ்ஜித் குண்டுவெடிப்பு அத்தியாயம் 9–இல் விவாதிக்கப்பட்டுள்ளது. இந்தக் குண்டுவெடிப்பிலும் போதுமான விஞ்ஞான ரீதியான அத்தாட்சிகள் இருந்தன. அதேபோல் இன்னும் பல தண்டனை தரத்தக்க ஆதாரங்கள் இருந்தன. ஆனால் அவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இந்த சம்சவ்தா விரைவு ரெயில் வண்டி குண்டுவெடிப்பில்மறைக்கப்பட்ட சாட்சியங்கள் – அறிவியல் பூர்வமான சாட்சியங்கள்.

1) இந்தக் குண்டுவெடிப்புகளை நிகழ்த்தியவர்கள், டெல்லியின் பழைய இரயில் நிலையத்திலிருந்துதான் ரெயிலில் ஏறினார்கள். அப்போது அந்த ரெயில் நிலையத்தில் CCTV என்ற கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. அதில் இந்தக் குற்றவாளிகள் ரெயிலில் ஏறிடும் காட்சிப் பதியப்பட்டிருந்தது. ஆனால் இந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை NIA என்ற தேசிய புலனாய்வு முகமையோ அரசு வழக்கறிஞரோ நீதிமன்றத்தின் முன்வைத்திடவில்லை.



இந்தக் கண்காணிப்பு கேமரா பதிவுகளின் அடிப்படையில் தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டிருக்குமேயானால் இன்னும் நிறைய சாட்சியங்கள், சதித் திட்டங்கள் வெளிச்சத்திற்கு வந்திருக்கும். இவை இந்த சம்சவ்தா ரெயில் குண்டுவெடிப்பு வழக்கிலும் இதர குண்டு வெடிப்பு வழக்கிலும், பல புதிய தகவல்களை – புலன் விசாரணைகளிலும் தந்திருக்கும். ஆனால் அவையெல்லாம் ஒட்டு மொத்தமாகக் கைவிடப்பட்டன. இவையெல்லாம் முற்றாக மறைக்கப்பட்டுவிட்டன.

2) சில செல்பேசிகளில் பதிந்திருந்த ஆவணங்களின் அடிப் படையில் (CDR : Call Data Record) இந்த சம்சவ்தா குண்டு வெடிப்பின் மூளையாக விளங்கிய சுனில் ஜோஷி, குண்டு வெடிப்புக்கான தயாரிப்புகள் நடந்த (2007) நேரத்தில்,கோத்தாரி அங்காடியில் நின்றிருந்தார் என்பது உறுதியானது. இந்த அங்காடியில்தான் குண்டுகளை எடுத்து வருவதற்கான சூட்கேஸ்கள் வாங்கப்பட்டன

பிரக்யா சிங் தாக்கூர், சுனில் ஜோஷி, சந்தீப் டாங்கே, அசீமானந்தா ஆகியோரின் செல்போன் பதிவுகள் இவர்களெல்லாம் இந்த சம்சவ்தா குண்டுவெடிப்புப் பற்றி பிப்ரவரி, மார்ச் – 2007 இல் அடிக்கடி பேசியது தெரியவந்தது. ஆனால் இந்த அறிவியல் ஆதாரத்தை "NIA" என்ற தேசிய புலனாய்வு முகவாண்மையோ அல்லது அரசின் சார்பில் குற்றத்தை நிரூபிக்க நியமிக்கப்பட்ட வழக்கறிஞரோ நீதிமன்றத்தின் முன் கொண்டு வந்திடவில்லை.

நீதிமன்றத்தின் கண்களிலிருந்து முற்றாக மறைத்துவிட்டார்கள். அதேபோல் இந்தக் குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட செல்போன்கள், சிம் கார்டுகள் இவை பற்றியும் எந்தத் தகவல்களையும் தந்திடாமல் மறைத்துவிட்டனர். இந்தக் குண்டு வெடிப்புகளில் பயன்படுத்தப்பட்ட செல்போன்கள் யாருக்குச் சொந்தம், சிம் கார்டுகள், யார் பெயரில் வாங்கப்பட்டிருந்தன என்பவையெல்லாம் பல அரிய தகவல்களைத் தந்திருக்கும். ஆனால் அவையெல்லாம் மறைக்கப்பட்டுவிட்டன.

3) குண்டுவெடிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட சிம் கார்டை வாங்கியவர் ஆனந்த் ராய் கதாரியா. அவரிடம் அதை வாங்க சொன்னது ஜோஷி என தேசிய புலனாய்வு முகமையிடம் கூறியிருந்தார் வாசுதேவ் பர்மர். நீதிமன்றத்தில் இவர் பிறழ் சாட்சியாக மாறிவிட்டார். ஆனால் அவரை பிறழ் சாட்சி என்று அறிவிக்கவும் இல்லை. அவர் குறுக்கு விசாரணை செய்யப் படவும் இல்லை. ஆனந்த் கத்தாரியாவும் முழுமையாக விசாரிக்கப் படவில்லை.

4) 2008 ஆம் ஆண்டில் போப்பாலில் நடந்த ஒரு கூட்டத்தில்தான் "குண்டுக்குக் குண்டு" என்ற ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இதில் அசீமானந்தா குண்டு வைத்து அப்பாவி இந்துக்களைக் கொலை செய்யும் ஜிஹாதிகளை நாமும் குண்டு வைத்து கொலை செய்திட வேண்டும் எனப்பேசி இருக்கின்றார்.

இதற்கிருந்த ஒரே கண்ணால் கண்ட சாட்சி டாக்டர். ராம் பிரதாப் சிங். ஆனால், இவர் பின்னால் சாட்சியம் சொல்லிட மறுத்துவிட்டார். இந்தநிலையில் அவரை எதிராய்ப் போய்விட்ட சாட்சியம் என அறிவித்திருக்க வேண்டும். அத்தோடு அவரை நீதிமன்றத்தில்


vaigarai velicham official

நிறுத்தி அவரை குறுக்கு விசாரணை செய்திருக்க வேண்டும். அவருடைய முரண்பட்ட செயலை, நீதிமன்றத்தின் முன் தோலுரித்துக் காட்டி இருக்க வேண்டும்.

*5)* டாக்டர் ராம்பிரசாத் சிங், வாசுதேவ் பரமரரை – ஐ போல் *51* (ஐம்பத்தொரு) சாட்சி யங்கள், எதிராகத் திரும்பிவிட்டார்கள். இவர்களை எதிராகத் திரும்பிவிட்ட சாட்சி யங்கள் என அறிவித்திருக்க வேண்டும். ஆனால், அவர்களை எதிராகப் போய்விட்ட சாட்சியம் என்று அறிவிக்கவில்லை. அவர்களைக் குறுக்கு விசாரணை செய்யவுமில்லை.

*6)* சம்சவ்தா விரைவு ரெயிலில் வைக்கப் பட்ட குண்டுகளில் இரண்டு குண்டுகள் வெடிக்க வில்லை. இந்த இரண்டு குண்டுகளும், இரண்டு சூட்கேஸ்களில் இருந்தன. இந்த சூட்கேஸ் களுக்கான மேலுறையைத் தைத்தது இந்தூரைச் சார்ந்த ஒரு டெய்லர். இந்த டெய்லரை வைத்து ஓர் அடையாளம் காணும், அணிவகுப்பு நடத்தி இருக்க வேண்டும். (TIP - Test Identification Parade). இதை நடத்தி இருந்தால் யார் அந்த சூட்கேஸ் உரையைத் தைக்க வந்தார்? அவருக்கும் இந்தக் குண்டுவெடிப்பிற்கும் என்ன சம்மந்தம் என்பவையெல்லாம் தெளிவாகத் தெரிய வந்திருக்கும்.


இந்த வழக்கை புலன் விசாரணை செய்த முகமை, இதைச் செய்யவில்லை இதனால், பல முக்கிய தெளிவான சாட்சியங்களை விட்டு விட்டார்கள்.

மேலே நாம் குறிப்பிட்டவற்றிலிருந்து ஓர் உண்மை தெளிவாகும். அது சாட்சியங்கள்தாம், வழக்கில் எதிராகப் போய்விட்டன என்பது மட்டுமல்ல, வழக்கை விசாரித்த முகமைகளும் எதிராகப் போய்விட்டன. மட்டுமல்ல வழக்கை விசாரித்தவர்கள், குற்றவாளிகளுக்கு எதிராக குற்றவாளிகளை இவர்தாம் குற்றவாளிகள் என வாதிட வேண்டிய அரசு வழக்கறிஞர்கள் அனை வரும் குற்றவாளிகளைப் பாதுகாப்பவர்களாக ஆகிவிட்டார்கள்.

குற்றவாளிகளைக் கூண்டிலே நிறுத்தி இவர்கள்தாம் குற்றவாளிகள் என வாதித்திட வேண்டியவர்கள், இவர்கள் குற்றவாளிகள் அல்ல என வாதிக்கத் தலைப்பட்டுவிட்டார்கள்.

இந்த இடத்தில்தான் அதாவது இப்படிப் பட்ட சூழ்நிலையில்தான் நீதிமன்றம், சட்டப் படியாகத்தான் செய்திட வேண்டிய கடமை களைச் செய்திட முன்வந்திட வேண்டும். அதாவது இந்த இடத்தில் உச்ச நீதி மன்றத்தின் வழிகாட்டுதல்களின் கீழ் நீதிபதி செயல்பட வேண்டும். இந்த வழிகாட்டுதல் பெஸ்ட் பேக்கரி வழக்கு என அறியப்பட்ட *(2004)* வழக்கில் வழங்கப்பட்டது. இந்த வழிகாட்டுதலின்படி, நீதிபதி அவர்கள் இந்த விசாரணையில் ஓர் அங்கமாக மாறிவிட வேண்டும். மறைக்கப்படும் எல்லா விவரங்களையும், கேட்டுப் பெற்றிட வேண்டும். உண்மையை கண்டறிந்திட வேண்டும். நீதி பரிபாலனத்தை செம்மையாக நிறைவேற்றிட வேண்டும். பக்க சார்பாக நின்றிடக் கூடாது. நடுவு நிலையோடு நடந்திட வேண்டும்.

(ஆதாரம் : உச்சநீதி மன்ற தீர்ப்பு : Zahira Habibullah. H.Sheikh VS State of Gujarath, 2004 (A) Supreme Court Cases 158 Which is commonly known as best Bakery Case : P.39)



உடலில் மச்சம் இருந்தால் அதிர்ஷ்டம் என்பார்கள். செல்வாக்குள்ள மனிதர் யாரையாவது பார்த்தால் அவனுக்கு உடம் பெல்லாம் மச்சம்டா என்று பேசிக் கொள்வது உண்டு. சாஸ்திர சம்பிரதாயத்தில் கூட மச்சத்துக்கு பலன் உண்டு என்று கூறுவார்கள். எங்கெங்கு மச்சம் இருக்கிறதோ அதற்கான பலன்கள் என்னவென்றும் கணித்து கூறுகிறார்கள்.


உண்மையில் மச்சம் என்பது அதிர்ஷ்டம் அல்ல, நோய் ஆபத்தின் அறிகுறி என்கிறார் அக்குபஞ்சர் மருத்துவர் எம்.என்.சங்கர். அவர் இங்கே விவரிக்கிறார். அக்குபங்சர் மருத்துவ தத்துவத்தின்படி உடலின் ரகசியபுள்ளிகளில் ஏற்படும் மச்சங்கள் மற்றும் நிறமாற்றங்களை வைத்தே நோயாளியின் நோயை மிக எளிதாக கணிக்க முடியும்.

ஆம்! பல மச்சங்கள் நோயின் அறிகுறியே! மச்சங்களை கிள்ளியெடுத்து மைக்ராஸ் கோப்பின் அடியில் வைத்து `எபிடொமிஸ்' என்றும், `மெலனோசைட்' என்றும் கூறி புற்றுநோயாகவும் இருக்கலாம் என்று ஆங்கில மருத்துவ விஞ்ஞானிகள் பயமுறுத்துவது உண்டு! மச்சங்கள் உருவாவது பல சமயங்களில் உடல் உறுப்புகளின் நோயை வெளிக்காட்டும் இயற்கையின் அபாய அறிவிப்பே ஆகும்.




படத்தில் உள்ள 1-ம் புள்ளி பெருங்குடல் சக்தி நாளத்தின் கடைசி புள்ளியாகும்.

இந்த இடத்தில் மச்சம், மரு உள்ள வர்களை பார்த்து உங்களுக்கு சைனஸ், மலச்சிக்கல் உள்ளதா? என கேட்டுப் பாருங்கள். ஆம் என அதிசயித்துப் போவார்கள். கண்ணின் அருகிலுள்ள மச்சம் சிறுநீர்த்தாரையில் நோயிருப்பதை சுட்டிக் காட்டும்.



ரஹ்மத் ராஜகுமாரன்

நுரையீரல் சக்தி ரேகையின் ஆரம்பப் புள்ளியில் மச்சமோ, நிறமாற்றமோ கொண்டவர்களுக்கு (இவர்களுக்கு விரலால் அழுத்தினால் வலிக்கும்) ஆஸ்துமா இருப்பது கண்கூடு.

நடுமார்பில் மச்சமோ, தோலில் சிவப்பு நிறபடை போன்றோ காணப்படின் இதய உறை பாதிப்படைந்ததை கண்டு கொள்ளலாம்.

கல்லீரல் சக்தி ஓட்டத்தின் கடைசிப் புள்ளியில் மச்சம் உள்ளவர்களுக்கு நாட்பட்ட வைரஸ் தாக்குதல், சிரோசிஸ் போன்றவை இருக்க சந்தர்ப்பம் உண்டு.

அதற்கு நேர் கீழே பித்தப் பையின் 21-வது புள்ளியில் மச்சம் உள்ளவர்களுக்கு `ஸ்கேன்' பார்க்காமலேயே பித்தப்பையில் கற்கள் உருவாகி வருவதையும், இயக்க குறைவையும் கூறிவிடலாம்.

சிறிது கீழேயுள்ள கல்லீரலின் 13-வது புள்ளியிலுள்ள மச்சம் மண்ணீரல் சம்பந்தப்பட்ட நோயை நமக்கு பறைசாற்றுகிறது. பக்கவாட்டில் உள்ள பித்தப் பையின் 24-வது புள்ளியின் மச்சம் சிறுநீரக சக்திரேகையின் தடையை நமக்கு உணர்த்துகிறது.

வயிற்றின் தொப்புளுக்கும், மார்புக்கும் இடைப்பட்ட 14-வது புள்ளியில் காணப்படும் மச்சம் இதயநோயின் அறிகுறியாகும்.

(எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மச்சக்காரர்) அதற்கு கீழே இரண்டு அங்குல இடைவெளியில் மச்சமிருப்பவர்களுக்கு வயிற்று உபாதைகளான அஜீரணம், வாயு, அல்சர் ஏற்பட வாய்ப்புள்ளது.

# மச்சம்
## Horology


vaigarai velicham official

தொப்புளுக்கு இரண்டு அங்குலங்கள் இடைவெளியில் பக்கவாட்டில் உள்ள வயிற்று சக்திநாள 25-வது புள்ளிகளின் மச்சமானது பெருங்குடல் நோய்களை அறிவிக்கும் மணியோசையாகும்.

தொப்புளுக்கு நேர் கீழே (மச்சம் இருப்பின்) முக்குழி வெப்பப்பாதையில் ஏற்பட்ட குறை பாட்டையும், சிறுகுடல் குறைபாட்டையும், சிறு நீர்ப்பையின் செயலிழப்பையும் நமக்கு வெளிச்சம் போட்டு காட்டும்.

உடலின் பின்பகுதியில் தோளின் மேடான பகுதியில் பித்தபையின் 21-வது புள்ளியில் காணப்படும் மச்சம் தைராய்டு சுரப்பியின் நோயையும், பெண்களுக்கான சமனற்ற ஹார் மோன் இயக்கத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.

முதுகிலுள்ள சிறுநீர்ப்பைக்கான சக்தி நாளங்களிலுள்ள புள்ளிகள் சரித்திர முக்கியத் துவம் வாய்ந்தவையாகும்.

கழுத்து எலும்புக்கு கீழே 1 அங்குலம் பக்கவாட்டிலுள்ள 11-வது புள்ளியின் மச்சம் ஆர்த்ரைடிஸ், மூட்டுக்கு மூட்டு வீக்கம்

அதற்கு நேர்கீழே 13-வது புள்ளியில் காணப்படும் மச்சம் நுரையீரலின் சக்தி குறைவை காட்டுகிறது. அதற்கு கீழுள்ள மச்சங்கள் முறையே இதயஉறை, இதயம், கல்லீரல், பித்தப்பை, மண்ணீரல், வயிறு, முக்குழி வெப்பம், சிறு நீரகம், பெருங்குடல், சிறுகுடல்,சிறுநீர்ப்பை போன்ற உறுப்புக்களின் `காலக்கண்ணாடி' ஆகும்.

இன்னும் ஒரு ஆச்சரியமான விஷயம், சம்பந்தப்பட்ட புள்ளிகளின் உட்புறம் சம்பந் தப்பட்ட உறுப்புகள் அமைந்திருப்பதாகும். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வெறும் கண்களால் கண்டுணரப்பட்டு நெறிப்படுத் தப்பட்ட இந்த இந்திய-சீன பாரம்பரிய விஞ்ஞானத்தை டிவைன் மெடிசன் என்றால் அது மிகையாகாது.

நோய்க் குறியீடான இந்த மச்சங்கள் நிலையானவைகளா? அல்ல. அந்நோயின் தீவிரம் குறைந்த பின்பு நாளடைவில் மறைந்து விடுகிறது.`சாமுத்ரிகா லட்சணம்' என்ற நூலிலும் இதை சார்ந்தே மச்சங்களின் பலன்கள் கணித்து சொல்லப்பட்டுள்ளன.

எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தில் அடையாளத் திற்காக எழுதப்பட்ட மச்சங்கள், தழும்புகளை போல் அல்லாது நாளடைவில் மறைந்து போவதும் உண்டுதானே?

காது மடலில் ஏற்படும் சிறு மச்சங்கள் மற்றும் நிறமாற்றங்களை கூர்ந்து ஆராய்ந்தால் உடல் நோய்களை துள்ளியமாக கணிக்க இயலும்.

காதில் உணவுக் குழலுக்கான புள்ளியில் காணப்பட்ட மச்சத்தை கவனித்து தங்களுக்கு உணவுக்குழல் நோயுள்ளதா என விசாரித்த போது, மிகவும் ஆச்சரியத்துடன் ஆமாம் என ஒப்புக் கொண்டார்.

நான் அவரது வலக்கையை பிடித்து உள்ளங்கையில் உணவுக் குழலை பிரதி பலிக்கும் புள்ளியில் சிறிது அழுத்தம் கொடுத்தேன். `ஆ'வென கையை இழுத்துக் கொண்டார். வலியுள்ள அந்த இடம் உங்கள் நோயை பிரதிபலிக்கிறது. அதே இடத்தை தினமும் காலை, மாலை சாப்பிடுவதற்கு அரைமணி முன் (அவரது பாணி) 3 நிமிடங்கள் விட்டு விட்டு அழுத்திவாருங்கள். உங்களது நாட்பட்ட நோய் குணமாகும்

அவரோ “என்ன சைக்காலஜியா?” என பெரிதாக சிரித்தார். “அல்ல இது ரெஃலக்ஸாலஜி' இரண்டுவாரம் சிகிச்சைக்கு பிறகு எனக்கு போன் செய்யுங்கள்” என்று விசிட்டிங் கார்டை கொடுத்தேன். சரியாக ஒன்பதாவது நாள், அவரது போன், ஆச்சரியத்துடன் நன்றி தெரிவித்தும், தனது உபாதைகள் 80 சதவீதம் நீங்கியுள்ளதாகவும் கூறினார்.

> “ஓர் இறைநம்பிக்கையாளர் பாவம் புரிகின்ற போது அவருடைய உள்ளத்தில் ஒரு கரும்புள்ளி பதியப்படுகின்றது. தான் செய்த பாவத்தை எண்ணி மனம் வருந்தி அதற்காக இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோருகையில் அவருடைய உள்ளமானது பரிசுத்தப்படுத்தப்படு கின்றது.
>
> மாறாக, அவர் (அதிலிருந்து மீளாமல்) மீண்டும் மீண்டும் பாவம் செய்து கொண்டேயிருப்பாரெனில் (கரும்புள்ளி பதியப்படுவதும் அதிகரித்து) அவருடைய உள்ளம் முழுவதையும் (நற்போதனைகள் பயன்தராத விதத்தில், இருளாக) சூழ்ந்து கொள்கின்றது.
>
> பாவமானது (கரும்புள்ளிகளாக அவருடைய) உள்ளத்தை சூழ்ந்து கொள்வதைப் பற்றி, அல்லாஹ் தனது வேதமான குர்ஆனில்
>
> “அவ்வாறில்லை! மாறாக அவர்கள் செய்தது அவர்களது உள்ளங்களில் துருவாகப் படிந்து விட்டது (83:14)” என்று குறிப்பிடுகின்றான்” என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
>
> - அபூஹுரைரா (ரலி)
> நூல்: இப்னுமாஜா 4242



# ஞாபக மறதியை விரட்ட சித்த மருத்துவம் சொல்லும் ரகசியம்

Dr.S. அருள்சொரூபி M.D.(S).,M.A.(Yoga)
சித்த மருத்துவர்

**முதலில் ஒரு நல்ல செய்தி!**

எல்லா மறதிகளுக்கும் மருத்துவம் தேவை யில்லை. எல்லா மறதிகளும் கவலைக்குரிய வையும் இல்லை. அதேபோலக் கவனக்குறை வாலோ அல்லது வயது முதுமையாலோ மறதி வந்தாலும் உடனே கலங்கிவிடாதீர்கள். ஞாபக மறதி எந்த வயதினருக்கும் வரும்.

**திருக்குறளும் வாய்ப்பாடுகளும்..**

இன்று மூத்த குடிமக்களாக இருக்கும் நாம், நம்முடைய மாணவப் பருவத்தைச் சற்று ரீவைண்ட் செய்து பார்ப்போம். அப்போது நமக்கு மனப்பாடம் செய்வதற்கான பல வாய்ப்புகள் இருந்தன. அக்கறையுடன் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களும் அமைந்தார்கள். அதனாலேயே வாய்ப்பாடுகள். திருக்குறள், ஆண்டாள் பாசுரம் எனப் பல பொக்கிஷங்களைப் படித்தோம். இன்றும்கூட அவை சிலருக்கு நினைவிருக்கின்றன. ஆனால், நம் ஞாபக சக்தி அளவுக்குக் கூட நம் குழந்தைகளின், பேரப் பிள்ளைகளின் ஞாபகசக்தி இருப்பதில்லை.

**இன்றைய குழந்தைகளின் மறதி**

இன்றைய குழந்தைகள் மற்றும் இளைஞர் களுக்குத் திரைப்படங்களின் காட்சிகள், சீரியல்கள், சினிமா பாடல் எல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஆனால், புத்தகத்தில் இருக்கும் பாடங்களைக் கேட்டால் பிள்ளை களுக்கு அலர்ஜி வந்துவிடுகிறது. இதற்குக் கற்றல் குறைபாடு, ஆர்வமின்மை மட்டுமின்றி, மறதியும் ஒரு காரணமாக இருக்கிறது. இது இன்றைய பெற்றோர்களின் புலம்பலாகவும் உள்ளது. இதைச் சொல்வதற்கான காரணம். மறதி என்பது முதுமைக்கானது மட்டுமே அல்ல. அது நோயுடனும் தொடர்புடையது அல்ல.

**சித்த மருத்துவம் சொல்லும் தீர்வு**

நமக்கு வயதாகிவிட்டது. சிறுவயதில் நம்முடன் விளையாடிய நண்பரின் பெயர் நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஆனால், வீடு தேடிச் செய்தித்தாள் போட வருகிற சிறுவனின் பெயர் நினைவில்லையே என்றும் தோன்றும். அப்படியெனில் நமக்கு அல்ஸைமர் என்கிற மறதி வியாதி வந்துவிட்டதா எனவும் மனதில் அலாரம் அடிக்க ஆரம்பிக்கும். பயப்பட வேண்டாம்... நவீன அறிவியல், மறதிக்கு ஆயிரம் காரணம் சொல்லட்டும்... அவற்றையெல்லாம் தீர்க்க நம்முடைய சித்த மருத்துவத்தில் அற்புதமான தீர்வுகள் இருக்கின்றன.

**ஞாபக சக்தி என்பது...**

ஞாபகசக்தி என்பது என்னவென்று புரிந்துகொண்டால் இந்தக் கேள்விக்கான பதில் கிடைத்துவிடும். ஞாபகம் என்பது மொபைல் போனில் இருக்கும் மெமரி கார்ட் போல அதில் நாம் என்ன பதிந்து வைக்கிறோமோ அதையே திரும்பக் கேட்கிறோம்; பார்க்கிறோம். அதே போல மூளை நரம்பு செல்களுக்கு சிறு பயிற்சியின் மூலம் செய்திகளைப் பதிய வைத்தால் மறதி மெல்ல விலகும். 'இன்னும் கொஞ்சம் எளிமையாகச் சொல்லுங்கள் டாக்டர்' என்று கேட்கிறீர்களா? அதாவது, வயது ஏற ஏற மறதி ஏற்படுவது இயல்புதான். இருந்தாலும் சில பயிற்சிகளின் மூலம் மறதியின் அவதியிலிருந்து மீள முடியும்' என்பதை அறிவியல் ஆராய்ச்சிகள் கூறுகின்றன.


vaigarai velicham official

**பலன் தரும் பயிற்சிகள்**

ஞாபகசக்தியை மேம்படுத்தச் சில எளிமை யான பயிற்சிகள் உள்ளன. அவற்றை முடிந்தளவு செய்தால் போதும்.

- நேற்று என்னவெல்லாம் சாப்பிட்டோம். யார் யாரையெல்லாம் சந்தித்தோம் என நினைவு படுத்திப் பார்க்க வேண்டும். அன்றைய இரவில் தூங்கச் செல்லும் முன்னும் நடந்தவற்றை அசைபோடலாம். தெருவில் உள்ளவர்களின் பெயர்களையும் தெரிந்தவர்களின் முகங்களையும் நினைவில் வைக்கப் பழக வேண்டும்.
- நம் பிள்ளைகளின் மொபைல் எண்களைத் திரும்ப திரும்ப நினைவில் கொண்டுவர வேண்டும்.
- அன்றாடம் காலையில் நாம் செய்ய வேண்டிய வேலைகளைப் பட்டியலிட்டு அவற்றைச் செய்து, இரவில் நாம் இட்ட பட்டியலில் முழுவதும் முடிந்துவிட்டதா என மூளையைச் சிறிது சிறிதாகப் பழக்க வேண்டும்
- கடைகளுக்குச் செல்லும் முன் வாங்க வேண்டிய லிஸ்ட்டை நினைவில் வைத்து, அதை வாங்கியபின் சரிபார்க்க வேண்டும்.
- மறக்காமல் வெளியில் செல்லும் முன்பு நம்மைப் பற்றிய அடையாள அட்டையை (வீட்டு முகவரி, தொலைபேசி எண், நம்முடைய நோய் பற்றிய விவரங்கள்) கொண்டுசெல்ல வேண்டும்.

**மறதியைப் போக்கும் உணவுகள்**

உணவில் வைட்டமின் பி சத்துக்கள் போதிய அளவில் உட்கொண்டால் ஞாபகமறதி குறையும். பருப்பு, கீரை, பட்டை தீட்டப்படாத தானியம், முளைக்கட்டிய பயிர் வகைகள், இவற்றில் வைட்டமின் பி சத்துக்கள் உள்ளன. ரத்தச்சோகை உள்ளவர்களுக்கு மறதி இருக்கும். எனவே, நிறைய இரும்புச்சத்துள்ள பழங்கள், முருங்கைக்கீரை, கத்தரிப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு நிறைய சாப்பிடலாம்.

இவற்றுக்கு மேலே வல்லாரை என்ற கீரையை உணவில் சேர்த்தால் மறதி வராது. நோய் எதிர்ப்பு சக்தியை அளித்து, சர்க்கரை நோயில் வரும் ஆறாத புண்களை ஆற்றவல்லது வல்லாரைக் கீரை. 'வல்லாரை மாத்திரை' வடிவிலும் வருகிறது. இதையும் எடுத்துக் கொள்ளலாம்.

**சில எளிய மருந்துகள்**

ஞானவல்லி மாத்திரை என்பது குழல்வடிவில் நாட்டுமருந்துக் கடைகளில் கிடைக்கிறது. இது மூளைக்குப் புத்துணர்ச்சியும் ஞாபக சக்தியும் மன அமைதியையும் கொடுக்கும். இதில் வல்லாரை, பிரம்மி சடாமாஞ்சில், சீத்தில், மஞ்சள் கரிசாலை, வாழுளுவை, அமுக்கரா சேர்ந்துள்ளதால் முதியோர்களின் மனச்சோர்வை நீக்கி ஞாபகசக்தியை அதிகப்படுத்துகிறது.

வாணிகிருதம் என்ற நெய் வடிவில் உள்ள மருந்தும் ஞாபக சக்தியைப் பெருக்கி மூளையில் உள்ள நியூரான்களுக்கு வலிமையைத் தரும். சர்க்கரை நோய் இல்லாதவர்கள் வல்லாரை லேகியம் சாப்பிடலாம். வல்லாரை லேகியத்தில் வல்லாரைக்கீரை, பனைவெல்லம், தேங்காய்ப் பால், தேன், நெய் சேர்ந்துள்ளதால் உடலைத் தேற்றித் திடமாக்கி, நரம்புத் தளர்ச்சியையும், ஞாபக மறதியையும் போக்கும்.


மேற்கூறப்பட்ட மருந்துகளை மருத்துவரின் ஆலோசனையின் பேரில் உட்கொள்வது நல்லது.

**நன்றி - முதுமை எனும் பூங்காற்று**



ஆங்கிலம் : **JOHN FEFFER**

தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




அன்பார்ந்த வாசகர்களே!

செப்டம்பர் 11,2001 நிகழ்வைத்தான் 9/11 என அடையாளப்படுத்துகின்றார்கள். இந்த நாளில் அமெரிக்காவின் இரு கோபுரங்கள் தாக்கப்பட்டன. முழுக்க முழுக்க அமெரிக்க உளவுத் துறையின் ஏற்பாடு.

25 ஆண்டுகளுக்கும் இப்போது, அன்று அமெரிக்கா சொன்னதெல்லாம் பொய் என்பது தெளிவானது.

அன்று அமெரிக்காவின் பொய்களை நம்பி போருக்கு போனவர்கள், குறிப்பாக இராணுவத்தினர், தாங்கள் பெற்ற விருது களையெல்லாம், தூக்கி வீசினார்கள் குப்பைமேடு களில்.

அன்று பெரும் பழியைச் சுமந்தவர்கள் தாலிபான்கள், பட்டினிபசி, தலைமறைவு வாழ்க்கை, இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு 21 ஆண்டுகள் தொடர்ந்து போர் செய்து வெற்றியை நீட்டினார்கள். இன்று ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமிரகமாக மிளிர்கின்றது.

இதில் மிகவும் வேதனையான செய்தி என்னவென்றால் எல்லா முஸ்லிம்களையும், முஸ்லிம் நாடுகளையும், தாலிபான்களுக் கெதிராக ஒரே நொடியில் திருப்பிவிட்டார்கள். 9/11 என்ற தாக்குதலை அமெரிக்கர்களே நடத்தினர்.!

ஆனால் வைகறை வெளிச்சம் சார்பில், அன்றே 9/11 நடந்த அன்றே இது அமெரிக் காவின் உள்ளிருப்பு வேலை என்பதை தெளிவு படுத்தினோம். அப்போது நாம் நிறுவி நடத்தி வந்த, விடியல் வெள்ளி பத்திரிகையில் இதனை மிகவும் அதிகமாக தெளிவுபடுத்தினோம். இப்போது நூலாகவும் வெளியிட்டுள்ளோம்.

**- MGM**

# இஸ்லாத்திற்கெதிரான மேலை நாடுகளின் மறு உயிர்பெற்ற போர்

**"The West's Resurgent War on Islam"**

ஜான் பெஃபர் கூறுகின்றார்:

அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் தாக்கப்பட்டவுடன் அமெரிக்காவுக்கு உலக மக்களின் ஒட்டுமொத்த அனுதாபமும் ஒன்றாய்க் கிடைத்தது.

அமெரிக்கா இந்த அனுதாபத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு பெரும் போரை தீவிரவாதத்திற்கெதிராக, அதாவது இஸ்லாத்திற்கெதிராகப் பிரகடனப்படுத்தியது.

இதில் முஸ்லிம் நாடுகளும், முஸ்லிம் அறிஞர்களும்கூட அமெரிக்கா எடுக்க இருந்த நடவடிக்கைகளுக்கும், தொடுக்கவிருந்த போர்களுக்கும் துணை நின்றார்கள். இதைப் பயன்படுத்திக்கொண்டு பல்வேறு அடுக்கு

நடவடிக்கைகளை அமெரிக்கா அறிவித்தது.

தாலிபான்களைக் குற்றம் சாட்டியபோது எல்லோரும் தாலிபான்களைத் தீவிரவாதிகள் என நம்பினார்கள்.

தாலிபான் மீது நடவடிக்கைக்கு ஈரானே உதவி செய்ய முன்வந்தது. சிரியா, இஸ்லாமிய தீவிரவாதிகளைப் பற்றிய தகவல்களை அமெரிக்காவுடன் பகிர்ந்துகொள்ள முன் வந்தது. முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பும் ஹமாஸ்-சும் தீவிரவாத செயல்களைக் கண்டித்தன. ஜோர்டானிலுள்ள இஸ்லாமிய அறிஞர்களின் குழுமம் அதனை ஒரு பெரும் தண்டனைக்குரிய குற்றம் என அறிவித்தது. சட்டத்தின் முன் நிறுத்திட வேண்டும் என உலகம் போற்றும் இஸ்லாமிய அறிஞர் டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி அவர்களும் அவருனிட ருந்த நான்கு மார்க்க அறிஞர்களும், மார்க்க தீர்ப்புகளை வழங்கினார்கள்.

இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு OIC திரும்பத் திரும்பத் தீவிரவாதத்திற்கு எதிராகப் பேசிக்கொண்டே இருந்தது. (இவர்களின் அறிக்கை ஒன்றும் ஆச்சர்யத்தை ஏற்படுத்திட வில்லை. காரணம் இதன் உறுப்பு அமைப்புகள் என முஸ்லிம் நாடுகள் பலமுறை தாக்குதலுக்கு உள்ளாகின.)

அமெரிக்காவிலிருந்த எல்லா இஸ்லாமிய அமைப்புகளும், முஸ்லிம்களும் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டதை (9/11) கண்டித் தார்கள். இவையெல்லாம் அதாவது (9/11) தாக்குதல் எல்லாம் கோழைத்தனமானவை என்பதை எடுத்துக்காட்டினார்கள். அமெரிக் காவில் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் இஸ்லாமிய அமைப்பான (Air Council on American Islamic Relations) என்ற அமெரிக்க இஸ்லாமிய உறவுக்கான குழுமம் இந்த 9/11 தாக்குதலை கண்டித்தது.

ஆனால், அமெரிக்கா இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் இரண்டாம் சிலுவைப் போரை அறிவித்தது. அமெரிக்காவின் நீண்டகால எதிரிகள் எல்லோரும் ஒன்றாய் அமெரிக்காவின் நடவடிக்கைகளை ஆதரித்ததை அப்படியே அரவணைத்துக்கொள்ள தவறிவிட்டது. அது இந்த ஆதரவுகளை அப்படியே மறந்துவிட்டது. அமெரிக்காவின் பரம்பரை நண்பர்களான அரபு நாடுகள் தந்த நல்ல ஆலோசனைகளையும் அமெரிக்கா புறந்தள்ளியது. இந்த நாடுகள் (இந்த அரபு நாடுகள்) காலாகாலமாக அமெரிக்காவின் அனைத்துக் கொள்கைகளையும் ஆதரித்து வந்தன.

அனைத்தையும் புறந்தள்ளிவிட்டு புஷ் நிர்வாகம், முஸ்லிம் இளைஞர்களைக் கடத்திச் செல்வதிலும், அவர்களைச் சித்திரவதைச் செய்வதிலும், அதிகக் கவனம் செலுத்தியது. மனித உரிமைகள் அனைத்தையும் ஒன்றாய் மண்ணிலே போட்டு மிதித்தன. “அபுகுரைப்” என்ற இடத்தில் (ஈராக்) சித்திரவதைக் கூடம் ஒன்றை தொடங்கியது. ஆப்கானிஸ்தானில் Camp Bagram பாக்ரம் என்ற இடத்தில் ஓர் சித்திரவதைக் கூடத்தைத் தொடங்கியது. Camp Delta டெல்டா கேம்ப் என்றொரு சித்திரவதைக் கூடத்தை CUBA-கியூபா தொடங்கியது. அத்தனை சித்திரவதைக் கூடங்களிலும் நடந்த சித்திரவதைகளை நியாயப்படுத்தவும் செய்தது. ஐரோப்பரில் நடந்த சித்திரவதைக் கூடங்கள் முழுவதும் கடத்திச் செல்லப்பட்ட முஸ்லிம் இளைஞர்களே சித்திரவதைச் செய்யப்பட்டார்கள்.

இந்தப் பரபரப்பில் ஆப்கானிஸ்தானில் ஒரு பெரும் போர்.

இன்னும்பல காரணங்களை உருவாக்கி ஈராக்-இல் பெரும் போர், எனப் பலப்போர் களையும் தொடங்கினார்கள் புஷ்.

இதில் முஸ்லிம் தலைவர்களையும் தளபதி களையும், குறிவைத்துக் கொலை செய்வதும் நடந்தது. (Tagrgeted Assasination) இன்னும் பல நாடுகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என தாக்குதல்கள் நடந்தன.

இதில் அமெரிக்கா உள்நாட்டு சட்டங் களையும் உலக அளவில் உள்ளச் சட்டங் களையும் கண்ணை மூடிக்கொண்டு மீறியது.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்.

# மதமாற்றம் அபாயம் அல்ல; மனிதகுல 'அபயம்'!

கலைமாமணி
அப்துல்லாஹ் அடியார்

இஸ்லாம் மார்க்கத்திற்கு ஒரு சில நூறுபேர் சென்றதும்- “ஐயோ இது அபாயம்''-என்று ஆவேச ஓங்காரக் கூச்ச லிட்டுக் கொதிப்பார்- குதிப்பார் சிலர்; "கொண்டுவா மத மாற்றச் சட்டம்” என்று கூறுவார் சிலர்!

மதமாற்றத்தைத் தடுப்போம்''-எனக் கச்சை கட்டுவர் சிலர்! கடுமுயற்சி கொள்வார் சிலர்! புதிதாகத் தோன்றி விட்ட பயங்கரம்-எனப் பெயர் மகுடம் இடுவார் சிலர்! சரிதம் புரியாச் சிற்றறிவாளர்களுக்கு சில ஞானமொழிகள் புகல் வோம்; கேளீர்!

மதமாற்றம் ஒரு அபாயம் என்றால் இந்திய நாட்டுச் சரித்திரமே அந்த அபாயத்தின் தொடர் சரிதம்தான்!

ஆரியப் படை எடுப்புக்கு முன்னர் இந்திய நாட்டில் இருந்த மதம் வேறு; தஸ்யூக்களின் மதம்; அரக்கர்களின் மதம் என்று சிலர் கூறுவார்கள். தாழ்த்தப்பட்டோர்-தலித்துகள் என்று இன்றைய தினம் அழைக்கப்படு கின்றவர்கள் அரசர்களாக இருந்த ஆட்சிசெய்த இந்தியாவின் முதல் மதம் என்று டாக்டர் அம்பேத்கர் போன்றவர்கள் கூறுவார்கள். ஆரிய மதத்தார்-இங்கிருந்த தலீத் மதத்தைத் தாக்கி- அதில உள்ளவர்களை இந்து மதத்தில் சூத்திரர்-பஞ்சமர் என்ற மாற்றம் செய்ததுதான் இந்திய சரித்திரத்தின் தொடக்கம் என தலீத் இனத்துச் சரித்திர ஆசிரியர்கள் கூறுவர்.

ஆரிய மதத்தை எதிரத்து மன்னர்களாக இருந்த க்ஷத்திரியர்களான புத்தரும் - மகாவீரரும் உருவாக்கிய மதங்கள்தாம் புத்தமதமும்? ஜெயின் என்ற சமண மதமும்!

### புத்தர் வரலாறு

ஆரிய வேதமதத்தில் ஒட்டிக்கொண்டிருந்த சூத்திரர்களும், பஞ்சமர்களும் சமண மதத்திற்கு மாறினார்கள். புத்த மதத்திற்கு



மாறினார்கள். சாதாரண மக்கள் மட்டுமல்ல; மன்னர்களும் மாறி னார்கள் என்று இந்திய சரித்திரம் கூறும்! மத மாற்றம் ஒரு அபாயம் என்றால் அந்த அபா யத்தை முதலில் மூட்டிய வரே புத்தா தான்! அவருக்குப் பின்னர் வந்த அசோகர் தமது மக்களை இலங்கைக்கு அனுப்பி அங்குள்ள வர்களை மத மாற்றம் செய்து புத்தமதத்தில் சேர்த்தார். அசோக மன்னனும் மதமாற்றம் என்ற அபாயத்தைச் செய்த மன்னனே! இவ் ரிதம் இந்திய வரலாற்றில் மத மாற்ற அபாயம் நிகழ்த்த செய்திகளை ஏராளமாகக் காணலாம்.

### கிறிஸ்துவ வரலாறு

உலகில்-இயேசு கிறிஸ்துவுக்கு முன்னர் ஐரோப்பிலும் பிற நாடுகளிலும் சிறுசிறு தெய்வங்களைக் கொண்டாடுகின்ற மதம்தான்





vaigarai velicham official

இருந்து வந்தது. இயேசுவின் சீடர்கள் உலகம் முழுவதும் சுற்றிவந்து பழைய மதத்துக்காரர் களை கிறிஸ்தவ மதத்திற்கு" மதமாற்றம் செய்தார்கள். மத மாற்றி அபாயத்தை உலகம் முழுவதும் செய்ததே கிறித்துவப் போதகர்களே! அந்தக் கிறிஸ்துவப் போதகர்களில் சிலர் மத மாற்றம் என்கிற அபாயத்தைச் செய்ததாக பழைய மதத்தை சார்ந்தவர்களால் கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்பது உலக வரலாறு!

## தென்னாட்டு சரித்திரம்

இப்போது தமிழ்நாட்டு-தென்னாட்டுச் சரித்திரத்தைப் பார்ப்போம். பல்லவர்களில் புகழ்மிகுந்த பல்லவ மன்னனாய் இருந்த மகேந்திர பல்லவன் இந்து மதத்திலிருந்து சமண மதத்திற்கு 'மதம் மாறிய" அபாயத்தைச் செய்த வன். அவனுடைய மகனான நரசிம்ம பல்லவன் சமண மதத்தை விட்டவன்: இந்து மதத்தவன் ஆகியவள், அந்தக் காலத்தில் தான் அப்பர் என்ற திருநாவுக்கரசரின் சரித்திரமும் நிகழ்கிறது அவர் முன்பு சமண மதத்தில் இருந்தார், பிறகு சைவ மதத்திற்கு மாறினார். அதனால் அவர் பாறால் கல்லிலே கட்டப்பட்டுக் கடலிலே வீசப்பட்டார்! எரியும் நெருப்புள்ள சுண்ணாம்புக் காளவாயிலே வைக்கப்பட்டார். எதற்காக? மதமாற்றம் என்ற அபாயத்தைத் தடுக்க! ஆனால் அந்த கொடுமைகளால் அப்பரின் மதமாற்றம் தடுக்கப்பட்டதா? இல்லை! மதமாற்றம் எனும் அபாயத்தை (1)தடுக்கும் முயற்சி படுதோல்வி அடைந்தது!

பாண்டியர் ஆட்சி நடைபெற்ற காலத்தில் தான் சோழ நாட்டைச் சேர்ந்த திருஞானசம்பந்தர் மதுரை வருகிறார். அப்போது மதுரையை ஆண்ட பாண்டியன் சமண மதத்தைச் சேர்த் தவன். திருஞானசம்பந்தர் சமண பற்றுள்ள மக்களை எல்லாம்சைவர்களாக மாற்றுகிற 'அபாயத்தை'ச் செய்கிறார் என்று தெரிந்ததும்-மதுரைச் சமணர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? திருஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தார்கள்! ஆனால் திரு ஞானசம்பந்தர் மூட்டிய அபாயத்தை சமணர்கள் மூட்டிய தீ தடுக்க முடிந்ததா? அந்த மத மாற்ற அபாயம் எதுவரை சென்றதென்றால்... சமண மதத்து மன்னனான பாண்டியனே மதம் மாறினான்! சைவ மதத்தினர் பதிலுக்கு என்ன செய்தார்கள்? மதம் மாறிய பாண்டியனிடம் கூறி- சைவ மதத்துக்கு வர மறுத்து-எதிர்ப்புக் காட்டி மடத்துக்கு தீ வைத்த சமணர்கள் 8,000 (எண்ணாயிரம்) பேரைக் கழுமரத்தில் ஏற்றிக் கொலை செய்தார்கள். தென் பாண்டிச் சீமையின் மதக் கொலை வரலாறு இது!

## சைவ-சமணப்போர்!

இந்து மதம் என்று இப்போது பொத்தாம் பொதுவாகக் கூறுகிறார்களே அது உண்மை யல்ல! சைவம்-வைணவம் கௌமாரம்-சாக்தம் என்ற மதங்களின் கூட்டுத்தாள் இந்து மதம், அந்தக் காலத்திலும் இப்போதும் நாமம் ஒட்டுக் கொள்கிற வைணவர்கள் தங்களை 'வைஷ்ணவ மதத்தைச் சார்ந்தவர்கள்' என்று தான் அழைத்துக் கொள்வார்கள். நாமம் இட்டுக் கொள்ளும் வைணவள்-திருநீறு பூசிக்ககாளும் சைவனாக மாறுவது 'மதமாற்ற அபாயம்' என்றே அந்தக் காலத்தில் கருதினார்கள். ராமானுஜரும் அவரது சீடர்ளும் தமது வைணவ மதத்தில் அனைவரையும் சேர்க்கிறார் என்ற தகவல் கிடைக்கிறது!

மதமாற்ற அபாயம் நிகழ்ந்து விடக்கூடாது என்று அந்தக் காலத்து மன்னனும் நினைக் கிறான். கொடுமையைக் கட்டவிழ்த்து விடுகிறாள். ராமானுஜர் அதிலிருந்து தப்பி வடநாடு ஓடுகிறார். ஆனால் அவரது சீடர்-கூரத்தாழ்வான் என்பவர் மாட்டிக்கொள்கிறார்! சைவம் - வைணவத்தை விடச் சிறந்தது; சிவன்-பெருமானை விடச் சிறந்த கடவுள் என்று எழுதுமாறு கட்டளை இடுகிறான் மன்னன். கூரத்தாழ்வால் சமஸ்கிருத மொழியில் சிலேடையா - இரு பொருள் வரும்படியாக "மரக்கால்படியை விட உயர்ந்தது" என்று எழுதித்தந்து விடுகிறார். கோபம் கொண்ட சைவர் களும், மன்னனும் என்ன செய்தார்கள் தெரியுமா?

கூரத்தாழ்வாளின் இரு கண்களையும் தோண்டி விடுகிறார்கள், மத மாற்றத்தைத் தடுக்க அற்றக் காலத்து மன்னன் கையாண்ட முறை அது! கண்களை இழந்தபோதும்கூட கூரத்தாழ்வான்-மதமாற்றம் செய்கிற அபாயத்தை நிகழ்த்தாமல் கைவிட்டாரா? இல்லை! இதுதான் தமிழ்நாட்டு மதமாற்றம் சரித ஏடுகள்!

## திருமலை மன்னனின் மதமாற்றம்?

மதுரைக்கு வருகிறவர்கள் அங்குள்ள திருமலை நாயக்கர் மஹாலை வியந்து பார்த் திருக்கக் கூடும். அந்த மஹாலைக் கட்டிய திருமலை நாயக்கரின் சரித்திரத்தில் ''வெளிச்சத் துக்கு வராத ஒரு பகுதி'' உண்டு வைணவராக இருந்த திருமலை நாயக்கர் கிறிஸ்துவப் பாதிரியார்களிடம் தொடர்புகொண்டார். கிறிஸ்துவ மார்க்கத்தில் பற்றுக் கொண்டார்; பைபிளை படிக்கக் கேட்டார். பின்னா?... கிறித்துவ மதத்திலே தன்னை இணைத்துக் கொள்ள-(மதமாற்ற அபாயத்தை நிகழ்த்த எண்ணம் கொண்டார் கடிதங்களும் எழுதச் செய்தார்,

ஆனால்-கிறிஸ்துவப் பாதிரியார்கள் திருமலை மன்னனை தங்களது மதத்தில் சேர்த்துக்கொள்ள மறுத்தார்கள், ஒரே மனைவியுடன்தான் வாழவேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள். பலதார மணம்புரிந்த திருமலை மன்னன் கிறிஸ்துவ மதத்தில் சேரமுடியாமலேயே இறந்தான்! திருமலை மன்னர் எழுதிய விண்ணப்பக் கடிதம் திருச்சி ஆல யத்தில் இருப்பதாக "நாயக்கர் வரலாறு'' என்ற சரித ஏடு சான்று கூறுகிறது.

## ஏர்வாடி சரிதம்

ஏர்வாடியில் அடக்கமாகியுள்ள முஸ்லிம் பெரியவர் சையது இப்ராஹிம் ஷா என்பவர் இஸ்லாம் மார்க்கத்தைப் பரப்ப வந்தவரே! ஆனால் அந்த 'மதமாற்ற அபாயத்தைத்" தடுக்க அப்போதும் ஒரு பாண்டியன்-திருப் பாண்டியன் இருந்தான். படை எடுத்து வந்தான். போர் நிகழ்ந்தது. அந்தப் போரில் முஸ்லிம் பெரியவர் (சஹீது) வீர மரணம் அடைந்தார். அவரை ஏர்வாடியில் அடக்கம் செய்தார்கள்.

அவரைக் கொன்று அடக்கம் செய்ததால் மதமாற்ற அபாயம் நிகழாமல் ஓய்ந்துவிட்டதா? இல்லை! அதற்குப் பிறகுதான் மதமாற்ற அபாயம் அதிகமானது! இஸ்லாம் மார்க்கத்தில் ஆயிரக்கணக்கானோர் சேர்ந்தார்கள். மதமாற்ற அபாயத்தை படை பட்டாளம் படைத்த அந்தக் காலத்துப் பாண்டியனால் தடுக்க முடியவில்லை!

## செயிண்ட் தாமஸ்

சென்னைக்கு வருவோர் செயிண்ட்தாமஸ் ஆலயம் பரங்கிமலையில் இருப்பதைப் பார்க்கலாம். அந்த 'செயிண்ட் தாமஸ்' வரலாறு என்ன? கிறிஸ்துவ மதத்தைப் பரப்ப தமிழ்நாடு வந்தார் செயிண்ட். அதை விரும்பாதவர்கள் - மதமாற்ற அபாயத்தைத் தடுக்க நினைத்தார்கள் என்ன செய்தார்கள்? செயிண்ட் தாமஸைக் கொலைக் கருவிகளால் சரமாரியாகக் குத்தினார்கள். சென்னை சின்னமலையி லிருந்து செயிண்ட் தாமஸ் குத்தப்பட்ட காயத் தோடும் ரத்தத்தோடும் பரங்கிமலை நோக்கி ஓடினார். பரங்கிமலையில் இறந்தார்!

## நாகாலாந்து போவாரா?

வடநாட்டிலுள்ள நாகாலாந்து - மிஜோராம் - அருணாசலப் பிரதேசம் ஆகிய பகுதி களையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அந்த மலை நாடுகளிலும்-தமிழ் நாட்டிலுள்ள மலைப்பகுதிகளிலும் மக்களை கிறிஸ்துவர் ஆக்கும் அபாயம் நிகழ்வதாக பாராளுமன்றத் திலேயே பலர் குரலெழுப்பினர். இதெல்லாம் பொய்-தமிழ்நாட்டில் யாருமே கிறிஸ்துவராக இந்தத் தலைமுறையில் மாறவில்லை-கூறிவிட முடியுமா? கூட்டம் கூட்டமாக கிறிஸ்துவர் ஆவது மட்டுமல்ல! புகழ் பெற்ற தனிநபர்களும் கிறிஸ்துவர்கள் ஆகியிருக்கிறார்கள்.

வெங்கிடாசலபதி என்ற அரசாங்க அதிகாரி கிறிஸ்துவராக மாறி அதே பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார். அண்ணாதுரை என்ற அரசாங்க அதிகாரி 'ஜெவோஹா விட்னஸ்' என்ற கிறிஸ்துவ அமைப்பை வைத்துக்கொண்டு நாள்தோறும் இந்துக்களை கிறிஸ்துவர் ஆக்குகிறார். முன்னாள் அமைச்சர் காளிமுத்து நிர்மலா என்ற பெண்ணை மணப்பதற்கு ''பால்ராஜ்" என்ற கிறிஸ்துவரானார். அண்மை யில்கூட சினிமா நடிகர் ஏ.வி.எம். ராஜன் கிறிஸ்து வராக மாறி கிறிஸ்துவ மதப் பிரச்சாரம் செய் கிறார். பல இந்துக்கள் கிறிஸ்துவப் பெண்களைக் காதலித்து - மணம் புரிந்து கொள்வதற்காக தினந்தோறும் கிறிஸ்துவ மதத்தில் சேர்கிறார்களே!

## அம்பேத்கர் கூறியது என்ன?

மதமாற்றம் என்பது அபாயம் என்று எந்தச் சமூக உணர்வுள்ள-சூடு-சொரணையுள்ள எந்த ஆதிதிராவிட-தலீத் இன அறிஞரும் கூற வில்லை! அறிவு வெளிச்சம் இல்லாத அந்தக் காலத்தில்-கொத்தடிமைகளாய்-மையாய்-



ஆமையாய்-பொட்டுப் பூச்சிகளாய்-புன்மைத் தேரைகளாய் 'தீண்டத்தகாதவராய் இருப்பது தவறு தலைவிதி" என்று கூனிக் குறுகி இந்த தலீத் சமூகம் இருந்தபோது அதற்காக வாதாடிப் போராடிய அந்த அம்பேத்கர் மதமாற்றம் பற்றி ஒரு பெரிய புத்தகமே எழுதியுள்ளார்.

"தனி ஒருவனை அங்கீகரிக்காத ஒரு மதத்தை நான் ஏற்பதாயில்லை. இந்து மதம் தனி ஒருவனின் முக்கியத்துவத்தை அங்கீ கரிக்கவில்லை. ஆதலால் இந்து மதத்தை நான் ஏற்கவில்லை. இந்து மதத்தில் ஒரு இனம் மட்டும் படிக்கப் பிறந்தவர்களாகவும் மற்றொரு இனம் ஆயுதங்களைப் பயன்படுத்தவும், மற்றொரு இனம் வணிகத் தொழில் நடத்தவும், நான்காவது இனம் இவர்களுக்கு அடிமைத் தொழில் மட்டுமே செய்யவேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ள ஒரு மதத்தை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

எல்லோருக்கும் கல்வியும் ஆயுதங்களும் தேவைப்படு கிறது. இவற்றினை மறந்துவிட்டு ஒருசிலர் படிக்கவும். மிகப் பலர் இருளில் ஆழ்ந்து கிடக்கவும் செய்வது மதமாகாது. மக்களை நிரந்தர அறிவிலிகளாக நீடித்திருக்கச் செய்யும் சூழ்ச்சியே ஆகும். ஒரு சிலரை ஆயுதமேந்த அனுமதித்து மிகப்பலரை ஆயுதமேந்தாமல் தடைசெய்யும் மதம்-மதமா காது. மக்களை மதத்தின் பெயரால் நிரந்தர அடிமைகளாக நீடித்திருக்கச் செய்யும் சூழ்ச்சியேயாகும். ஒரு சிலரே சொத் துக்களை வாங்கவும். சேர்த்துக் கொள்ளவும் வழியமைத்து, மிகப்பலரை சார்ந்திருக்கச் செய்யும் மதம் - மதமாகாது.

இந்து மதத்தின் பெயரால் சுய பலத்தைப் பெருக்கிக் கொள்ளும் ஒரு சூழ்ச்சியேயாகும் கிறிஸ்துவத்திலும் இஸ்லாத்திலும் சொல்லப் பட்டிருக்கிற சமத்துவம் பற்றிய தத்துவம், ஒருவரின் ஆடை, பொருள், அறிவு ஆகிய வெளித் தோற்றங்களுடன் எந்தவித சம்பந்த மில்லாதிருக்கிறது. இவ்விரு மதங்களும் மனிதாபிமானத்தை தம் மதங்களின் மூலாதாரமாகக் கருதுகின்றன! ஒருவரும் மற்றவரை அவமதிக்கக்கூடாது ஒருவர் மற்றவரை சமத்துவமின்றி நடத்தக்கூடாது. மனிதாபிமானமே எல்லோராலும் மதிக்கப் படவேண்டும் என்று இவைகள் போதிக்கின்றன. இவ்வித போதனைகள் இந்து மதத்தினருக்கு வேண்டும். ஒரு மனிதனின் மனிதாபிமான உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத மதத்தால் என்ன பயன்? அதிலே தொடர்ந்து தொங்கிக் கொண்டிருப்பதால் நன்மை என்ன?

நான் சொல்வேன், உலகெங்கிலும் இந்துக் களிடையே நிலவுகின்ற இவ்விதக் கொடுமை போன்று வேறெங்கும் காணமுடியாதென்பேன். இந்த இந்துக்கள் மிகக்கொடுமையான மனிதர்களின் வரிசையிலே இடம்பெற வேண்டியவர்கள்.

இவர்களுடைய கரிசனையும். வெளிக்காரி யங்களும் இரு மாறுபட்ட துருவங்கள். இவர்கள் நாவிலே ராமனையும் கைகளிலே கூரிய வாளையும் வைத்திருப்பார்கள். யோகி களைப் போன்று பேசுவார்கள். இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான் என்பார்கள். ஆனால் விலங்கிலும் கேவலமாக மனிதனை நடத்துவார்கள் இப்படி கருதுகின்றவர்களோடு சேர்ந்திருக்காதீர்கள். இவர்கள் மிகக் கொடிய வஞ்சனையாளர்கள்.

எறும்பிற்கு சர்க்கரை உணவிடுவார்கள். ஆனால் இங்குள்ள மனிதர்கள் குடிப்பதற்கு நீரெடுக்கத் தடை விதிப்பார்கள் இவர்களோடு தொடர்பு கொண்டிருக்காதீர்கள். அவருடைய தொடர்பு உங்கள் மீது என்னென்ன விளைவு களை உண்டாக்கி இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? உங்களுக்கென்று ஒரு

அந்தஸ்தே இல்லை! உங்கள் தன்மானத்தை இழந்தீர்கள் ஜாதி இந்துக்கள் உங்களை மதிப்பதேயில்லை என்பது உண்மையில் ஒரு பாதியாகும் இந்துக்களின் பார்வையிலே மட்டும் நாம் தாழ்ந்தவர்களல்ல இந்தியா முழுவதிலும் நாம் தாழ்த்தப்பட்டவர்கள் ஏனென்றால் ஜாதி இந்துக்கள் நமக்குத் தாழ்ந்த நிலையை அளித்திருக்கிறார்கள். இந்த மானங்கெட்ட நிலையிலிருந்து நீங்கள் விடுபட்டு அசுத்தங்களில்லாத பயனுள்ள பெற்றற்கரிய வாழ் நிலையை அடைய வேண்டு மானால் அதற்கு ஒரே வழிதான் உண்டு.

உங்களை பின்னிப் பிணைத்துள்ள இந்து மதச் சங்கிலியை, அறுத்தெறிந்து விட்டு வெளியேறுவது ஒன்றே சிறந்த வழி என்று நான் உறுதியாகக் கூற முடியும்.

[ஏன் இந்த மதமாற்றம்?-என்ற நூலிலிருந்து)

அம்பேத்கர் இத்தகு கருத்துக்களை எழுதியவரும் பேசிய வருமாக மட்டும் இல்லை. இலட்சக்கணக்கான தலித்துகளுடன் - தாழ்த்தப்பட்டோருடன் புத்த மதத்தில் சேர்ந்தார். லீத்த மதத்தில் சேர்ந்த அம்பேத்கர் தான் இந்த நூற்றாண்டில் மதமாற்றம் என்கிற மிகப்பெரிய அபாயத்தை நிகழ்த்திய வரி! உடல் நோகும் என்று மேட்டுக்குடியினர் அஞ்சுகின்ற உடல் உழைப்பு வேலைகளை பரம்பரையாகச் செய்து வருகின்ற அந்த வியர்வை மண மேனியரை சாக்கடை தூக்குவது முதல் பிணம் தூக்குவது வரை ஒதுக்கப்பட்ட தொழில் அனைத்தையும் செய்கின்ற அவர்களை- பழைய சமூகம் எப்படி வைத்திருக்கிறது?

ஊருக்கு வெளியே வைத்திருக்கிறது. அறியாமையில் ஆழ்த்தி இருக்கிறது. இழிவுச் சொற்களால்-கொடூரசெயல்களால்நாள்தோறும் அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறது. சமூக இழிவு மட்டுமா? புயல் வெள்ளம் வந்தாலும் இவர்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள்; தீ விபத்து என்றாலும் கருகிச் சாவது இவர்களே! கட்சிச் சண்டை என்றாலும் காயம்பட்டு இறப்பது இவர்களே! அரசுச் சலுகைகள் - ஒதுக்கீடுகள் இவை தரப்பட்டபோதிலும் இந்த இழிவுகள் இருக்கவே செய்கின்றன. ஏன் இந்த இழிவுகள்? பழைய மதத்தின் வேதங்கள். இப்படி இழிவு செய்வதை ஆதரிக்கின்றன. அம்பேத்கர் எடுத்துக் காட்டுகிறார்.

* சூத்திரர்கள் பிற குலப்பெண்களைக் கற்பழித்தால் மரண தண்டனை!

(மனுதர்மம்)

* பிராமணர்களுக்குக் கறக்கப்படுகின்ற பாலை சூத்திரன் குடிக்கக்கூடாது.

(மைத்ராயானி சம்ஹிதை 3:8:3)

* யாகம் நடக்கும்போது சூத்திரன் அந்த இடத்தில் இருக்கக்கூடாது.

(சத்பாத பிரமானம் 1:1: 10)

* சூத்திரன் எப்போதும் இன்னொருவனின் வேலையாளாக இருக்கவேண்டும்.

(ஆத்ரேய பிரமாணம் 29:4)

* இட்ட பணியை ஆற்றுவது சூத்திரனின் தர்மம்! (கீதை 18 : 44)

சமூகத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படுகின்ற அவமானங்களின் ஊற்றுக்காலே இந்த வேதங்களும்.

-சாஸ்திரங்களும்தான்,''

இவ்விதம் உண்மையான அடிப்படையைக் கண்டுபிடித் துக் கூறிய டாக்டர். அம்பேத்கர்- நடைமுறையில் உவன ஒரு ரகசியத்தையும் கூறினார். நாம் தாழ்த்தப்பட்டவர் என்று தெரிந்ததுமே இந்துக்களுக்கு வாந்தி வருவது போல் ஒரு உணர்வு ஏற்படுகிறது" இதுதான் உண்மை! நிரந்தர உண்மை! இப்படிப்பட்டவர் களுடன் சேர்ந்து வாழுங்கள்; மதம் மாறாதே! என்று கூறுவோர் வஞ்சக நெஞ்சினரே! எனக் கூறினார் டாக்டர் அம்பேத்கர்!

தாழ்த்தப்பட்டோர் தமிழகத்தில் அரசாங்கத் திடம் தருகிற முதல் மனுவே-எங்கள் உறவினர் இறந்துவிட்டால் அவரைத் தூக்கிக்கொண்டு போகிற...சுடுகாட்டுப் பாதை வேண்டும்- என்பதே! செத்தால் சுடுகாடு செல்லக்கூட பாதை தர மறுக்கின்ற பழைய மதத்தோடு சேர்ந்து வாழுங்கள் என்று கூறுகிறவர்களுக்கு உள்ளம் இருக்கிறதா? அதில் ஈரம் இருக்கிறதா? அரசாங்கம் கட்டிய பாலத்தின் மீது ஆதி திராவிடர் பிணம் போகக்கூடாது என்று கிளர்ச்சி நடந்து துப்பாக்கிச் சூடும் நிகழ்ந்தது வடநாட்டிலும் தென்னாட்டி லும்



vaigarai velicham official

தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல் நடத்தி பிணங்களைக் குவித்த யாராவது தூக்கு மேடையில் ஏற்றப்பட்டு தண்டனை அளிக்கப் பட்டது உண்டா?

எனவே-பழைய மதம்-ஒரு வஞ்சக வலை! கொலை பாதக மந்திரம்! சுரண்டல் சூழ்ச்சித் திட்டம்! அடங்கி வாழு! இல்லையேல் அழிந்து போ!-எனச் சபிக்கின்ற சண்டாளக் கூட்டம்! இதிலிருந்து விடுபட்டு-சங்கிலிகளை அறுத்துக் கொண்டு - சுதந்திரப் பறவைகளாய்ப் பறக்க நினைப்பதா-அபாயம்? இஸ்லாம் மார்க்கத்தில் சேர்வது தான் இந்த இன இழிவைப் போக்கும்" என்று நாம் கூற வில்லை நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே இந்த நாட்டில் சமூகப் புரட்சியை நிகழ்த்திய பெரியார் கூறினார்:

டாக்டர் அம்பேத்கர் இப்போதைக்கு வெற்றி பெற்றாலும் இந்த ஆவேசம் அடங்கிய வுடன் அவர் இந்து என்று சொல்லிக் கொள்வாரே யானால் மறுபடியும் அவர் பஞ்சமர் பட்டியலில் சேர்க்கப்பட்டு விடுவார். மதம் இலாமல் மக்கள் வாழமுடியாது. அதாவது நான் சொல்லும் மதம் கடவுளுக்கும் மக்களுக்கும் சம்பந்தமும் மோட்சமும் விதியும், மன்னிப் பும், சன்மானமும், மேல் லோகத்தில் அளிப்பது என்கிற மதம் அல்ல மற்றதுவென்றால், மனித னுக்கு மனிதன் மரியாதையாய் (பணிவாய்) அன்பாய், பக்தியாய், ஒழுக்க மாய், உதவியாய் வாழும் கொள்கை. உங்களுக்குப் புரிவதற் காக மதம் என்ற பழக்க வார்த்தையில் சொல்லுகிறேன். இதைச் சமுதாயக் கொள்கை என்று சொல்ல எனக்கு இஷ்டம் இதை நீங்கள் மதம் என்று சொல்லவேண்டும் என்றாலும் ஆட்சேபிக்கவில்லை, என்றார் பெரியார்.

இப்படிப்பட்ட "மதம்" இல்லாமல் மனிதன் சமுதாயத்தில் வாழ்வது சங்கடம்தான்! ஆகையால் இந்த நாட்டில் இந்த கொள்கையின் பேரால் ஏற்கனவே ஒன்றுபட்டு வாழும் 10 கோடி மக்களுடன் நாம் திராவிடர்கள் 4 கோடி பேர்களில் குறைந்தது தமிழர் 2 கோடிப்பேர் ஒரு கொள்கையினராய் வாழ்ந்து மானம் பெற்று; ஈனம் ஒழித்து மனிதத் தன்மை உரிமையுடன் வாழ்ந்தால் யாருக்கு என்ன நஷ்டம்? என்ன இழிவு? என்று கேட்கிறேன். அல்லது இந்தப் பார்ப்பன அட்டூழியத்துக்கு யாராவது வேறு மருந்து சொல்லட்டும்... நான் கேட்கிறேன் பல



நாட்டு முஸ்லிம்கள் அனுசரிக்கும் இஸ்லாமும் தெரியும். நாட்டு இஷ்டம் மெஜாரிட்டி இஷ்டம் தானே தவிர. இந்து மதம்போல் மூன்றே அரைக்கால் பார்ப்பனர் 93 பேர்களை எட்டி நில். நீ படிக்க முடியாது. நீ சூத்திரன், வேசி மகன், உனக்கு சரி சமத்துவம் இலலை என்பது அல்ல இஸ்லாம். அதாவது பணிவையும், சாந்தியையும் உண்மை சகோதரத்துவத்தையும் கொள்கையாய்க் கொண்ட மார்க்கம். மற்றது எது எப்படியிருந்தாலும் ஒற்றுமை, கட்டுப் பாடு கொண்ட மார்க்கம்-இதை யாரும் மறுக்க முடியாது,

நான் இஸ்லாத்துக்கு வக்காலத்துப் பேசவில்லை. பிரச் சாரம் செய்யவில்லை. இது உண்மை! உண்மை! முஸ்லிம் களிடம் எனக்கு உங்களை எல்லாம்விட அளவு கடந்த அன்போ. நேசமோ, நம்பிக்கையோ. கூட்டுறவோ கிடை யாது. ஆனால், பார்ப்பனீயம். இந்து என்னும் பொல்லாத கடுமையான. கோரமான பாம்பைக் கொல்லுவதற்கு அதன் விஷத்தன்மை பாதகத்தில் இருந்து விலகுவதற்கு இதுதான் மருந்து, இஸ்லாத்தைச் சரியாய் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் இங்கிலாந்து, ஈஜிப்ட். துருக்கி சென்று வாருங்கள் வரப் போகும் சுயராஜ்யம் நமக்கு மகாமகாக் கேடானதாக விருக்கும். திராவிடர்கள் 100க்கு 75 பேர்கள் அனுமார்களாக, விபீஷணர்களாக, வாழுவதுடன், தோழர் அவனாசிலிங்கம் போன்ற மற்றும் பல திராவிடர்கள், பண்டிதர்கள், சர்கள் தங்கள் பின்னால் மணிகட்டின வால் ஒட்ட வைத்துக்கொண்டு ராம பஜனை (ஆரியர் பஜனை) செய்து ஆரியன் பின்திரிந்து, நம்மை நசுக்கப் போகிறார்கள்.

இது என்ன மானக்கேடு! என்னுடைய நாட்டில் என் வரிப் பணத்தில், எனக்காக நடக்கிற ஆட்சியில் எனக்கு பிரதிநிதித்துவம் இல்லை. எனக்கு விகித உத்தியோகமில்லையென்றால்



எனக்கு மணிதத்தன்மை இல்லை என்றால் இதற்காக ஆரியனுக்கு நான் விண்ணப்பம் போடுவதும் விழுந்து கும்பிடுவதும், கெஞ்சிக் கூத்தாடுவதும் மானமுள்ள தன்மையா என்று கேட்கிறேன். யாரோ சில துரோகிகள் சுயநல வஞ்சகர்கள் மானம் ஈனம் இல்லாமல் தங்களைப் பார்ப்பன அடிமை (இந்து) என்று சொல்லிக்கொண்டால் நாமும் இந்து-அடியேன். தாசன், நாய்குட்டி, அடிமை என்று சொல்லிக் கொள்ளுவதா? என்று கேட்கிறேன் இழிவு நீங்க இஸ்லாம்" (நான் இந்து வல்ல) என்கிற மந்திரம்தான் நம்மை மனிதராக்க முடியும். இதை நான் இன்று சொல்லவில்லை. 1919,1920 முதல் இன்றுவரை 18 வருஷங் களாகச் சொல்லி வருகிறேன். எனக்கு ஒன்றும் செல்வாக்கு குறைந்து போகவில்லை. இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், இழிவு நீங்க வேறு மருந்து இல்லை. இந்த வியாதியை நீக்கும் முயற்சியில் இதுவரை எந்தப் பெரிய வைத்தியனுடைய எத்த மருந்தும் தோல்வியையே அடைந்து விட்டது.

என் அன்புள்ள அருமைத் திராவிடச் சகோதரனே இதற்கு இஸ்லாத்தைத் தவிர ஒரு மருந்து சொல். இப்போதே கொல்லாதே. வீடுபோய் தமிழ்ப் பெரியார்கள் சர் பெரியார்கள். பண்டிதப் பெரியார்கள். ஆங்கிலம் கற்றுப் பதவி வகிக்கும் வக்கீல், உத்தியோகப் பெரி யார்கள் முதலானவர்களுடன் கலந்து, 'கட்டி அழுது முடிவுகண்டு நாளைக்குச் சொல். இதுவரை கல்லுப் போடாமல், கலகம் செய் யாமல் பேச இடங்கொடுத்துப் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த உங்களுக்கு 100 இஸ்லாம். (பெரியார் பேச்சு முடிவுற்றதும் பெருத்த நீண்ட கைதட்டல்).

### என்ன அபாயம்?

மதம் மாறினால் விண் இடிந்து மண் மீது விழுமா? கடல் வற்றிக் கருவாடு மிதக்குமோ? மாதம் மும்மாரி பொழியாமல் போய்விடுமா? பயிர் பச்சை வாடி வரண்டு சாவியாகிப் போகுமா? திடீர் திடீர் என்று தீப்பற்றி உலகே சாம்பல் ஆகுமா? ஆண் பெண்ணுக்கு ஆறுகால் ஐந்து தலை முளைக்குமா? பிள்ளை பிறக்காமல் தசைக் குழவிகளே பிறக்குமா? என்ன ஐயா அபாயம்? ஒரு அபாயம் உண்டு! சில தலைவர்களின் அரசியல் எலக்கடைகள் இழுத்துச் சாற்றப்படும்! அரசியல் பந்தாக்கள்-பதாகைகள் - பாசாங்கு பம்மாத்துக் கொட்டங்கள் அடங்கிவிடும்! வேறென்ன அபாயம் வந்து இருக்கிறது?

- அடுத்த இதழில்...





vaigarai velicham official

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் | - ரூ.350.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹிதீன்களின் தியாக வரலாறு | - ரூ.150.00 |
| 3. | சாதி ஒழிந்தது | - ரூ.50.00 |
| 4. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் | - ரூ.10.00 |
| 5. | டெல்லி குண்டுவெடிப்புகள் | - ரூ.10.00 |
| 6. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு | - ரூ.60.00 |
| 7. | மால்கம்-X | - ரூ.120.00 |
| 8. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம் | - ரூ.20.00 |
| 9. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள் | - ரூ.40.00 |
| 10. | கர்கரேயை கொலை செய்தது யார்? | - ரூ.450.00 |
| 11. | சிந்திப்பீர் செயல்படுவீர் | - ரூ.15.00 |
| 12. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம் | - ரூ.40.00 |
| 13. | சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள் | - ரூ.30.00 |
| 14. | நாம் பிரிந்து விடவேண்டாம் | - ரூ.350.00 |
| 15. | தாலிபானின் பிடியில் | - ரூ.150.00 |
| 16. | தீண்டாமைக்குத் தீர்வு | - ரூ.30.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு | - ரூ.110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள் | - ரூ.200.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம், | - ரூ.130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள் | - ரூ.70.00 |
| 21. | எது முதலில்? | - ரூ.450.00 |
| 22. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? | - ரூ.20.00 |

| | | |
|---|---|---|
| 23. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? | - ரூ.30.00 |
| 24. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் | - ரூ.15.00 |
| 25. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும் | - ரூ.50.00 |
| 26. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | - ரூ.40.00 |
| 27. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | - ரூ.30.00 |
| 28. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | - ரூ.50.00 |
| 29. | இஸ்லாமும் பெண்களும் | - ரூ.60.00 |
| 30. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | - ரூ.70.00 |
| 31. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | - ரூ.100.00 |
| 32. | திருக்குர்ஆன் கூறும் பொறுமை | - ரூ.80.00 |
| 33. | 26/11- விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | - ரூ.220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | - ரூ.20.00 |
| 35. | முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம் | - ரூ.10.00 |
| 36. | நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? | - ரூ.10.00 |
| 37. | குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? சுவாமி அசினாந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் | - ரூ.25.00 |
| 38. | இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? | - ரூ.20.00 |
| 39. | கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான் | - ரூ.25.00 |
| 40. | கூரியூர் ஜின்னா ஷஹீத் | - ரூ.60.00 |
| 41. | முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும் | - ரூ.20.00 |
| 42. | இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு | - ரூ.30.00 |
| 43. | சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம் காந்திஜி கொலை ஏன்? எப்படி? | - ரூ.30.00 |
| 44. | பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் | - ரூ.400.00 |
| 45. | குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள் | - ரூ.150.00 |
| 46. | இஸ்லாம் ஒன்றே வழி! | - ரூ.120.00 |
| 47. | இஸ்லாம் உங்கள் பார்வைக்கு | - ரூ.400.00 |
| 48. | முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன? | - ரூ.300.00 |

| | |
|---|---|
| 49. இந்தியாவின் இரகசியச் சித்திரவதைக் கூடங்கள் | - ரூ.25.00 |
| 50. இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம் | - ரூ.100.00 |
| 51. முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி | - ரூ.20.00 |
| 52. நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம் | - ரூ.50.00 |
| 53. பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி | - ரூ.50.00 |
| 54. அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும் | - ரூ.40.00 |
| 55. எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர் | - ரூ.60.00 |
| 56. சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை | - ரூ.60.00 |
| 57. பா.ரஞ்சித் அவர்களின் உரையும்<br>ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும் | - ரூ.25.00 |
| 58. முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம்<br>இழுத்துக் கொண்டிருப்பது யார் | - ரூ.20.00 |
| 59. அயா சோபியா உருவான வரலாறு | - ரூ.50.00 |
| 60. வரலாற்றுப் பாடத்தில் இருந்து நீக்கப்பட வேண்டியவரா அவுரங்கசீப் | - ரூ.80 |
| 61. ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்துவிடும் | - ரூ.15.00 |
| 62. 9/11 யாரால்? யாரால்? | - ரூ.40.00 |
| 63. நாளந்தா பல்கலைக்கழகத்தை எரித்தது யார்? | - ரூ.50.00 |
| 64. சுல்தான் நூருத்தீன் ஸெங்கி (ரஹ்) | - ரூ.300.00 |
| 65. இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் | - ரூ.480.00 |
| 66. இஸ்லாமிய அரசு - அரசின் பணிகள் குடிமக்களின் உரிமைகள் | - ரூ.120.00 |
| 67. யூத, அமெரிக்க தீவிரவாதமும் இஸ்ரேலின் உருவாக்கமும் | - ரூ.15.00 |
| 68. இஸ்லாத்தில் இறை நம்பிக்கை | - ரூ.350.00 |
| 69. கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்வின் சாதனைகள் | - ரூ.80.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

| | |
|---|---|
| 70. சாதி ஒழிந்தது | - ரூ.50.00 |

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | |
|---|---|
| 71. சாதி ஒழிந்தது | - ரூ.60.00 |
| 72. புறப்படு நீயும் இஸ்லாத்தை நோக்கி | - ரூ.30.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 1. | கோவை கலவரத்தில் எனது சாட்சியம் | - ரூ.100.00 |
| 2. | மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள் | - ரூ.120.00 |
| 3. | குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் | - ரூ.170.00 |
| 4. | நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா? | - ரூ.140.00 |
| 5. | பலி கடாக்கள் | - ரூ.300.00 |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | **- Rs.50.00** |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | **- Rs.695.00** |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | **- Rs.350.00** |
| 4. | **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | **- Rs.350.00** |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | **- Rs.300.00** |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | **- Rs.275.00** |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | **- Rs.60.00** |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | **- Rs.280.00** |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | **- Rs.25.00** |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | **- Rs.150.00** |
| 11. | **Innocent Prisoners** | **- Rs.495.00** |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | **- Rs.350.00** |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | **- Rs.300.00** |

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002